
# புதிய ஜனநாயகம்

நவம்பர் 2015
ரூ.10.00



## "மூடு டாஸ்மாக்கை!" கோமளவல்லியை அச்சுறுத்தும் கலகக்குரல்!

# திரும்பிய பக்கமெல்லாம் தேசத்துரோகிகள்!

டாஸ்மாக்கிற்கெதிராக இரு பாடல்களை இயற்றிப் பாடியதற்காக ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் பாடகர் தோழர் கோவன் தேசத் துரோக வழக்கில் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர் மட்டுமின்றி, இந்தப் பாடலை வெளியிட்ட வினவு தளத்தின் பொறுப்பாளரும் மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் மாநில இணைச் செயலருமான தோழர் காளியப்பன் மீதும் தேசத் துரோக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

இந்த அடக்குமுறைகளுக்கு எதிராகத் தமிழக அளவிலும் தேசிய அளவிலும் பரவலாக கண்டனக் குரல்கள் எழுந்திருக்கின்றன. தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி, தி.மு.க.வின் பொருளாளர் ஸ்டாலின், மகளிர் அணி செயலர் கனிமொழி, ம.தி.மு.க.வின் பொதுச்செயலர் வை.கோ., தே.மு.தி.க.வின் தலைவர் விஜயகாந்த்., வி.சி.கட்சியின் பொதுச்செயலர் தொல்.திருமாவளவன், காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் மற்றும் சி.பி.ஐ., சி.பி.எம்., பாட்டாளி மக்கள் கட்சி உள்ளிட்டுப் பல்வேறு கட்சித் தலைவர்களும் தங்களது கண்டனத்தைப் பதிவு செய்திருக்கிறார்கள்.

ஓட்டுக் கட்சிகள் மட்டுமின்றி, அறிவுத்துறையினரும் ஊடகங்களும் சமூக வலைத்தள செயற்பாட்டாளர்களும் இந்தக் கைதைக் கடுமையாக கண்டித்து வருகின்றனர்.


''காலனியத் தன்மை கொண்ட இச்சட்டம் முற்று முழுதாக வெட்டியெறியப் பட வேண்டிய காலம் வந்திருக்கிறது'' எனக் குறிப்பிட்டு, கோவன் கைதை கண்டித்து தலையங்கம் எழுதியிருக்கிறது தி இந்து நாளிதழ். அமெரிக்காவில் இருந்து வெளியாகும் வாஷிங்டன் போஸ்ட்; பாகிஸ்தானிலிருந்து வெளிவரும் டான் உள்ளிட்டு அயல்நாடுகளின் ஊடகங்களும், ஆம்னெஸ்டி இன்டர்நேஷனல், மனித உரிமைக் கண்காணிப்பகம் உள்ளிட்ட சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் கோவன் கைதைக் கண்டித்திருக்கின்றன. கோவனை விடுதலை செய்யக் கோரி இலண்டனில் உள்ள இந்திய தூதரகத்தின் முன்பு நவம்பர் 9-ஆம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக அறிவித்திருக்கிறது,''பறை - விடுதலைக்கான குரல்'' அமைப்பு.



முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி மார்கண்டேய கட்ஜு, ஏற்கெனவே தனது முகநூலில் கோவன் கைதைக் கண்டித்திருக்கிறார். தற்பொழுது, இது தொடர்பாக தந்தி டி.வி.க்கு அளித்துள்ள பேட்டியில், ''வழக்கை ரத்து செய்து, கோவனை விடுவிக்க வேண்டும்; நடந்த தவறுக்காக ஜெயலலிதா கோவனிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்; இந்த கைது நடவடிக்கையில் ஈடுபட்ட போலீசு அதிகாரிகள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும்.'' என கூறியிருக்கிறார்.

இவைதவிர, கார்டூனிஸ்ட் பாலா, மும்பை கார்டூனிஸ்ட் அசிம் திரிவேதி, ஆர்.பிரசாத் உள்ளிட்ட அரசியல் கேலிச்சித்திர ஓவியர்கள் தங்களது ஓவியங்களால் கண்டனத்தை பதிவு செய்திருக்கின்றனர்.

வடக்கே : புனிதப் பசுதான் எங்கள் தாய்!
தெற்கே : அம்மாதான் எங்கள் புனிதப் பசு!




ஆர்.பிரசாத் வரைந்துள்ள கேலிச்சித்திரம்.

இவற்றுக்கப்பால், பேஸ்புக், டிவிட்டர் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் இணையதள செயற்பாட்டாளர்கள் பலரும் அழுத்தமான கண்டனத்தைப் பதிவு செய்திருக்கின்றனர். ஜெயா கும்பலின் ஆணவத்தையும், பாசிசத் திமிரையும் எள்ளி நகையாடியிருக்கின்றனர். அவர்களின் மொழியிலே சொல்வதென்றால், ஜெ. கும்பலைக் கழுவி கழுவி ஊற்றி விட்டனர். பேஸ்புக்கில் பலரது முகப்பு பக்கங்களில் தோழர் கோவனின் புகைப்படம்தான் இடம்பெற்றிருக்கிறது. ''கோவன் செய்தது தேசத்துரோகம் என்றால் அதே தேசத்துரோகக் குற்றத்தை நாங்களும் இழைக்கிறோம்; முடிந்தால் எங்களையும் கைது செய்!'' என்று நேரிடையாகவே சவால்விட்டுப் பதிவிட்டுள்ளனர். அவற்றுள் சிலவற்றை இங்கே தொகுத்து தருகிறோம்.

Gopalan TN: ஒரு தலைமுறையினைச் சீரழித்துக் கொண்டிருக்கும் இவ்வரசை சாடக்கூட ஜனநாயகத்தில் நமக்கு உரிமை இல்லையா என்ன?

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்...

# தேர்ந்தெடுக்கப்படாதவர்களின் கொடுங்கோன்மையும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் கொடுங்கோன்மையும்!

புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 31 இதழ்: 1
நவம்பர் 2015

உள்நாடு
தனி இதழ்: ரூ.10.00
ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு: முகிலன்

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561

''தேர்ந்தெடுக்கப்படாதவர்களின் கொடுங்கோன்மை!'' - மோடி அரசின் ''தேசிய நீதித்துறை நியமன ஆணையச் சட்டத்தை'' ரத்து செய்த உச்சநீதிமன்ற நீதிபதிகளைப் பற்றி நிதியமைச்சர் அருண் ஜெட்லியின் விமரிசனம் இது. நீதிபதிகளின் அதிகார வரம்பை மட்டுமின்றி, அருகதையையும் கேள்விக்குள்ளாக்கி அருண் ஜெட்லி விமரிசித்துள்ள போதிலும் உச்ச நீதிமன்றம் அடி வாங்காதது போல நடித்து நிலைமையைச் சமாளித்துக் கொண்டது. ஆனால், நவம்பர் 5 - ஆம் தேதியன்று நீதித்துறையை அழிக்க முயற்சி நடப்பதாக மேற்கூறிய தீர்ப்பை வழங்கிய அமர்வின் மூத்த நீதிபதி கேஹர் குற்றம் சாட்ட, உடனே ஒரு பிரிவு வழக்கறிஞர்கள் (பா.ஜ.க.வினர்) நீதிபதிகளை எதிர்த்து அங்கேயே கூச்சலிட்டதாகத் தொலைக்காட்சி செய்திகள் கூறின.


உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் ஏற்கெனவே நிலவி வரும் முறைகேடுகள் தோற்றுவித்துள்ள அதிருப்தியைப் பயன்படுத்திக் கொண்டு, மொத்த நீதித்துறையையும் விழுங்கும் நோக்கத்துடன் பா.ஜ.க. அரசால் கொண்டு வரப்பட்ட, தேசிய நீதித்துறை நியமன ஆணையம் (NJAC), நீதித்துறையின் சுதந்திரத்தைப் பறிப்பதாகக் கூறி, உச்ச நீதிமன்றம் அதனை ரத்து செய்து அளித்த தீர்ப்பினால், ஆர்.எஸ்.எஸ். கும்பல் சகிக்கவொண்ணாத ஆத்திரம் கொண்டிருக்கிறது என்பதற்கான சான்றுகளே மேற்கண்ட சம்பவங்கள்.

நீதிபதி பதவிகளை ஆக்கிரமித்து, நீதிமன்ற வளாகங்களையே ஷாகாக்களாக மாற்றுவதற்கு சங்க பரிவாரம் தீட்டியிருந்த சதித்திட்டத்திற்கு இது ஒரு தற்காலிகப் பின்னடைவு. அதே நேரத்தில் உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற நீதிபதிகளைத் தனது நோக்கத்துக்கேற்ப ஆடவைக்க மோடி அரசால் முடியவில்லை என்றும் இதற்கு நாம் பொருள் கொண்டுவிடக்கூடாது.

அரசின் கல்வி, பண்பாட்டு நிறுவனங்கள் முதல் அதிகார வர்க்கம் வரையில் எல்லா நாற்காலிகளையும் பார்ப்பன பாசிஸ்டுகள் ஆக்கிரமித்துக் கொண்டுதான் வருகிறார்கள். அமித் ஷா, வன்சாரா போன்ற கொலைகாரர்கள் விடுதலை, குஜராத் படுகொலையில் மோடியின் பாத்திரம் குறித்த வழக்கை விசாரிக்கும் உயர் நீதிமன்ற நீதிபதி, மாயா கோத்னானிக்கு இரட்டை ஆயுள் தண்டனை வழங்கிய நீதிபதி ஜியோத்ஸ்னா யாக்னிக் ஆகியோருக்குக் கொலை மிரட்டல், தீஸ்தா சேதல்வாத் மீதான பொய்வழக்கு போன்ற பல சான்றுகள், மோடி அரசின் தாளத்திற்கு நீதிமன்றங்கள் ஆடத்தொடங்கி விட்டதைக் காட்டுகின்றன.

இருப்பினும் நாடு முழுவதும் உள்ள உயர் நீதிமன்றங்களில் காலியாக இருக்கும் சுமார் 384 நீதிபதி பதவிகளை விழுங்குவதற்கு மோடி அரசு போட்டிருந்த திட்டத்துக்கு இந்த தீர்ப்பு ஒரு முட்டுக்கட்டை போட்டிருக்கிறது.

நாடாளுமன்றம்-சட்டமன்றங்கள், நிர்வாக எந்திரம், நீதித்துறை ஆகிய ஜனநாயகத்தின் மூன்று தூண்களுக்கிடையில் தத்தம் அதிகார எல்லை குறித்து அவ்வப்போது மோதல் வெடிப்பதும் பின்னர் அவை தமக்குள் சமரசமாகிக் கொள்வதும் நாம் இதுவரை காணாத நிகழ்வுகள் அல்ல. நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் யாருடையது என்பதுதான் இந்தப் பிரச்சினையின் மையம் என்ற போதிலும், நீதித்துறையின் சுதந்திரத்திற்கும் பெரும்பான்மை மக்களின்



நிதியமைச்சர்
அருண் ஜெட்லி.

> நீதிபதி பதவிகளை ஆக்கிரமித்து, நீதிமன்ற வளாகங்களையே ஷாகாக்களாக மாற்றுவதற்கு சங்க பரிவாரம் தீட்டியிருந்த சதித்திட்டத்திற்குத் தற்காலிகப் பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற நீதிபதிகளைத் தனது நோக்கத்துக்கேற்ப ஆடவைக்க மோடி அரசால் முடியவில்லை என்றும் இதற்கு நாம் பொருள் கொண்டுவிடக்கூடாது.



தேசிய நீதித்துறை நியமண ஆணையச் சட்டத்தை ரத்து செய்து தீர்ப்பளித்த உச்ச நீதிமன்ற அமர்வின் மூத்த நீதிபதி கேஹர்

விருப்புக்கும் இடையிலான மோதலாக இது சித்தரிக்கப்படுகிறது.

• • •

1993-க்கு முன்பு வரையில் நீதிபதிகளை நியமிக்கும் முதன்மை அதிகாரம் அரசிடம்தான் இருந்தது. உயர்நீதிமன்ற, உச்ச நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பதற்கு முன்னர், தலைமை நீதிபதியை அரசு ''கலந்தாலோசித்துக் கொள்ள வேண்டும்'' என்று அரசமைப்புச்சட்டத்தில் கூறப்பட்டிருப்பதன் பொருள் 'ஒப்புதல் பெற வேண்டும்' என்பதுதான் - என்று இதற்கு 1993-இல் விளக்கமளித்தது உச்சநீதிமன்றம். அதனைத் தொடர்ந்து மூன்று உச்ச நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட கொலீஜியம், நீதிபதிகளைத் தெரிவு செய்தது. பின்னர் 1998-இல் அளிக்கப்பட்ட இன்னொரு தீர்ப்பின்படி இது ஐந்து நீதிபதிகள் கொண்ட கொலீஜியமாக மாற்றப்பட்டது. ''நமக்கு நாமே திட்டம்'' என்று கிண்டலாக அழைக்கப்படுகின்ற, நீதிபதிகளை நீதிபதிகளே நியமனம் செய்து கொள்ளும் இந்த முறை நீதித்துறை ஊழலின் அடிக்கொள்ளியாக இருந்து வருகிறது.

இதனை ரத்து செய்து நீதிபதிகளைத் தெரிவு செய்வதற்கான தேசிய ஆணைய மசோதாவை ஐ.மு.கூ. அரசு, 2013-இல் கொண்டு வந்தது. எனினும், அது நிறைவேறுவதற்கு முன்னரே மக்களவை கலைக்கப்பட்டுவிட்டது. 2014 மே மாதத்தில் பதவியேற்ற மோடி அரசு, ஆகஸ்டு மாதத்திலேயே நீதித்துறை நியமன ஆணைய மசோதாவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தது. சர்வகட்சி ஆதரவுடன் அது நிறைவேற்றப்பட்டு சட்டமானது.

''உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியுடன் இரு மூத்த நீதிபதிகள், மத்திய சட்ட அமைச்சர் மற்றும் இரண்டு பிரபல நபர்கள் - என 6 பேர் கொண்ட குழு நீதிபதிகளைத் தெரிவு செய்யும். பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், தலைமை நீதிபதி ஆகிய மூவரும் சேர்ந்து இரண்டு பிரபல நபர்களை முடிவு செய்வர். 6 பேர் கொண்ட இந்தக் குழுவில் எந்த இரண்டு பேர் ஆட்சேபம் தெரிவித்தாலும், குறிப்பிட்ட நபர் நீதிபதியாக நியமிக்கப்படுவதை தடுத்து நிறுத்தலாம்'' என்று கூறியது இச்சட்டம்.

இந்தச் சட்டத்தின் விளைவாக நீதிபதிகள் நியமனத்தில் உச்ச நீதிமன்றம் பெற்றிருந்த மேலாண்மை மிக்க அதிகாரம் ரத்து செய்யப்படும். அது மட்டுமின்றி, மற்றெல்லா நிறுவனங்களையும் ஆர்.எஸ்.எஸ்.-இன் கட்டுப்பாட்டில் கொண்டு வரும் மோடி அரசு, நீதித்துறை நியமனங்களையும் ஆர்.எஸ்.எஸ். -இன் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கான வாய்ப்பையும் இச்சட்டம் அளிக்கிறது. உளவுத்துறை மூலம் வதந்திகளைப் பரப்பி, கோபால் சுப்பிரமணியம் உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்படுவதைச் சதித்தனமான முறையில் தடுத்த மோடி அரசுக்கு, தனக்கு ஒவ்வாத யாரையும் நீதிபதியாக நியமிக்க முடியாமல் தடுப்பதற்கான அதிகாரத்தை இச்சட்டம் வழங்குகிறது.

கீழிருந்து மேல் வரை நீதித்துறையில் ஊழல் தலைவிரித்தாடுவதும், நீதிபதிகள் நியமனத்தில் நிலவும் அப்பட்டமான முறைகேடுகளும், இரகசியத்தன்மையும், மக்களுக்கு எந்த விதத்திலும் பதிலளிக்கத் தேவையில்லாத வகையில் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் சட்டப் பாதுகாப்பும், ஊழல் முதல் பாலியல் குற்றங்கள் வரையிலான எதற்கும் நீதிபதிகளைத் தண்டிக்கவியலாத நிலை நிலவுவதும், நீதித்துறைக்கு எதிராக உருவாக்கியிருக்கும் பொதுக்கருத்தின் துணை கொண்டுதான் இந்த சட்டத்தை மோடி அரசு நியாயப்படுத்திக் கொள்கிறது. ஆனால், ஊழல் நீதிபதிகளைத் தண்டிப்பதற்கான வழிமுறை உள்ளிட்ட எதையும் இந்த சட்டம் முன்வைக்கவில்லை. ஏனென்றால், நீதித்துறையைச் சீரணிப்பதுதான் மோடி அரசின் நோக்கமேயன்றி, அதனைச் சீரமைப்பது அல்ல. அவ்வாறு சீரமைப்பதும் இயலாது.

நீதித்துறையின் சீர்குலைவு என்பது இந்த மொத்த அரசமைப்பின் தோல்வியுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டது. கட்சிகள், அதிகார வர்க்கம் உள்ளிட்ட மற்றெல்லா நிறுவனங்களும் தோற்று அம்பலப்பட்டு நிற்கும் நிலையில், இந்த அரசமைப்பின் நம்பிக்கை நட்சத்திரமாக நீதித்துறை ஆளும் வர்க்கத்தால் சித்தரிக்கப்பட்டது. நீதித்துறையைக் கைப்பற்றுவது என்ற தங்களது உடனடி நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள உச்ச நீதிமன்றம் முட்டுக்கட்டை போட்டுவிட்டதனால், ஆத்திரம் கொண்டு தேர்ந்தெடுக்கப்படாதவர்களின் கொடுங்கோன்மை என்று நீதிபதிகளைப் பழிக்கிறார்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட கொடுங்கோலர்களான பார்ப்பன பாசிஸ்டுகள். அவமதிக்கட்டும். அவமதிக்கும் உரிமை அவர்களுக்கு மட்டும்தானே உண்டு. •

# அச்சமூட்டுவது எது?

# வழக்குரைஞர்களின் போராட்டமா, நீதிபதிகளின் சர்வாதிகாரமா?

**நீதிபதிகளின் ஊழல், பாலியல் அத்துமீறல்களைக் கேள்விக்குள்ளாக்கும் வழக்குரைஞர்களின் போராட்டத்திற்குப் பதில் அளிக்க முடியாத நீதிபதிகள், தாம் அச்சுறுத்தப்படுவதாகக் கதையளக்கிறார்கள்.**

"நீதிபதிகள் (உள்ளூர் போலீசை வைத்துக் கொண்டு) தங்களுக்கு முழுக்க முழுக்க பாதுகாப்பு இல்லை என்று உணர்கிறார்கள். அதனால், உள்ளூர் போலீசுக்குப் பதிலாக மத்தியத் தொழிற் பாதுகாப்புப் படையை உள்ளே அழைத்தார்கள். அதுவும் பலனின்றிப் போனால், எல்லைப் பாதுகாப்புப் படை, இராணுவம் உட்பட வேறு படைகள் அழைக்கப் படுவார்கள்."- இப்படி தமிழக அரசை எச்சரித்தது அல்லது மிரட்டியது இந்திய உச்ச நீதிமன்றம்.

பிற எல்லாத் துறைகள் மீதும் நம்பிக்கை இழந்துவிட்ட எளிய மக்களுக்கும் கடைசிப் புகலிடம் நீதிமன்றங்கள்தாம் என்பதைச் சொல்லியே இந்திய அரசியல் அமைப்பின் மீது நம்பிக்கை வைக்கும்படியான மாயையைத் தக்கவைக்க முயலுகிறார்கள். ஆனால், அந்த நீதிமன்றமோ, அதுவும் அதன் உச்ச நீதிமன்றமோ தனது கடைசிப் புகலிடமாக இராணுவத்தைத்தான் நம்புகிறது. அப்படி இருக்கும் போது இந்திய எளிய மக்கள் தமது கடைசிப் புகலிடமாக உச்ச நீதிமன்றமேயானலும் அதை இனியும் நம்பலாமா!

அப்படி என்ன நீதிமன்றங்களுக்கும் நீதிபதிகளுக்கும் பாதுகாப்பற்ற சூழல் ஏற்பட்டுப் போனது? பொதுமக்களாலா, தீவிரவாதிகளாலா? அப்படி எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை. போலீசால்தான் பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டது, வழக்கறிஞர்களும் நீதிபதிகளும் தாக்கப்பட்டார்கள்; அதற்கு யாரும் தண்டிக்கப்படவில்லை; எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நீதிபதிகளுக்கும் பாதுகாப்பற்ற சூழல் என்றால் கருப்புப் பூனைப் படையை போட்டுக் கொள்வார்கள்.

நீதிமன்றங்களில், குறிப்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் அமைதியான, கண்ணியமான சூழலில், வழமையான முறையில் வழக்குகளை நடத்தமுடியவில்லை; வழக்கறிஞர்கள் குற்றப் பின்னணி கொண்டவர்களாகவும் தகுதியற்றவர்களாகவும் இருக்கிறார்கள்; கட்டைப் பஞ்சாயத்து செய்கிறார்கள்; மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்; அளவுக்கு மீறிப் பணம் பறிக்கிறார்கள்; இரவில் அறைகளில் தங்கி குடிக்கிறார்கள் என்று பலவாறான குற்றச்சாட்டுகளை அடுக்குகிறார்கள். நீதிமன்ற வளாகத்தில் தனிநபர் ஒழுங்கீனங்கள் என்று எடுத்துக்கொண்டால், வழக்கறிஞர்கள் மட்டுமல்ல, நீதிபதிகளும் அவற்றில் ஈடுபடுகிறார்கள். ஒழுங்கீனங்கள், குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் மீது தனிநபர் வாரியாக சட்டப்படியான நடவடிக்கை எடுப்பதில் தவறில்லை.

ஆனால், அவ்வாறு செய்யாமல், போலீசு அதிகாரியின் அறிக்கையைக் காப்பியடித்து, வழக்கறிஞர்கள் அனைவரின் பொதுப் போக்குகளாகச் சித்தரித்து, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த வழக்கறிஞர்களை வெளியேற்றிவிட்டு, நீதித்துறையையும் சட்டத்துறையையும் முழுமையாகக் கைப்பற்றி ஆர்.எஸ்.எஸ். மயமாக்கும் சதிகார நோக்கில் உயர்நீதிமன்றமும், உச்சநீதிமன்றமும் செயல்படுகின்றன. அதன் ஒரு பகுதியாக

நீதித்துறையில் தாண்டவமாடும் இலஞ்சத்தை ஒழிக்கக் கோரியும், இலஞ்சப் பணத்தில் ஊறித் திளைக்கும் நீதிபதிகளின் பெயர்களை அம்பலப்படுத்தியும் தென்மாவட்ட வழக்குரைஞர்கள் கடந்த செப்டம்பரில் மதுரையில் நடத்திய ஊர்வலம்.





சென்னை உயர்நீதி மன்றத்தில் புகுந்து தமிழக போலீசு நடத்திய தாக்குதலில் மண்டை உடைக்கப்பட்ட நீதிபதி ஆறுமுக பெருமாள் ஆதித்யன் (இடது) மற்றும் வழக்குரைஞர்கள். (கோப்புப் படம்)

குற்றப் பின்னணியுள்ள வழக்கறிஞர்கள் மீதான நடவடிக்கை; சென்னை உயர் நீதிமன்றத்துக்கு மத்தியத் தொழில் பாதுகாப்புப் படைப் பாதுகாப்பு; பார் கவுன்சிலைச் சீரமைப்பது, வழக்கறிஞர்களுக்கான கல்விச் சீரமைப்பு, அங்கீகாரத்துக்கான தேர்வு முறையைப் புகுத்துவது; நீதித்துறைக்கு எதிரான ஒழுங்கீனம், கண்ணியக்குறைவு, அவமதிப்பு முதலான வற்றைத் தடுப்பது போன்ற நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன. இந்தச் சதியில் பார்ப்பன நீதிபதிகளோடு சமூகச் சொரணையற்று, பிழைப்புவாதிகளாகச் சீரழிந்து போன பிற பிரிவு நீதிபதிகளும் கைகோர்த்துக் கொண்டுள்ளனர். இவர்கள் அனைவரும் தனியொரு மேல்சாதி, மேட்டுக்குடி அதிகாரச் சாதியாகப் பரிணமித்துள்ளார்கள்.

இந்த மக்கள் விரோத அதிகாரச் சாதி இப்போது ஒரு பொதுக்கருத்தைப் பரப்புகிறது: நீதிமன்ற வளாகத்தில் தனிநபர் ஒழுங்கீனங்களில் ஈடுபடுபவர்களையும் சேர்த்து குற்றப் பின்னணியுள்ள வழக்கறிஞர்கள் என்று அனைவரையும் முத்திரை குத்துகிறார்கள். இது, பிரிவினைவாதிகள், தீவிரவாதிகள் என்று முத்திரை குத்தி, அவதூறு செய்து அரசியல் எதிர்த் தரப்பை ஒடுக்குவது போன்ற சூழ்ச்சி. அதன் தொடர்ச்சியாக, வழக்கறிஞர்கள் அடிக்கடி நீதிமன்றங்களைப் புறக்கணிக்கிறார்கள்: நீதிமன்ற வளாகத்தில் கோஷங்கள் போடுகிறார்கள், பிரச்சாரங்கள், ஊர்வலங்கள், போராட்டங்கள் நடத்துகிறார்கள் என்றும், இவை ஏதோ கிரிமினல் குற்றங்களைப் போலவும் இவற்றால் நீதிமன்ற மாண்பு, புனிதம், கண்ணியம் குறைந்து போவதாகவும், நீதிபதிகளின் பாதுகாப்புக்கு ஆபத்து விளைவதாகவும், அதனாலேயே இத்தனை கெடுபிடிகள் என்றும் உயர்நீதிமன்றமும் உச்ச நீதிமன்றமும் நீலிக்கண்ணீர் வடிக்கின்றன.

2009-ஆம் ஆண்டு பிப்ரவரியில் சென்னை உயர்நீதி மன்ற வளாகத்திற்குப் பெரும் படையாகத் திரண்டு வந்த போலீசு, அங்கிருந்த வாகனங்களை உடைத்து நொறுக்கி, வழக்கறிஞர்களையும் நீதிபதிகளையும் ஓட ஓட விரட்டி மண்டையை உடைத்து வெறியாட்டம் போட்டது. அந்தக் குற்றத்துக்காக யாரையும் தண்டிப்பதற்கு உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் எதற்கும் இது வரைதுப்பில்லை. வாயிலே கருப்புத்துணி கட்டிக்கொண்டு குழந்தை குட்டிகளோடு போய் நீதிபதியை மறித்து முழக்கம் போடுவதும்; அநீதியான தீர்ப்பை மீறி அமைதியாகப் போராடுவதும், அதன்மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குப் போட்டு அடாவடியாக நடத்துவதைக் அங்கேயே ஊர்வலம் போய் கண்டிப்பதும் நீதிபதிகளுக்கு எப்படி ஆபத்தாகும்?

நீதிபதிகளையும் போலீசாரையும் அவர்களது அதிகார முறைகேடுகளையும் அத்துமீறல்களையும் அக்கிரமங்களையும் நாளும் நெருக்கமாக இருந்து அவதானித்து வருவதால் அவர்களது வரம்புகளையும் வழக்கறிஞர்கள் அறிந்துள்ளார்கள். இவர்களில் சமூக, அரசியல் உணர்வுபெற்ற வழக்கறிஞர்கள் இயல்பிலேயே போராட்டக்காரர்களாக இருக்கிறார்கள். நீதிபதிகளும் போலீசாரும் மட்டுமல்ல, ஆட்சியாளர்கள் மற்றும் ஆளும் வர்க்கங்களின் அதிகார முறைகேடுகளையும் அத்துமீறல்களையும் அக்கிரமங்களையும் காத்து நிற்கும் அரண்களான நீதிமன்றங்கள் அல்லாது வேறெங்கு போய் போராடுவார்கள்! நீதிபதிகளின் ஊழல்கள் உட்பட போராட்டக்காரர்கள் எழுப்பும் பிரச்சினைகள் மீது பதில் சொல்வதற்குப் பதிலாக நீதிபதிகளிடம் இல்லாத மாண்பு, கண்ணியம் பற்றிப் பேசி நடவடிக்கை எடுக்கிறார்கள்!

● மாணிக்கவாசகம்

## 31-ஆம் ஆண்டில் புதிய ஜனநாயகம்.

அன்பார்ந்த வாசகத் தோழர்களே,

இந்த இதழிலிருந்து புதிய ஜனநாயகம் 31-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. இப்புரட்சிகர அரசியல் இதழ் தொடர்ந்து வெளிவர பலவகையிலும் உதவிவரும் வாசகர்களாகிய உங்களுக்கும், பல்வேறு இடர்ப்பாடுகளை எதிர்கொண்டு இந்த இதழை உழைக்கும் மக்களிடம் கொண்டு சென்று புதிய வாசகர்களை உருவாக்க அயராது உழைக்கும் முகவர்கள் - விற்பனையாளர்களுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மார்க்சிய-லெனினிய அரசியலை ஏந்தி, இந்துவெறி பாசிசத்துக்கு எதிராகவும் நாடு மீண்டும் காலனியாக்கப்படுவதற்கு எதிராகவும், மக்கள் அதிகாரத்தை நிறுவுவதற்கான அரசியலை பரந்துபட்ட மக்களிடம் கொண்டு செல்லும் மகத்தான கடமையை நிறைவேற்ற உங்களது உறுதியான ஆதரவுடன் 31-ஆம் ஆண்டில் எமது பயணத்தைத் தொடர்கிறோம்.

வாசகத் தோழர்கள் அனைவருக்கும் எமது நவம்பர் 7 - சோசலிசப் புரட்சி நாள் வாழ்த்துக்கள்!

-ஆசிரியர் குழு.

## தோழர் கோவன் கைது:

# பறிக்கப்படுவது கருத்துரிமை மட்டுமல்ல, வாழ்வுரிமையும்தான்!

மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் மையக் கலைக்குழுவைச் சேர்ந்த தோழர் கோவன், 30.10.2015 அன்று அதிகாலை 2.30 மணியளவில் திருச்சி, அரவானூரில் அவரது வீட்டிலிருந்து சென்னை குற்றப் பிரிவு உளவுத்துறை போலீசாரால் கடத்திச் செல்லப்பட்டார். அதே நேரத்தில் தஞ்சையில் தோழர் காளியப்பனின் வீட்டிற்குள் கொல்லைப்புறமாக சுவரேறிக் குதித்து உள்ளே நுழைந்திருக்கிறது சென்னையிலிருந்து சென்ற இன்னொரு தனிப்படை. வீட்டில் அவர் இல்லாததால் காளியப்பனைக் கைதுசெய்ய தஞ்சையிலேயே முகாமிட்டிருக்கிறது.

''மூடு டாஸ்மாக்கை மூடு'', ''ஊருக்கூரு சாராயம், தள்ளாடுது தமிழகம்'' என்ற இரண்டு பாடல்களும் வினவு தளம், வாட்ஸ் அப் மற்றும் ஃபேஸ்புக் மூலமாக பல இலட்சம் மக்களைச் சென்றடைந்துதான் இந்த நள்ளிரவுக் கைதுக்கு காரணம். இ.பி.கோ. 124ஏ தேசத்துரோகம், 153 இரு பிரிவினருக்கிடையில் மோதலைத் தூண்டுதல், 502/1 வன்முறையைத் தூண்டுதல் ஆகிய குற்றப் பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

தமிழகத்தின் அனைத்து எதிர்க்கட்சிகளும் (பா.ஜ.க. தவிர), தமிழக- தேசிய ஊடகங்களும், அறிவுத்துறையினரும், கட்ஜு, சந்துரு ஆகிய முன்னாள் நீதிபதிகளும், அம்னஸ்டி இன்டர்நேசனல் உள்ளிட்ட மனித உரிமை அமைப்புகளும் இக்கைதைக் கண்டித்து, கோவனை விடுதலை செய்யக் கோரியுள்ளன. ம.க.இ.க., மக்கள் அதிகாரம் அமைப்புகள் தமிழகமெங்கும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தியுள்ளன. பறை என்ற ஈழத்தமிழர் பண்பாட்டு அமைப்பு லண்டன் இந்தியத் தூதரகத்தின் முன் ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக அறிவித்துள்ளது.

பிரிட்டிஷ் ஆட்சி கூட மதுவிலக்கு கோரிக்கைக்குப் போராடியவர்கள் மீது ராஜத்துரோக வழக்கு போட்டதாகத் தெரியவில்லை. இந்தக் கொடிய அடக்குமுறை, பாசிச ஜெயாவின் வக்கிர கொடுங்கோல் ஆட்சியை உலகறியச் செய்துள்ளது.



பாடகனைக் கைது செய்துவிட்டீர்கள்,
''வைரலாக''ப் பரவிய பாட்டை உங்களால் என்ன செய்ய முடியும்?
விசாரணைக்கு இழுத்து வரப்படும் தோழர் கோவன்.

டாஸ்மாக் என்பது தமிழக மக்கள் மீது ஜெயா அரசு தொடுத்திருக்கும் யுத்தம். சசி பெருமாள் படுகொலை, பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் மீதான தாக்குதல் ஆகியவற்றின் வரிசையில் வருவதுதான் தோழர் கோவன் மற்றும் காளியப்பன் மீது போடப்பட்டுள்ள தேசத்துரோக வழக்குகள்.

ஒரு அரசியல் விமரிசனத்துக்கான தேசத்துரோக வழக்கு என்றோ, ஒரு கலைஞனின் குரலை நசுக்குவதற்கான தேசத்துரோக வழக்கு என்றோ பார்ப்பதும், கருத்துரிமை என்ற அடிப்படையில் கண்டனம் தெரிவிப்பதும் பிரச்சினையின் ஒரு பரிமாணத்தை மட்டுமே பார்ப்பதாகும். இதன் மற்ற பரிமாணங்கள் மிகவும் முக்கியமானவை.

சாராய விற்பனை, ஆற்றுமணல் கொள்ளை, கிரானைட் கொள்ளை, நிலத்தடி நீர்க் கொள்ளை, தாது மணல் கொள்ளை உள்ளிட்டு எல்லா வழிகளிலும் இயற்கை வளங்களை, மக்களின் பொதுச்சொத்தை கார்ப்பரேட் மஃபியாகும்பல்களுடன் சேர்ந்து கொண்டு அரசே சூறையாடுகிறது. இதில் அ.தி.மு.க. கட்சியினர் மட்டுமின்றி, போலீசு உள்ளிட்ட அதிகார வர்க்கத்தின் கணிசமான பிரிவினர் நேரடியாகவே ஈடுபட்டிருக்கின்றனர். இந்த கிரிமினல் மஃபியாவின் தலைமையாக ஜெயா-சசி கும்பல் இயங்குவதும், பல்லாயிரம் கோடிக்கு ஆங்காங்கே சொத்துக்களை வாங்கிக் குவிப்பதும் அடுக்கடுக்காக அம்பலமாகி வருகின்றன.

ம.க.இ.க.-வின் பாடல் இந்த மஃபியா கும்பலைக் குறிவைத்துத் தாக்குவதாலும், தோற்றுப்போன இந்த அரசமைப்பிடம் கெஞ்சிக் கொண்டிருக்காமல், மக்கள் தாமே அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு டாஸ்மாக்கை இழுத்து மூடவேண்டும் என்று அறைகூவல் விடுவதாலும்தான், இத்தனை மூர்க்கத்தனமாகப் பாய்ந்திருக்கிறது ஜெ அரசு.

கோவனின் கைதுக்குக் கண்டனம் தெரிவித்திருக்கும் கட்சிகள், அமைப்புகள், தனிநபர்கள் ஆகிய அனைவரும், ஜெ-சசி தலைமையிலான இந்த பாசிசக் கொள்ளைக் கும்பலைத் தண்டிப்பதற்கும் குரல் கொடுக்க வேண்டும். தமிழ்ச் சமூகத்தைப் பேரழிவுக்குள் தள்ளிக் கொண்டிருக்கும் டாஸ்மாக் மதுபானக் கடைகளை மூடுவதற்கான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

● சூரியன்

## “மூடு டாஸ்மாக்கை!”

# கோமளவல்லியை அச்சுறுத்தும் கலகக்குரல்!

**அ.**தி.மு.க. பா.ஜ.க. கும்பலின் அவதூறுகளுக்குப் பதில் அளித்து தோழர் மருதையன் வினவு தளத்தில் அளித்துள்ள விளக்கத்தின் சுருக்கம்.

**தோ**ழர் கோவனின் கைதுக்கு எதிராகத் தமிழக அளவிலும் தேசிய அளவிலும் எழுந்த எதிர்ப்பைக் கண்டு ஆத்திரம் அடைந்தவர்கள் அ.தி.மு.க.வினர் மட்டுமல்ல; அவர்களைக் காட்டிலும் பார்ப்பன பாரதிய ஜனதா கும்பலும், அவர்களுடைய ஊடகத்துறை கைக்கூலிகளும், முன்னாள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளும்தான் ஆத்திரம் அடைந்திருக்கிறார்கள். கருத்துரிமையை ஆதரிக்கிறோம், அதே நேரத்தில் வன்முறையைப் பரப்புவதை ஏற்கவியலாது; ரசனைக் குறைவான வரிகளை ஏற்கவியலாது என்று விதவிதமாக இவர்கள் மழுப்புகிறார்கள். ஜனநாயகவாதிகளைப் போல நடிக்கிறார்கள்.

தொலைக்காட்சி விவாதத்தில் பங்கேற்ற ஒரு முன்னாள் போலீசு அதிகாரி, ‘‘நம்ம ஊரில் டாஸ்மாக்கு கிடையாது, அடிச்சு தூக்குன்னு எழுதியிருப்பதால் இது தேசத்துரோக குற்றம்தான்’’ என்று பேசினார். சாராயக்கடையும் தேசமும் ஒன்றே என்பது அவரது விளக்கம். கடைகளைத் தூக்குவதற்கு இவர்கள் கூறும் வழி என்ன? கடைகளை அகற்றுவதற்காக ஆயிரக்கணக்கான போராட்டங்கள் நடந்திருக்கின்றன. எண்ணற்ற தீர்ப்புகள் வந்துள்ளன.


நெடுஞ்சாலை ஓரத்தில் டாஸ்மாக் கடை வைக்க கூடாது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. நெடுஞ்சாலை பக்கமாக இருக்கிற கதவை மூடிவிட்டு பின்புறமாக விற்கிறார்கள். டாஸ்மாக் விவகாரத்தில் மட்டுமல்ல, மொத்தத்தில் 21,000 நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் தமிழக அரசுக்கு எதிராக சென்னை உயர்நீதி மன்றத்தில் விசாரிக்கப்படாமல் கிடக்கின்றன. எனவேதான், கோர்ட்டை நம்பிப் பயனில்லை என்று செல்போன் கோபுரத்தில் ஏறினார் சசி பெருமாள்.

சாராயக்கடையாக இருக்கட்டும். ஆற்றுமணல் கொள்ளையாக இருக்கட்டும், எல்லாவற்றிலுமே மக்கள் நலத்தைப் பாதுகாப்பதாக உத்திரவாதம் கொடுத்திருக்கிற அரசுதான் கொள்ளையை முன்னின்று நடத்துகிறது. தமிழ்நாட்டு மக்கள் ஒரு ஆக்கிரமிப்புப் படையிடம் சிக்கிய நிலையில் இருக்கிறார்கள். மக்கள் யாரும் புது கோரிக்கை வைக்கவில்லை. எங்கள் ஆற்றை விட்டு விடுங்கள், சாராயக்கடையை மட்டும் எடுத்துவிடுங்கள், நாங்கள் பிழைத்துக் கொள்கிறோம் என்று கெஞ்சுகிறார்கள். ரவுடியிடம் கிரிமினல்களிடம் கெஞ்சுவதைப் போல மக்கள் அரசிடம் கெஞ்சுகிறார்கள். கெஞ்சிப்பயனில்லை என்பதால்தான், குடி கெடுக்கும் அரசிடம் கெஞ்சாதே என்று சொல்கிறோம்.

கலிங்கப்பட்டியில் கடையை அடித்து மூடினார்கள். ஊராட்சி மன்றமே வேண்டாம் என்று தீர்மானம் போட்டிருக்கிறது. ஆனால், அதை மீறி கலெக்டர் கடையைத் திறக்கிறார். கலிங்கப்பட்டி ஊராட்சித் தலைவர், கடைக்கு இடைக்காலத் தடை கேட்டு உயர் நீதி மன்றத்துக்கு ஓடுகிறார். உங்கள் ஊரில் கடை வேண்டாம் என்று சொல்வதற்கு நீங்கள் எதற்காக கோர்ட்டுக்குப் போக வேண்டும்? இதற்குக்கூட மக்களுக்கு அதிகாரம் இல்லையா? மக்கள் அதிகாரத்தைத் தங்கள் கையில் எடுத்துக் கொண்டால் ஒழிய, ஒரு சாராயக் கடையைக் கூட மூட முடியாது என்கிறோம்.

இது மக்கள் அதிகாரத்தின் கொள்கை பிரகடனம் மட்டுமல்ல, போலீசு சொல்வது போல தீவிரவாத அரசியலும் அல்ல.

**இலக்கு வைக்கும் போலீசு!** **விளக்கு பிடிக்கும் போலீசு!**




**“மூடு டாஸ்மாக்கை!”**

ஓவியம்: முகிலன்

மனுப் போட்டு எத்தனை இடங்களில் ஆற்று மணல் கொள்ளையை நிறுத்தியிருக்கிறீர்கள் என்று மக்களிடமே கேட்டுப் பாருங்கள். எந்த இடத்திலும் மனுப்போட்டு மன்றாடி எதுவும் நடக்கவில்லை. மக்களுடைய அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்வது ஒன்றுதான் வழி என்று சொல்லுகிறோம். இது எங்களுடைய விருப்பம் அல்ல, சாத்தியமான வழி இது மட்டும்தான் என்று சொல்கிறோம்.



டாஸ்மாக் கலாச்சாரம்: ஜெயாவிற்கும் அவரது அரசுக்கும் வருமானம், தமிழகத்திற்குப் பெரும் கேடு!

பலரும் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள், இந்த அம்மாவைக் கடுமையாகத் தாக்கி பாட்டு எழுதி விட்டார்கள். அதனால்தான் கோபப் பட்டு 124-ஏ போட்டுவிட்டார்கள் என்று. அது உண்மை இல்லை. இந்த அம்மாவை தரக் குறைவாக, சாக்கடை போன்று பேசிய நாஞ்சில் சம்பத் முதல் வளர்மதி வரை பலருக்கும் பதவி கொடுத்து அமர வைத்திருக்கிறார்கள். ஏனென்றால், அம்மாவுக்கும் அவர்களுக்கும் கொள்கை ஒற்றுமை இருக்கிறது. டாஸ்மாக்கை அரசு நடத்தினாலும், சரக்கு மிடாஸ் உள்ளிட்ட சாராயக் கம் பெனிகளிடமிருந்து வருகிறது. பார்களில் நடக்கும் கள்ளச்சாராய விற்பனையில் அ.தி.மு.க. ஆட்கள் காசு பார்க்கிறார்கள்.போலீசு நிலையம் முதல் வருவாய்த் துறை அதிகாரிகள் வரை இந்த அரசு அமைப்பின் மீது டாஸ்மாக் பணமழை பெய்கிறது. எனவே, டாஸ் மாக்கை தூக்குவது அரசையே தூக்குவதுதானே என்று எண்ணித்தான் 124-ஏ போட்டிருக்கிறார்கள்.

மக்கள் அதிகாரம் பற்றி நாம் கூறும்போது, நேர்மை யான அதிகாரிகளே இல்லையா, அவர்கள் மூலமாக சட்டப்பூர்வமான முறையிலே சாதிக்க முடியாதா என்று கேள்வி எழுப்புகிறார்கள்.

நேர்மையான அதிகாரி சகாயம் சுடுகாட்டில் படுக்க வேண்டிய நிலைமை. அடுத்து டி.எஸ்.பி. விஷ்ணுப் பிரியா, அவருடைய தோழி டி.எஸ்.பி மகேசுவரி, அப்புறம் முத்துக்குமாரசாமி. இன்னும் மர்மமான முறையில் கொல்லப்பட்ட எண்ணற்ற அதிகாரிகள். நேர்மையாளர்களுக்கு நேரும் கதி இதுதான்!

இது மக்கள் விரோத அரசு மட்டுமல்ல, தோற்றுப் போன அரசு. டாஸ்மாக்கை மூடினால் கள்ளச்சாராயம் பெருகும், ரவுடியிசம் பெருகும். போலீசால் தடுக்க முடியாது என்று ஒப்புதல் வாக்குமூலம் தருகிறார் நத்தம் விசுவநாதன். அதனால்தான் சொல்கிறோம். சாராயத்துக்கு கூறப்படும் நீதியைத் திருட்டுக்கும் பொருத்தலாமே! பிக்பாக்கெட், சங்கிலிப்பறிப்பு, பீரோ புல்லிங்கை தடுக்க முடியவில்லை. எனவே, இவற்றை அரசாங்கமே முறையாகச் செய்கிறோம் என் பார்களா? இதற்குப் பெயர் அரசாங்கமா? இது ஆள அருகதையற்ற அரசு.

எனவேதான் நீ ஒதுங்கு, மக்கள் பார்த்துக்கொள் வார்கள் என்கிறோம். மேலப்பாளையூரிலோ, அல்லது மற்ற இடங்களிலோ எங்கே மக்கள் அணிதிரண்டு நிற்கிறார்களோ, அங்க நல்ல சாராயமும் விக்க முடியாது. கள்ள சாராயமும் விக்க முடியாது.

2006-இல் திருமணமாகி, 2014-இல் தனது கணவன் ஆறுமுகத்தை குடிக்கும், அதனால் ஏற்பட்ட கடனுக்கும், அவமானத்திற்கும் பறிகொடுத்துவிட்டு, மூன்று சின்னஞ்சிறு பெண் குழந்தைகளோடு வாழ்க்கை போராட்டம் நடத்திவரும் திருப்பூரைச் சேர்ந்த கல்பனா.



பாடலின் சொற்குற்றம் பற்றி ஆராய்ச்சி செய் பவர்கள் பாடலின் பொருள் பற்றி என்ன சொல் லுகிறார்கள்? மிகப்பெரிய சீரழிவுக்கு, தமிழ் நாட்டின் எதிர்காலத் தலைமுறை தள்ளப்பட் டிருக்கிறது. இதைப் பற்றி இந்த அரசாங்கம் என்ன சொல்கிறது? டாஸ்மாக் எதிர்ப்புப் போராட்டங்கள் மிகத்தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த போது டாஸ்மாக்கையெல்லாம் மூட முடியாது என்று அறிவித்தார் அமைச்சர். அந்த அமைச்சருக்கு பெயர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அமைச்சர். அரசாங்கத்தின் கொள்கை மதுவிலக்குதானாம், கடையின் பெயர்ப்பலகையில் மது நாட்டுக்கு, வீட்டுக்கு, உயிருக்கு கேடு என்று எழுதிப் போட்டிருப் பதால் அதுதான் அவர்கள் கொள்கையாம். சொல்கிறார்கள்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் பா.ம.க வழக்கறிஞர் பாலு, கடைகளின் விற்பனை நேரத்தையாவது குறைப் பதற்கு உத்தரவிடுங்கள் என்று ஒரு மனுதாக்கல் செய்த போது,சாராயம் விற்பது என்பது அரசாங்கத்தின் கொள்கை முடிவு. அதில் தலையிட நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என்றது உயர் நீதிமன்றம்.

இப்படி மோசடிப் பேச்சு பேசுகின்ற, தமிழ்ச் சமூகத்தையே நாசமாக்கிய குற்றவாளிகள், பாடலை, பாடலை எழுதியவர்களை, வெளியிட்டவர்களைக் கூண்டிலேற்றி, இந்த வார்த்தை சரியில்லை, அந்த வார்த்தை சரியில்லை என்று பிரித்து ஆராய்கிறார்கள்.

ம.க.இ.க.வின் பாடல் ஒலிப்பேழைகள் 12 வந்திருக்கின்றன. தென்மாவட்டங்களில் கடுமை யான சாதிவெறி கலவரங்கள் நடைபெற்ற போது, அவற்றுக்கெதிராக மேடையில் நின்று முழங்கியிருக் கிறார்கள் இதே கலைக்குழுவினர். மதவெறிக்கு எதிராக நேருக்கு நேர் நின்று கோவையில், ராமேசுவரத் தில் கலைநிகழ்ச்சி நடத்தியிருக்கிறார்கள்.

எது மக்களுக்கு சொல்லப்பட வேண்டிய விச யமோ அதைச் சொல்லுகிறோம். என்ன மொழியில், உணர்ச்சியில் அதனைச் சொல்வது என்பது எப்படித் தீர் மானிக்கப்படுகிறது? டாஸ்மாக் எதிர்ப்புப் பாடல் களை எடுத்துக் கொள்ளுங்கள். குடிசைப் பகுதிகளில் பெண்கள் வெளிப்படுத்தும் கோபத்தை உள்வாங்கிக் கொண்டு மக்கள் மொழியில் எழுதுகிறோம். தவறு என்றால் மக்களே நிராகரித்துவிடுவார்கள்.

உங்க அம்மாவை இழிவுபடுத்தி பேசினா சும்மா விடுவீங்களா?ன்னு தொலைக்காட்சி விவாதத்தில் ஒரு அ.தி.மு.க. மகளிர் அணித் தலைவி கேட்டார். எங்கம்மா இப்படி சாராயம் வித்தால் வீட்டை விட்டு துரத்தி விடுவோம் என்பதுதான் இதற்குப் பதில். அடுப்பு வைத்து காய்ச்சினால்தான் சாராயமா? மிடாஸ் ஆலையில் பாய்லர் வைத்து காய்ச்சினால் அது சாராயம் இல்லையா? திட்டம் போட்டு விற்பனையை அதிகரிக் கும் ஜெயாவை ஊற்றிக் கொடுத்ததாகச் சொல்வதில் என்ன தவறு?

அம்மா உப்பு என்கிறீர்களே, அம்மா டாஸ்மாக்குனு சொல்ல வேண்டியதுதானே என்று விஜயகாந்த் மனைவி கேட்கவில்லையா?நான் உத்தரவிட் டுள்ளேன், என்னுடைய அரசு என்றுதான் எப்போதும் பேசுகிறார் ஜெயலலிதா. சாராயம் விற்கும் அரசு யாருடையது?அது மட்டும் நத்தம் விசுவநாதனுடைய அரசா?

இந்தப் பாடல் எழுப்புகின்ற மையக் கருத்தைப் பற்றி விவாதிப்பதைத் தவிர்த்து விட்டு, ஒருமையில் பேசியிருக்கிறீர்கள், உத்தமி, உல்லாசம்னு சொல்லி யிருக்கீங்க என்கிறார்கள்.

வளர்ப்பு மகன் திருமணத்தை நாடே காறி உமிழ்ந்ததே, அது உல்லாசம் இல்லையா? 2000 செருப்பு, 3000 புடவை உல்லாசமில்லையா? தங்க நகையும் ஒட்டியாணமும் பூட்டிக்கொண்டு நிற்கிறார் களே, அது உல்லாசமில்லையா? வேறு என்ன வார்த்தைகளால் இதை சொல்வது? நீ வாழவச்ச தெய்வமுனு கூவலைன்னா கொன்னுருவான்னு எழுதி யிருப்பதில், ர் விகுதி இல்லாததுதான் பிரச்சினையா? அதில் சொல்லியிருக்கும் கருத்து உண்மையா இல்லையா? அமைச்சர்களைக் கேட்டுப்பாருங்கள்.

பெண் என்பதால் என்னை இழிவுபடுத்திவிட்டார் கள் என்று பேசுவதும், அதை முன்னிறுத்துவதும் ஜெயா நடத்தும் அரசியலில் ஒரு உத்தி. ஒரு பெண் ணென்றும் பாராமல் என் முடியை பிடித்து இழுத்து விட்டார்கள் என்று ஒரு நாடகத்தை தி.மு.க. ஆட்சியின் போது அரங்கேற்றினார்கள்.

அந்த நாடகத்தில் ஒரு கதாபாத்திரமாக இருந்த திரு நாவுக்கரசர் அதை அம்பலமாக்கியிருக்கிறார். அப் புறம் சென்னா ரெட்டியைப் பற்றி இதே போல குற்றம் சாட்டி அறிக்கை விட்டார் ஜெ.

அதே நேரத்தில் ராஜீவ் காந்திக்கு சோனியா விசுவா சமா இல்லை, எம்.ஜி.ஆரை அவங்க மனைவி ஜானகி விஷம் வச்சு கொன்னாங்க, போலீசால் பாலியல் வன்



ஜெயா-சசி கும்பலின் 'தவ வாழ்க்கை!'

முறைக்கு ஆளான அந்தியூர் விஜயா காசுக்காக பொய் சொல்பவர் என்று நாக்கில் நரம்பில்லாமல் என்ன வேண்டுமானாலும் பேசக்கூடிய நபர்தான் ஜெ.

சிவகங்கையில நடந்தது என்ன? அந்த சிறுமிக்கு நடந்த கொடுமைக்கு காரணமான குற்றவாளிகளில் முதன்மையானவர்கள் போலீசு அதிகாரிகள். ஒருவர்கூட இதுவரை கைது செய்யப்படவில்லை. அந்தச் சிறுமிக்கு இந்த பெண் முதல்வர் வழங்கி யிருக்கும்நீதி என்ன?

குடிகாரப் புருசன் உயிரோட இருந்தால் மனைவி யின் நடத்தையை அன்றாடம் சந்தேகித்து நீ என்ன உத்தமியா என்று கேட்கிறான். செத்து விட்டால் இளம் கைம்பெண்களின் நடத்தையை சமூகம் ஆராய்ச்சி செய்கிறது. இப்படி இலட்சக்கணக்கான பெண் களுடைய சுயமரியாதையை இழிவுபடுத்தியிருப்பது

ஜெயாவின் ஆட்சி. அதனைக் கேள்விக்குள்ளாக்கினால், பெண் முதல்வரை இழிவுபடுத்தி விட்டதாகத் திசைதிருப்புகிறார்கள்.

இது ஒரு தந்திரம். பா.ஜ.க. கையாளுகிற தந்திரம். குஜராத்தில் முசுலீம்களை ஏன் வேட்டையாடினீர்கள் என்று கேட்டால், நீ அல்உம்மாவை ஆதரிக்கிறியா? எங்க ஆளை அந்த ஊர்ல கொன்னாங்களே, அதை ஆதரிக்கிறியான்னு கேட்பார்கள். இல்லை. நாங்க அல் உம்மாவை ஆதரிக்கவில்லை. பின்லேடனை ஆதரிக்கவில்லை. தாவூத் இப்ராஹிம்மை ஆதரிக்கவில்லை என்று நீங்கள் தன்னிலை விளக்கம் தருவீர்கள். உங்களைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றி, தன்னிலை விளக்கம் கொடுக்கிற நிலைக்கு ஆளாக்குவது என்பது ஒரு பாசிஸ்டு விவாத உத்தி. அதே உத்தியைத்தான் இவர்கள் கையாளுகிறார்கள். அதற்கு நாம் பலியாக வேண்டுமா என்பதுதான் நமது கேள்வி.

பாடலை வரிவரியாகப் பிரித்து ஆராய்ந்தும், அதிலிருந்துதேசவிரோத குற்றத்துக்கு எந்த ஆதாரத்தையும் அவர்களால் காட்ட முடியவில்லை. கடைசியாக விசயத்துக்கு வந்துவிட்டனர். வினவு இணைய தளமும், யெல்லாம் உங்களையே சேரும். டாஸ்மாக் எதிர்ப்புப் போராட்டத்தை எடுத்துக் கொள்ளுங்கள். ஒருவேளை உங்களுடைய மாவட்ட ஆட்சியர்கள் மக்களுடைய குரலுக்கு செவிசாய்த்திருந்தால், ஒருவேளை இந்த அரசாங்கம் கடைகளை மூடி பெண்களின் கண்ணீரைத் துடைக்க முன்வந்திருந்தால், இந்தப் பாட்டு உங்களை அச்சுறுத்தும் நிலை ஏற்பட்டிருக்காது அல்லவா?

இவர்கள் ஒரு சிறு குழு என்று சொல்கிறீர்கள். ஆனால், இந்த சிறு குழுவைப் பார்த்து அஞ்சுகிறீர்கள். ஏனென்றால், பாடல் லட்சக்கணக்கில், கோடிக் கணக்கில் மக்கள் மத்தியில் பரவுகிறது.

இதை எல்லாக் கட்சியினரும் ஆதரித்துப் பேசுகிறார்கள். கட்சி அரசியலே தெரியாத மக்களும் பெண்களும் பேசுகிறார்கள். ஏன்? தாங்கள் சொல்ல நினைத்ததை இந்தப் பாடல் சொல்கிறது என்று எங்களில் அவர்களை அடையாளம் காணுகிறார்கள். அது உங்களை அச்சுறுத்துகிறது. இன்று டாஸ்மாக் பாடலில், நாளை இன்னொன்றில், இன்னொன்றில் என்று இது தொடர்ந்து விடுமோ என்ற அச்சம் உங்களைப் பிடித்தாட்டுகிறது.



1991-96 ஆட்சிக் காலத்தில் ஜெயா-சசி அடித்த கொள்ளைக்கு அவரது வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட இந்த தங்க-வைர நகைகள் சான்று என்றால், தற்பொழுது ஊத்திக் கொடுப்பதன் மூலம் அடிக்கும் கொள்ளைக்குச் சான்று சென்னை வேளச்சேரியில் அக்கும்பல் கைப்பற்றியிருக்கும் 11 சொகுசுத் திரையரங்குகள்.

அது சார்ந்திருக்கும் ம.க.இ.க. உள்ளிட்ட அமைப்புகளும் இந்த அரசமைப்புக்கு எதிரானவை என்றும், அவர்கள் மீது முதலில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் போலீசும், பாரதிய ஜனதாவும் ஒரே குரலில் ஊடகங்களில் பேசுகின்றனர்.

ஐயா ஆளும் வர்க்க கனவான்களே, நாங்கள் இந்த அரசமைப்புக்கு எதிரானவர்கள்தான். அதை நீங்கள் என்ன சொல்வது, நாங்களே சொல்கிறோம். இந்த அரசமைப்பின் தோல்வியை நீங்களே ஒப்புக் கொண்டுள்ளீர்கள். அதிகாரத்தை மக்கள் தம் கையில் எடுத்துக் கொள்ள வேண்டும். அத்தகையதொரு ஜனநாயக பூர்வமான அரசமைப்பை புதிதாக உருவாக்க வேண்டும் என்கிறோம்.

மக்கள் எங்களை ஏற்பதற்குக் காரணம் எங்கள் செயல்பாடு மட்டும் அல்ல. அந்தப் பெருமை

ஒருவேளை உங்களது அதிகார பலத்தைக் கொண்டு எங்களைத் தடை செய்வதில் நீங்கள் தற்காலிகமாக வெற்றி பெற்றுவிடலாம். ஆனால், மக்களுக்கு எதிராக நடந்துகொள்வதிலிருந்து உங்களை நீங்களே ஒரு போதும் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது. டாஸ்மாக் பார்களில் அ.தி.மு.க. வினரின் கொள்ளையை, மிடாசு சாராயக் கம்பெனியை, பி.ஆர்.பி. நடத்தும் கிரானைட் கொள்ளையை வைகுந்தராஜனின் தாதுமணல் கொள்ளளையை. எதை உங்களால் நிறுத்த முடியும்? ஊழல், அதிகார முறைகேடுகளிலிருந்து உங்களைப் பிரிக்க முடியாது. பீனிக்ஸ் மாலிலிருந்து சசிகலாவை பிரிக்க முடியாது.

அது முடியாதவரை எங்களை ஒரு போதும் உங்களால் தடுக்க முடியாது.

●

### கல்பர்கி கொலை தொடங்கி அக்லக் கொலை வரை...

# இந்து ராஷ்டிரம்?

**பசுவின் பெயரால் நடந்துவரும் கொலைகள், தாக்குதல்களுக்கும் தமது அரசுக்கும் சம்பந்தம் இல்லை எனக் கூறி மோடி – அமித் ஷா கும்பல் தப்பிக்கப் பார்ப்பது கடைந்தெடுத்த மோசடி.**

பருப்பைப் பதுக்கி வைத்திருக்கும் கள்ள வியாபாரிகளைவிட, மாட்டுக் கறி உணவு அருந்துபவர்களைத்தான் மிகப் பெரும் கொடியவர்களாக, சமூக விரோதிகளாகச் சித்திரிக்கின்றன மோடி அரசும் ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களும். பருப்பைப் பதுக்கி வைத்த கள்ள வியாபாரிகளுக்கு உடனடி தண்டனை வழங்கப்பட்ட செய்தி எதுவும் இதுவரை நமக்குக் கிட்டவில்லை. ஆனால், பசு மாட்டிறைச்சியைச் சாப்பிட்டதாக பழிபோடப்பட்ட 50 வயதான முகம்மது அக்லக் செங்கற்களால் அடித்தே கொல்லப்படுகிறார்; பசு மாட்டினைக் கொன்றதாகப் பழி போடப்பட்ட 24 வயதான ஜாஹித் அகமது பட் உயிரோடு எரித்துக் கொல்லப்படுகிறார்; மாடுகளை இறைச்சிக்காகக் கடத்திச் செல்வதாகப் பழி போடப்பட்ட 28 வயதான நோமன் அக்தர் அடித்துக் கொல்லப் படுகிறார்.

ஜம்மு காஷ்மீரிலுள்ள உதம்பூரைச் சேர்ந்த ஜாஹித் அகமதும், உ.பி. மாநிலத்தைச் சேர்ந்த நோமன் அக்தரும் தமக்கு முன்பின் அறிமுகமில்லாத இந்து மதவெறிக் கும்பலால் கொல்லப்பட்டனர். ஆனால், உ.பி. மாநிலம், தாத்ரி பகுதியிலுள்ள பிஸாரா கிராமத்தைச் சேர்ந்த முகம்மது அக்லக், தனது சொந்த கிராமத்திலேயே, தனது வீட்டின் எதிரிலேயே, தனது மனைவி, தாய், மகள் ஆகியோரின் கண் முன்னாலேயே, அதே கிராமத்தைச் சேர்ந்த, அக்லக்கின் குடும்பத்தினருக்குத் தெரிந்த, அவர்களோடு பழகி வந்த 'இந்து'க்களாலேயே அடித்துக் கொல்லப்படுகிறார். இந்த மதவெறி எந்த அளவிற்கு இரக்கமற்றது, கண்மூடித்தனமானது என்பதற்கு அக்லக்கின் படுகொலை இன்னொரு சான்று. அது மட்டுமின்றி, மேற்கு உ.பி.யை இந்து மத வெறியின் புதிய சோதனைச்சாலையாக ஆர்.எஸ்.எஸ். கும்பல் உருமாற்றியிருப்பதையும் அக்லக் படுகொலை எடுத்துக் காட்டுகிறது.

**அக்லக் படுகொலை: திடீரென நடந்த விபத்தா?**

ராமர் கோவில், பொது சிவில் சட்டம், 370-ஆவது சட்டப் பிரிவை நீக்குவது, இட ஒதுக்கீடு எதிர்ப்பு ஆகியவற்றை முன்னிறுத்தி முசுலீம் எதிர்ப்பு கலவரங்களையும் படுகொலைகளையும் நடத்திவந்த ஆர்.எஸ்.எஸ். இப்பொழுது லவ் ஜிகாத், பசுவதைத் தடை - எனத் தனது தந்திரோபாயத்தை மாற்றிக் கொண்டிருப்பதை சமீபத்திய நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. முசாஃபர் நகரில் முசுலீம்களுக்கு எதிராக ஜாட் சாதியினரைத் தூண்டிவிடுவதற்கு ''லவ் ஜிகாத்'' என்ற சதித்தனமான பிரச்சாரத்தை நடத்திய ஆர்.எஸ்.எஸ். கும்பல், 2014 நாடாளுமன்றத் தேர்தலின்பொழுது காங்கிரசை 'இந்துக்களின்' எதிரியாகக் காட்டுவதற்கு மாட்டிறைச்சி ஏற்றுமதிக்கு பசுக்கள் கொல்லப்படுவதாக ஒரு அழுகுணி பிரச்சாரத்தை நடத்தியது,

நரேந்திர மோடி பிரதமர் நாற்காலியில் குந்தியவுடனேயே பசுவதை தடைச் சட்டத்தை நாடெங்கும் கடுமையாக அமல்படுத்த வேண்டும் என்ற பிரச்சாரத்தையும், தாக்குதல்களையும் ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் வட மாநிலங்களில் பரவலாக கட்டவிழ்த்துவிட்டன. குறிப்பாக, பசுவைக் கொன்றதாகப் பழி சுமத்தப்பட்ட ஒருவரை பஜ்ரங் தள் குண்டர்கள் கொடூரமாகத் தாக்கும் காட்சியும், அக்கும்பல் விடுத்த எச்சரிக்கையும் சமூக வலைத்தளங்கள் வழியாகப் பரப்பப்பட்டு, உ.பி.யின் முசாஃபர் நகர், ஷாம்லி பகுதிகளில் மீண்டும் கலவரச் சூழல் ஏற்படுத்தப்பட்டது. பா.ஜ.க. கூட்டணி ஆளும் மகாராஷ்டிராவிலும், அக்கட்சி தனித்து ஆளும் ம.பி., ராஜஸ்தான், சத்தீஸ்கர் மாநிலங்களிலும் பசுவதை தடைச் சட்டம் ஐந்து முதல் பத்தாண்டு வரை தண்டிக்கக்கூடியதாகக் கடுமையாக்கப்பட்டது. ஜம்மு-காஷ்மீரில் யாரோ ஒரு இந்து மதவெறியன் போட்ட வழக்கினைச் சாதகமாக்கிக் கொண்டு, பசு

உ.பி. மாநிலம் தாத்ரி பகுதியிலுள்ள பிஸாரா கிராமத்தில் ஆர்.எஸ்.எஸ்.இன் கைக்கூலிகளால் சதித்தனமான முறையில் படுகொலை செய்யப்பட்ட முகம்மது அக்லக்.



வதைத் தடைச்சட்டத்தை கடுமையாக அமல்படுத்துமாறு, அம்மாநில போலீசுக்கு அம்மாநில உயர்நீதி மன்றத்தின் ஜம்மு கிளை உத்தரவிட்டது.

ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க.வினரின் புரவலர்களான ஜைன மதத்தினர் கடைபிடிக்கும் பர்யுஷன் சடங்கின்போது, இரண்டு நாட்கள் இறைச்சிக் கடைகளை அடைப்பது மகாராஷ்டிராவில் ஏற்கெனவே நடைமுறையில் இருந்து வருகிறது. இதனை நான்கு நாட்களாக நீட்டித்தும் அந்நாட்களில் ஆட்டிறைச்சி, கோழி இறைச்சி விற்பதையும் தடை செய்து தீர்மானம் நிறைவேற்றியது பா.ஜ.க.-சிவசேனா கூட்டணியின் கீழுள்ள மும்பய் மாநகராட்சி. அம்மாநிலத்தைச் சேர்ந்த மற்றொரு மாநகராட்சி இதனை எட்டு நாட்களுக்கு நீட்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியது. இந்து மதவெறிக் கும்பல் ஆளும் ராஜஸ்தான், குஜராத் மற்றும் பஞ்சாபிலும் இது போன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது; சத்தீஸ்கர் மாநிலத்தில் இந்த உத்தரவு விநாயகர் சதுர்த்தியின் பொழுதும் நடைமுறையில் இருக்கும் என இன்னொரு அடி தாண்டியது, பா.ஜ.க. மும்பய் மாநகராட்சி பிறப்பித்த உத்தரவை மும்பய் உயர்நீதி மன்றமும், அதன் பின் உச்சநீதி மன்றமும் ரத்து செய்துவிட்ட போதும், இந்து மதவெறிக் கும்பலுக்குத் தலைக்கேறிய பசு போதை இறங்கவேயில்லை என்பதை இதன் பின் நடந்த முகம்மதுஅக்லக் கொலையும், அதனைத் தொடர்ந்து அடுத்தடுத்து நடந்த நோமன் அக்தர், ஜாஹித் அகமது பட் ஆகியோரின் கொலைகளும் எடுத்துக் காட்டிவிட்டன.



உயிருக்குப் போராடும் நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட முகம்மது அக்லக்கின் இரண்டாவது மகன் தானிஷ்.

### ஆர்.எஸ்.எஸ்.தான் அடிக்கொள்ளி

அக்லக் கொல்லப்பட்ட நாளன்று, பசு மாட்டுக் கறியின் எச்சங்கள் வீதியில் கிடப்பதைப் போன்ற ஒரு காட்சி சமூக வலைத்தளங்கள் வழியாக அக்கிராமத்தினரின் கைபேசிகளுக்குத் திடீரென அனுப்பப்பட்டிருக்கிறது. அன்றிரவு பத்து மணி போல், அக்கிராமத்தைச் சேர்ந்த பெரும்பாலோர் தூங்கப் போய்விட்ட நேரத்தில், அக்கிராம கோவிலின் ஒலிபெருக்கியில் அக்கோவில் பூசாரி, அக்லக் பசு மாட்டைக் கொன்று, அதன் மாமிசத்தைச்சாப்பிட்டு விட்டு மிச்சத்தை வீட்டில் வைத்திருப்பதாகவும், அதன் எச்சங்களை வீட்டிற்கு எதிரே எரிந்திருப்பதாகவும் அறிவிக்கிறார். இந்த அறிவிப்பைக் கேட்டவுடனேயே 1,000-க்கும் மேற்பட்டோர் கோவில் வாசலில் கூடுகிறார்கள். அவர்களுள் ஒரு கும்பல் அக்லக்கின் வீட்டிற்குள் நுழைந்து, அவரது இளைய மகனை மயங்கிவிழும் வரை அடித்துவிட்டு, அக்லக்கை வீதிக்கு இழுத்து வந்து செங்கல் கற்களால் அடித்துக் கொல்கிறது.

ஏறத்தாழ 15,000 பேர் வசிக்கும் பிஸாரா கிராமத்தில் முசுலீம்களின் மொத்த எண்ணிக்கையே வெறும் 300 தான். அக்லக் குடும்பமோ தாகூர் சாதியினர் வசிக்கும் பகுதிக்கு அருகிலேயேதான் வசித்து வந்தது. இப்படிபட்ட நிலையில் பசு மாட்டைக் கொன்று, அதன் கறியைச் சாப்பிட்டுவிட்டு, அதன் எச்சங்களைத் தெருவில் வீசியெறிய அக்லக் உள்ளிட்டு அக்கிராமத்தைச் சேர்ந்த எந்தவொரு முசுலீமும் துணிந்திருக்க முடியாது. எனவே, பசுவைக் கொன்றதாக, அதன் மாமிசத்தைச் சாப்பிட்டதாக வதந்தியைப் பரப்பி, பின்னர் மேல்சாதியினர் மத்தியில் வாழும் அக்லக்கை இலக்காக நிர்ணயித்து இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

இரண்டாவதாக, அக்கோவில் பூசாரி பிஸாராவைச் சேர்ந்தவரல்ல. மூன்று மாதங்களுக்கு முன்பு கோவில் பூசாரி வேலையை ஏற்றுக் கொண்ட அவர் எந்தப் பகுதியைச் சேர்ந்தவர், அவரை அழைத்துவந்து, நியமித்தது யார் என்பது இன்று வரை மர்மமாக உள்ளது. மேலும், அந்த பூசாரி தனது வாக்குமூலத்தில் தன்னை மிரட்டி, அக்லக் வீட்டில் பசு மாமிசம் இருப்பதாக அறிவிக்கச் செய்ததாகக் கூறியிருக்கிறார்.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் மாட்டுக் கறி விருந்து நடத்திய சுயேச்சை சட்டமன்ற உறுப்பினர் இன்ஜினீயர் ரஷீத்தின் முகத்தில் மையையும் ஆயிலையும் வீசித் தாக்கியது இந்து மதவெறிக் கும்பல்.



ஜாட் சாதியைச் சேர்ந்த பெண்ணை முசுலீம் இளைஞன் பின்தொடர்ந்து தொந்தரவு செய்வதாக வதந்தி பரப்பபட்டும், பாகிஸ்தானில் இந்து மதத்தைச் சேர்ந்த ஒருவர் முசுலீம்களால் தாக்கப்பட்ட சம்பவத்தை இந்தியாவில் நடந்ததைப் போல சமூக வலைத்தளங்களில் மோசடியாகப் பதிவேற்றம் செய்தும்தான் முசாஃபர் நகர் கல

வரம் தூண்டிவிடப்பட்டது. டெல்லியிலுள்ள நஜாப்கர் பகுதியில் நடந்த கலவரமும் கோவிலில் பூசாரி செய்த அறிவிப்பிற்குப் பிறகுதான் தொடங்கியது. உ.பி.யிலுள்ள அஸம்கர் பகுதியிலுள்ள ஒரு கோவிலின் அருகே மாட்டுக் கறியை வீசியெறிந்துவிட்டுத் தப்பிச் செல்ல முயன்ற பர்தா அணிந்திருந்த நபரைப் பிடித்து விசாரித்தபொழுது, அவன் ஆர்.எஸ்.எஸ்.ஐச் சேர்ந்தவன் என்பது அம்பலமானது. இத்தகைய வஞ்சகமான ஆர்.எஸ்.எஸ். பாணியில்தான் அக்லக் படுகொலையும் நடந்திருக்கிறது.



இறைச்சிக்காகப் பசுவைக் கடத்துவதாகப் பழிபோடப்பட்டு அடித்துக் கொல்லப்பட்ட நோமன் அக்தர் (இடது) மற்றும் எரித்துக் கொல்லப்பட்ட ஜாஹித் அகமது பட்.

மேலும், இப்படுகொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள 11 பேரில் 8 பேர் பிஸாரா கிராம பஞ்சாயத்துத் தலைவர் சஞ்ஜய் ரானாவின் உறவினர்கள்; குறிப்பாக, முதல் குற்றவாளியான விஷால் சஞ்சய் ரானாவின் மகன். சஞ்சய் ரானா இருபது ஆண்டுகளுக்கும் மேலாக பா.ஜ.க.வில் இருந்து வருவதோடு, இப்படுகொலையைக் கொச்சைத்தனமாகப் பூசி மெழுகிவரும் கலாச்சாரத் துறை இணை அமைச்சர் மகேஷ் ஷர்மாவின் அல்லக்கை.

இதுவொருபுறமிருக்க, பிஸாரா கிராமத்தில் ராஷ்டிரவாதி பிரதாப் சேனா, சமாதான் சேனா, ராம் சேனா என்ற முகமூடியை அணிந்துகொண்டு ஆர்.எஸ்.எஸ். கும்பல் தாகூர் சாதியினரை அணிதிரட்டி வைத்திருக்கிறது. குறிப்பாக, சமாதான் சேனாவை நடத்திவரும் கோவிந்த் சௌத்ரி ஆர்.எஸ்.எஸ். பிரச்சாரகன் என்பதோடு, கடந்த ஆகஸ்டில் கிம்ராலா கிராமத்தைச் சேர்ந்த மூன்று முசுலீம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் சமாதான் சேனாவிற்குத் தொடர்பு இருப்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. இந்த சந்தர்ப்ப சாட்சியங்கள் அக்லக் படுகொலையின் அடிக்கொள்ளியாக ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. கும்பல் இருப்பதை நிறுவுகின்றன.

கர்நாடகாவில் எழுத்தாளர்கள் நடத்திய மாட்டுக் கறி விருந்தில் கலந்து கொண்டதற்காக இந்து மதவெறிக் கும்பலால் அச்சுறுத்தும் வகையில் மிரட்டப்பட்ட கன்னட எழுத்தாளரும் நடிகையுமான சேத்னா தீர்த்தஹள்ளி (இடது). எல்லம்மா என்ற பெண் தெய்வத்தைத் தனது காலில் பச்சை குத்திக் கொண்டதற்காக இந்து மதவெறிக் கும்பலால் நடுத்தெருவில் அச்சுறுத்தப்பட்ட ஆஸ்திரேலிய நாட்டு சுற்றுலா பயணி மாத்யூ கார்டன்.



பெரு நகரங்களில் ரவுடிகளையும், மாஃபியா கும்பலையும் தூண்டிவிட்டு சுபாரி கொலைகள் நடத்தப்படுவதைப் போல, ஆர்.எஸ்.எஸ். நேரடியாகத் தலையிடாமல், புதுப்புது இந்துத்துவா அமைப்புகளை உருவாக்கி, அதன் மூலம் தனது திட்டங்களைச் செயல்படுத்தி வருவதை அக்லக் படுகொலையில் மட்டுமின்றி, மலேகான் குண்டுவெடிப்பு தொடங்கி தபோல்கர், கோவிந்த் பன்சாரே, கல்புர்கி படுகொலைகள் வரையிலும் காண முடியும். ஆர்.எஸ்.எஸ். ஆட்கள் பா.ஜ.க.விற்கு சப்ளை செய்யப்படுவது போல, இப்புதிய இந்துத்துவா அமைப்புகளிலும் முன்னாள்/இந்நாள் ஆர்.எஸ்.எஸ். ஆட்கள் வேலை செய்கிறார்கள். முசுலீம் தீவிரவாத அமைப்பான அல்காய்தாவின் ‘‘ஸ்லீப்பர் செல்களை’’ப் போல இந்த அமைப்புகள் ஆர்.எஸ்.எஸ்.-இன் மறைமுக ஆதரவோடு திடீர் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

‘‘பசுவைக் கொல்லுபவர்களைக் கொன்று போடுவோம்’’ என அறிவித்து, இமாச்சலப் பிரதேசத்தில் நோமன் அக்தரைப் படுகொலை செய்தது; காஷ்மீர்-உதம்பூரில் ஜாஹித்அகமதுவை எரித்துக் கொன்றது; ஜம்மு-காஷ்மீர் மாநில சுயேச்சை சட்டமன்ற உறுப்பினரான இன்ஜினீயர் ரஷீதின் முகத்தில் மையையும், ஆயிலையும் பூசியது; மாட்டுக் கறி விருந்தில் கலந்து கொண்ட கன்னட எழுத்தாளரும் நடிகையுமான சேத்னா தீர்த்தஹள்ளியைப் பாலியல் பலாத்காரம் செய்து, முகத்தில் ஆசிட் வீசப் போவதாக மிரட்டியது; கர்நாடகாவில் ஆஸ்திரேலிய நாட்டுச் சுற்றுப்பயணியான மாத்யூ கார்டன், எல்லம்மா என்ற பெண் தெய்வத்தின் உருவத்தைத் தனது காலில் பச்சைக் குத்தியதற்காக மிரட்டப்பட்டது என நீண்டுகொண்டே போகும் இத்தாக்குதல்களுக்கும் தமக்கும் சம்மந்தமில்லை என ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. கும்பல் சூடத்தைக் கொளுத்தி

சத்தியம் செய்தபோதும், அதனை நம்புவதற்கு யாரும் தயாராக இல்லை.

**தலை சும்மா இருக்க, வால் மட்டும் ஆடுகிறதா?**

''இந்தியாவின் வளர்ச்சிக்காக மோடி உழைத்துக் கொண்டிருக்கும் வேளையில், இந்த அமைப்புகள் அவருக்கு முட்டுக்கட்டைப் போடுவதாக'' மோடியின் ஆதரவாளர்கள் முன்வைக்கும் சப்பையான, மோசடியான வாதங்களை நயன்தாரா சேகல் உள்ளிட்ட பிரபலமான எழுத்தாளர்கள் எள்ளிநகையாடி அம்பலப்படுத்தியதோடு, தமக்கு அளிக்கப்பட்ட சாகித்ய அகாதமி விருதுகளைத் திருப்பி அளித்ததன் மூலம் மோடியின் முகத்தில் காரி உமிழ்ந்துவிட்டனர். ''இந்தியாவை இந்து மத ஏகாதிபத்திய நாடாக மாற்ற பா.ஜ.க. தலைமையிலான மத்திய அரசு முயல்வதைக் கண்டித்து'' தமக்கு அளிக்கப்பட்ட பத்மபூஷண் விருதைத் திருப்பி அளிக்கப் போவதாக அறிவியலாளர்கள் புஷ்ப மித்ர பார்கவா, அசோக் சென், பி.பல்ராம் ஆகியோர் அறிவித்திருக்கின்றனர். ''மதரீதியாக பிளவுபட்ட சமூகம் என்பது அணுகுண்டைவிடவும் நமது நாட்டுக்கு ஆபத்தானது. மாட்டிறைச்சி உண்பவர்கள், மூடநம்பிக்கைகளை எதிர்ப்பவர்கள் கொல்லப்படுவதைத் தடுத்து நிறுத்துங்கள்'' எனக் குறிப்பிட்டு நூற்றுக்கும் மேற்பட்ட அறிவியலாளர்கள் அரசுத் தலைவருக்குக் கடிதம் எழுதியுள்ளனர். பிரதமர் மோடியின் கள்ளமௌனத்தைக் கண்டித்து ரொமிலா தாப்பர், இர்பான் ஹபிப் உள்ளிட்ட 53 வரலாற்று அறிஞர்கள் கண்டன அறிக்கையை வெளியிட்டுள்ளனர். இவை அனைத்தும் மோடியின் அரசு வர்க்க வேறுபாடுகளையும் கடந்து பெருவாரியான மக்களிடமிருந்து தனிமைப்பட்டு, அவர்களின் நம்பகத்தன்மையை இழந்து நிற்கிறது என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

இந்த எதிர்வினைகளுக்கு நியாயமான பதிலை அளிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள மோடி அரசு, தன்னைக் குற்றஞ்சாட்டுபவர்களை காங்கிரசுகாரர்களாகச் சித்தரித்துத் தன்னை விடுவித்துக் கொள்ளும் கீழ்த்தரமான தந்திரத்தில் இறங்கியிருக்கிறது. நாட்டில் மத சகிப்புத்தன்மை நிலவ வேண்டும் எனக் கோரியிருக்கும் இந்த அறிவுத்துறையினரை, ''சகிப்புத்தன்மையற்றவர்கள்'' எனச் சாடியிருக்கும் அருண் ஜெட்லி, ''இதனால் மோடி வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்'' என்ற நகைக்கத்தக்கவிதமாக வாதாடி வருகிறார்.



தினமணி உள்ளிட்ட பார்ப்பனக் கும்பலால் வளர்ச்சியின் நாயகனாக முன்னிறுத்தப்படும் நரேந்திர மோடியின் உண்மை சொரூபத்தை அவ்வளவு எளிதாக மறைத்து விட முடியாது. குஜராத்தில் முசுலீம்களுக்கு எதிராக மிகப்பெரும் படுகொலையை நடத்திவிட்டு, ''காரில் செல்லும்போது ஒரு நாய்க்குட்டி குறுக்கே வந்து அடிபட்டால் எந்தளவிற்கு வருத்தப்படுவேனோ அதற்கு மேல் இதில் வருத்தப்பட எதுவுமில்லை'' என அலட்சியமாகப் பதில் அளித்த இரக்கமற்ற கொடியவன்தான் மோடி. அப்படுகொலைக்குப் பிறகு நடந்த குஜராத் சட்டமன்றத் தேர்தலின்பொழுது முசுலீம்கள் ஐந்து பெண்டாட்டிகளைக் கட்டிக்கொண்டு, இருபத்தைந்து பிள்ளைகளைப் பெற்றுப் போடுவதாகப் பிரச்சாரம் செய்த கீழ்த்தரமான பேர்வழிதான் மோடி. கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்பொழுது ஆதிக்க சாதிகளைச் சேர்ந்த 'இந்துக்களின்' ஓட்டுக்களைப் பொறுக்குவதற்கு, ஏற்றுமதிக்காகப் பசுக்களைக் கொல்லும் இளஞ்சிவப்பு புரட்சியை காங்கிரசு அரசு நடத்தி வருவதாகக் குறிப்பிட்டு, தன்னைப் பசுவின் பாதுகாவலனாக முன்னிறுத்திக் கொண்ட தந்திரக்காரன்தான் மோடி. இப்பொழுது பீகார் தேர்தல் பிரச்சாரத்திலும் மோடி-அமித் ஷா கூட்டணி மாட்டிறைச்சி, பாக். எதிர்ப்பு என்ற இந்து மதவெறி அரசியலை முன்னிறுத்திதான் லல்லு-நிதிஷ்குமார் கூட்டணியை 'இந்துக்களிடமிருந்து' தனிமைப்படுத்திவிட முயன்று வருகிறது.


ஜம்மு-காஷ்மீரில் மாட்டுக் கறிக்குத் தடை விதிக்க வேண்டுமெனப் பரிந்துரை செய்த அம்மாநில உயர்நீதி மன்ற ஜம்மு கிளையின் உத்தரவைக் கண்டித்து சீறிநகரில் நடந்த போராட்டம்.



முசுலீம்களுக்கு எதிராக ஆபாசமாகவும், அவதூறாகவும் பேசி வரும் சங்கீத் சோம், மகேஷ் ஷர்மா, சாக்ஷி மகாராஜ், பலியான் ஆகியோரை அழைத்து பா.ஜ.க. தலைவர் அமித் ஷா கண்டித்திருப்பதாகக் கூறப்படுவதெல்லாம் வடிகட்டிய மோசடி மற்றும் பொய். இந்தக் கும்பலின் கட்சிப் பதவிகூட பறிக்கப்படவில்லை என்பது ஒருபுறமிருக்க, ''அக்லக்கைக் கொலை செய்தவர்கள்

அவரது மகளின் மேல் கைவைக்கவில்லை'' என கீழ்த் தரமாகப் பேசிய கலாச்சாரத்துறை இணை அமைச்சருக்கு மோடி கொடுத்த பரிசு என்ன தெரியுமா? முன்னாள் அரசுத் தலைவர் அப்துல் கலாமிற்கு ஒதுக்கப்பட்டிருந்த அரசு பங்களா, இப்பொழுது மகேஷ் ஷர்மாவிற்கு அளிக் கப்பட்டிருக்கிறது. கேபினட் தகுதியுள்ள அமைச்சருக் குக்கூட, அவ்வளவு வசதிமிக்க பங்களா ஒதுக்கப்பட வில்லை எனக் குறிப்பிடுகிறது, இந்து நாளிதழ்.

முந்தைய காங்கிரசு ஆட்சியைவிட, மோடியின் ஆட்சியில் மாட்டிறைச்சி ஏற்றுமதி இன்னும் அதிகரித் திருக்கிறது. காங்கிரசு ஆட்சியில் பசு மாட்டிறைச்சிதான் ஏற்றுமதி செய்யப்படுவதாகக் கூசாமல் குற்றஞ்சுமத்திய மோடி, தனது ஆட்சியில் எருமை மாட்டிறைச்சி மட்டுமே ஏற்றுமதி செய்யப்படுவதாகக் கூறி, தன்னை நியாயப்படுத்திக் கொள்கிறது. இதுவொருபுறமிருக்க, பசுவின் பாதுகாவலனாகத் தன்னை முன்னிறுத்தி வரும் உ.பி. சட்டமன்ற உறுப்பினரான சங்கீத் சோம், அல் துவா என்ற மாட்டிறைச்சி ஏற்றுமதி நிறுவனத்தின் முதலாளி களுள் ஒருவன் என்பதும் தற்பொழுது அம்பலமாகி




யிருக்கிறது. மோடியும், அவரது கும்பலும் எத்தகைய மோசடிப் பேர்வழிகள் என்பதை இவை எடுத்துக் காட்டு கின்றன.

இவற்றுக்கு அப்பால், மைய அரசின் கல்வி, கலாச் சார, அறிவியல், வரலாற்று ஆராய்ச்சி மையங்கள் அனைத்திலும் ஆர்.எஸ்.எஸ். பின்னணிக் கொண்டவர் களை, அவ்வமைப்புகளின் தலைவர்களாக, இயக்குநர் களாக நியமிப்பதோடு, அந்த அமைப்புகளையே இந்துத் துவா கருத்தியல் தளங்களாக மாற்றுவதையும் நோக்க மாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது, மோடி அரசு. லலித் கலா அகாடெமி, ரிக் வேதம் முதல் ரோபா வரை என்ற கண்காட்சியை சமீபத்தில் நடத்தியிருப்பதையும், மைய அறிவியல் மற்றும் தொழில் ஆராய்ச்சி கவுன்சில் நடத்திய இயக்குநர்கள் மாநாட்டில் ஆர்.எஸ்.எஸ். ஆட்கள் கலந்து கொண்டிருப்பதையும் அரசு காவிமய மாக்கப்படுவதன் உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. அமைப்பிற்குள் மிதவாதி கள், தீவிரவாதிகள் என இரு பிரிவினர் இருப்பது போன்ற கட்டுக்கதையைப் பார்ப்பன ஏடுகள் வெகுகாலமாகவே திட்டமிட்டே பரப்பி வருகின்றன. வாஜ்பாயி மிதவாதி யாகவும், அத்வானி தீவிரவாதியாகவும்; அதன் பின்னர் அத்வானி மிதவாதியாகவும், மோடி தீவிரவாதியாகவும்; இப்பொழுது மோடி வளர்ச்சி நாயகனாகவும், சங்கீத் சோம், சாக்ஷி மகாராஜ் உள்ளிட்டோர் தீவிரவாதிகளாக வும் இந்த ஏடுகளால் திட்டமிட்டே சித்தரிக்கப்படுகின் றனர். கழுதை விட்டையில் முன்விட்டை என்ன, பின் விட்டை என்ன? பசுவதை எதிர்ப்பை முன்வைத்து முசுலீம்களும் தாழ்த்தப்பட்டோரும் தாக்கப்படுவதை சங்கீத் சோமும், சாக்ஷி மகாராஜும் கவனித்துக் கொள் கிறார்கள் என்றால், அரசு கட்டமைவை காவிமயமாக்கு வதை மோடி கவனித்துக் கொள்கிறார். இதுதான் அவர் களுக்கு இடையே இப்பொழுதுள்ள வேலைப் பிரிவினை!

வளர்ச்சியைச் சாதிப்பேன், ஊழலை ஒழிப்பேன் எனத் தம்பட்டம் அடித்து ஆட்சியைப் பிடித்த மோடி கும்பல், தனது தேர்தல் வாக்குறுதிகளில் ஒரு சிறு துளியைக்கூட நிறைவேற்ற முடியாமல் தோல்வி அடைந்து, ஒண்ணரை ஆண்டுகளுக்குள்ளாகவே மக் களின் நம்பிக்கையை இழந்துவிட்டது. இன்னொருபுறத் தில் முந்தைய காங்கிரசு அரசைவிட வேகமாகவும் விசு வாசமாகவும் நாட்டின் அனைத்துத் துறைகளையும் முற்றிலுமாக ஏகாதிபத்திய நிறுவனங்களின், உள்நாட்டு தரகு முதலாளிகளின் கொள்ளைக்குத் திறந்துவிட முயன்று வருகிறது. மேலும், அரசு கட்டமைவை வேக வேகமாக காவிமயமாக்கி வருகிறது. இவற்றுக்கு எதிராகத் தொழிலாளர்கள், விவசாயிகள், பொதுத்துறை நிறுவன ஊழியர்கள், அறிவுத்துறையினர் ஆகியோரிட மிருந்து எழும் எதிர்ப்பைத் திசை திருப்ப ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. கும்பல் இந்து மதவெறி உணர் வையும் மோதல்களையும் திட்டமிட்டே தூண்டிவரு கிறது. இதன் மூலம் தனது ஆட்சியை மக்களின் எதிர்ப் பிலிருந்து காப்பாற்றிக் கொள்வதோடு, சமூகத்தின் மீது இந்து மதவெறி அமைப்புகளின் சட்டத்திற்கு அப்பாற் பட்ட மேலாண்மையை, கண்காணிப்பை நிறுவிக் கொள்ளவும் முயலுகிறது. சுருக்கமாகச் சொன்னால், மறுகாலனியாதிக்கத்திற்கு ஏற்ப ஒரு இந்து ராஷ்டிரத்தை அமைப்பதை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது, மோடி அரசு.

எனவே, மோடி தலைமையில் உள்ள மைய அரசு இந்து மதவெறி தாக்குதல்களைத் தடுத்து நிறுத்திவிடும்; நாட்டின் சகிப்புத்தன்மையைக் காப்பாற்றும் என நம்பிக் கொண்டிருப்பது தற்கொலைக்கு ஒப்பானது. மாறாக, மக்களிடமிருந்து தனிமைப்பட்டு நிற்கும் மோடி ஆட் சியை மக்கள் அதிகாரத்தின் மூலம் அகற்றுவதும்; ஆக் டோபஸ் போல பல கொடுங்கரங்களைக் கொண்டி ருக்கும் ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. கும்பலை நேருக்கு நேர் நின்று மோதி வீழ்த்துவதன் மூலம் மட்டுமே நாட்டைக் கவ்வியிருக்கும் பார்ப்பன பாசிச பயங்கரவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

● செல்வம்

# விருதுகளைத் திருப்பி அளிப்பதோடு நின்றுவிடாதீர்கள்!

**விருதுகளைத் திருப்பி அளித்த எழுத்தாளர்கள், கலைஞர்கள், விஞ்ஞானிகளின் எதிர்ப்பிற்கு உள்நோக்கம் கற்பிப்பதன் மூலம் தன்னைக் கேவலமான முறையில் நியாயப்படுத்திக் கொள்ள முனைகிறது, மோடி அரசு.**

**சா**கித்ய அகாடமி விருது பெற்ற பிரபல கன்னட எழுத்தாளரும் முற்போக்குச் சிந்தனையாளருமான கல்புர்கி மற்றும் பகுத்தறிவாளரும் மருத்துவருமான நரேந்திரதபோல்கர், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரான கோவிந்த் பன்சாரே ஆகியோர் படுகொலை செய்யப்பட்டுள்ள கொடூரம், உ.பி. மாநிலம் தாத்ரியில் மாட்டிறைச்சி உண்டதாகக் குற்றம் சாட்டி இந்துவெறியர்களால் ஒரு முஸ்லிம் அடித்துக் கொல்லப்பட்ட அட்டூழியம், முன்னாள் பாக்.வெளியுறவு அமைச்சர் குர்ஷித் மக்முத் கசூரியின் நூலை வெளியிட ஏற்பாடு செய்த 'குற்றத்துக்காக', அத்வானியின் விசுவாசியான சுதீந்திர குல்கர்னியின் முகத்தில் சிவசேனா குண்டர்கள் கருப்பு மை ஊற்றி அவமானப்படுத்தி நடத்திய தாக்குதல், மோடியின் அமைச்சர்கள் வாய்க்கொழுப்பேறி இந்துத்துவ நஞ்சைக் கக்கிவருவது, எழுத்தாளர்கள் கொல்லப்படும் நிலையில் சாகித்ய அகாடமி மவுனம் சாதித்து வருவது - முதலானவை மோடி அரசின் மீது கடும் அதிருப்தியை அறிவுத்துறையினரிடம் தோற்றுவித்துள்ளது.

நாட்டில் நிலவும் இத்தகைய சூழலுக்கு எதிராக பிரதமர் வாய் திறக்காததோடு, எந்த நடவடிக்கையும் எடுக்காததையும் கண்டிக்கும் வகையில் 88 வயதான பெண் எழுத்தாளரான நயன்தாரா சேகல், தனக்கு 1986-ஆம் ஆண்டில் அளிக்கப்பட்ட சாகித்ய அகாடமி விருதைத் திரும்ப ஒப்படைத்துள்ளார்.

''இந்த அறச்சீற்றத்துக்கு கல்புர்கி கொலையும், தாத்ரி விவகாரம் மட்டும் காரணமல்ல; இன்று நாடெங்கும் தீவிரமாகிவரும் சகிப்புத் தன்மையற்ற இந்துத்துவ சக்திகளின் தாக்குதல் சூழல் காரணமாகவே நான் எனது விருதினைத் திருப்பிக் கொடுக்கிறேன்'' எனக் குறிப்பிட்டு, புகழ் பெற்ற இந்தி கவிஞர், அசோக் வாஜ்பாய் தனது விருதினைத் திரும்பக் கொடுத்துள்ளார். ''கௌதம புத்தரும் குருநானக்கும் பிறந்து வாழ்ந்த புண்ணிய பூமியில், மதரீதியான தாக்குதல்கள் நடப்பது நமது மண்ணுக்கும் சமுதாயத்துக்கும் பெருத்த அவமானம். இவற்றை இந்த அரசால் தடுக்க முடியாத நிலையில் இந்த விருதைத் திருப்பி அளிக்கிறேன்'' என்று மோடி அரசுக்குக் கடிதம் எழுதி, பஞ்சாபின் எழுத்தாளரான தலீப் கவுர் தீவானா, தனக்கு 2004-ஆம் ஆண்டில் அளிக்கப்பட்ட பத்மசிறீ விருதைத் திரும்ப அளித்துள்ளார்.

தாத்ரி சம்பவமும், மும்பையில் பாக். கஜல் பாடகர் குலாம் அலியின் நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டிருப்பதும் துரதிருஷ்டவசமானது என்று கூறிய மோடியின் பூசி மெழுகும் வார்த்தைகளை அம்பலப்படுத்தி, ஷஷி தேஷ்பாண்டே என்ற பிரபல பெண் எழுத்தாளர் சாகித்ய அகாடமி உறுப்பினர் பதவியிலிருந்து விலகியுள்ளதோடு, தனக்கு அளிக்கப்பட்ட விருதையும் திருப்பிக் கொடுத்துள்ளார். இவர்கள் மட்டுமின்றி, உதய் பிரகாஷ், கே.வீரபத்திரப்பா உள்ளிட்ட 40-க்கும் மேற்பட்ட எழுத்தாளர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட சாகித்ய அகாடமி விருதைத் திருப்பி அளித்துள்ளனர். ஐந்து எழுத்தாளர்கள் தங்களது சாகித்ய அகாடமி பதவிகளைத் துறந்துள்ளனர். சினிமா தயாரிப்பாளர்கள் - இயக்குனர்கள் பலரும் தங்களுக்கு வழங்கப்பட்ட தேசிய விருதுகளைத் திருப்பிக் கொடுத்துள்ளனர்.

விருதுகளைத் திருப்பிக் கொடுக்கும் திரைப்படத் துறையினர்



''இந்து ராஷ்டிர நாடாக இந்தியாவை மாற்றும் திசையில் இந்த அரசு செல்கிறது. தொழில் மற்றும் அறிவியல் ஆராய்ச்சிக் கழக (சி.எஸ்.ஐ.ஆர்.) இயக்குனர்கள் கூட்டத்தில் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் வெளிப்படையாகப் பங்கேற்கின்றனர். அரசின் பல்வேறு நிறுவனங்களில் ஆர்.எஸ்.எஸ். ஆட்கள் திட்டமிட்டே திணிக்கப்பட்டு வருகின்றனர். இந்நிலையில், விருதை திருப்பித் தருவதைத் தவிர விஞ்ஞானியான எனக்கு வேறு வழி தெரியவில்லை'' என்று உருக்கமாக கடிதம் எழுதி, பத்ம பூஷண் விருது பெற்ற 87 வயதான விஞ்ஞானி பி.எம். பார்கவா தனது விருதைத் திருப்பிக் கொடுத்துள்ளார். விஞ்ஞானிகள் அசோக் சென், பி.பல்ராம் ஆகியோர் தங்களுக்கு வழங்கப்பட்ட நாட்டின் உயரிய பத்ம பூஷண் விருதைத் திருப்பி அளித்துள்ளனர். ரொமிலா தாப்பர், இர்பான் ஹபீப், கே.என். பணிக்கர், மிருதுளா முகர்ஜி உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட வரலாற்றாசிரியர்கள், மோடி அரசுக்குத் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர். பிரபல வரலாற்றாசிரியர் சேகர் பதக், தனக்கு அளிக்கப்பட்ட பத்மசிறீ விருதைத் திருப்பிக் கொடுத்துள்ளார். எழுத்தாளர்கள், கலைஞர்கள், வரலாற்றாசிரியர்களின் போராட்டத்தை ஆதரித்து 107 மூத்த விஞ்ஞானிகள் ஆன்லைனில் அறிக்கை வெளியிட்டுள்ளதோடு, நாட்டில் நிலவும் மோசமான சூழலுக்கு எதிராகத் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு அரசுத் தலைவரிடம் மனு கொடுத்துள்ளனர்.



விருதுகளைத் திருப்பிக் கொடுத்து மோடி முகத்தில் காரி உமிழ்ந்த எழுத்தாளர்கள்:
நயன்தாரா சேகல், அசோக் வாஜ்பாய், தலிப் கௌர் திவானா.

ஊடகங்களாலும் இந்துத்துவப் பரிவாரங்களாலும் ஊதிப்பெருக்கப்பட்ட மோடி அலை, இப்போது புஸ்வாணமாகி நாடு முழுவதும் கடும் அதிருப்தியையே எதிர்கொண்டிருக்கிறது. பொருளாதாரச் சீர்திருத்தங்களை விரைவுபடுத்துவது, அந்நிய முதலீடுகளை ஈர்ப்பது என்ற மோடி அரசின் நடவடிக்கைகள் எந்தப் பலனையும் அளிக்கவில்லை. ஆரவாரமாக அறிவிக்கப்பட்ட ''மேக் இன் இந்தியா'' என்ற சரக்கும் விலைபோகவில்லை. ஊழலற்ற ஆட்சி என்ற அண்டப் புளுகை வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா, ராஜஸ்தான் முதல்வர் வசுந்தரா, ம.பி.முதல்வர் சௌகான் ஆகியோர் சிக்கியுள்ள ஊழல் விவகாரங்கள் சந்தி சிரிக்க வைத்துவிட்டன. சினிமா-தொலைக்காட்சி, கல்வி-கலாச்சாரம், அறிவியல், வரலாற்று ஆய்வு அமைப்புகள் முதல் உச்ச நீதிமன்றம் வரை அனைத்து நிறுவனங்கள் மட்டுமின்றி, சி.பி.ஐ; பிரதமர் அலுவலகம் போன்ற உயர் அதிகார அமைப்புகளிலும் ஆர்.எஸ்.எஸ். விசுவாசிகளை நியமித்து வருவதும், தீவிரமாகிவரும் இந்துவெறித் தாக்குதல்களும் அறிவுத்துறையினரிடமும் விஞ்ஞானிகளிடமும் கடும் எதிர்ப்பைத் தோற்றுவித்துள்ளன. மீள முடியாத அரசியல் பொருளாதார நெருக்கடியிலும், தப்பிக்க முடியாத லஞ்ச ஊழலிலும் சிக்கிக் கொண்டு அனைத்தும் தழுவிய தோல்வியிலும் மாட்டிக் கொண்டுள்ள மோடி கும்பல், நாட்டின் அறிவுத்துறையினரிடமும் மதிப்பிழந்து தனிமைப்பட்டுப் போயுள்ளது.

இருப்பினும், ஆட்சியதிகார பலத்தையும், அமைப்புரீதியில் திரட்டப்பட்டுள்ள இந்துவெறி பாசிச குண்டர் படையையும், கார்ப்பரேட் முதலாளிகளின் ஆதரவையும் கொண்டுள்ள துணிச்சலில் பா.ஜ.க. அமைச்சர்களும் தலைவர்களும் இந்துத்துவப் பரிவாரங்களும் அறிவுத்துறையினரின் நியாயமான இந்த அறப்போராட்டங்களை எள்ளி நகையாடி பாசிசத் திமிருடன் கொச்சைப்படுத்தி வருகின்றனர்.

''இது வெறும் காகிதப் புரட்சி. அவர்களுக்கு விருப்பம் இல்லாவிட்டால் எழுதுவதை நிறுத்திவிட்டுப்போகட்டும். நாங்கள் சாகித்ய அகாடமியை மூடிவிட்டு அதனைத் தூய்மை இந்தியா (ஸ்வாச் பாரத்) திட்ட அலுவலகமாக மாற்றிவிடுகிறோம்'' என்று எழுத்தாளர்களும் கலைஞர்களும் இல்லாத ஒரு நாட்டைக் கட்டிய மைக்கக் கிளம்புகிறார், மத்திய கலாச்சார மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரான மகேஷ் சர்மா.


அரசின் விருதுகளைத் திருப்பிக் கொடுத்துள்ள பிரபல விஞ்ஞானிகள்:
பி.எம்.பார்கவா, அசோக் சென், பி. பல்ராம்.



எழுத்தாளர்களும் சிந்தனையாளர்களும் படுகொலை செய்யப்படும் நாட்டில், அரசின் விருதுகள் ஒரு அவமானச் சின்னம் என ஒரு

எழுத்தாளன் நினைப்பதில் என்ன தவறு இருக்கிறது? எழுத்தாளர்களின் மீதான வன்முறையைக் கண்டிக்காத சாகித்ய அகாடமிக்கு தனது எதிர்ப்பைக் காட்டும் வகையில்தான் அவர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட விருதுகளைத் திருப்பிக் கொடுக்கிறார்கள். இதுவும்கூட தவறு என்று சாடுகின்றனர், பா.ஜ.க. அமைச்சர்கள்.

மத்திய அமைச்சர் அருண் ஜெட்லி, ‘‘இவர்களது டிவிட்டர்களைப் பார்த்தாலே இவர்கள் பா.ஜ.க. எதிர்ப்பாளர்கள் என்று புரியும். இவர்கள் எதிர்க்கட்சிகளால் செயற்கையாக வலிந்து உருவாக்கப்படும் இத்தகைய போராட்டத்தின் மூலம் பிரபலமடையப் பார்க்கிறார்கள்’’ என்று சாடுகிறார். டெல்லி ஐ.ஐ.டி. மாணவர்களிடம் உரையாற்றிய இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் ரகுராம் ராஜன், ‘‘இந்தியாவில் சகிப்புத் தன்மை குறைந்து வருகிறது. இது ஜனநாயகத்துக்கும், தொழில் வளர்ச்சிக்கும் நல்லதல்ல’’ என்று பா.ஜ.க. அரசின் போக்கு குறித்து விமர்சனமாகக் குறிப்பிட்டார். உடனே, ‘‘ரிசர்வ் வங்கி வேலையை மட்டும் ரகுராம் ராஜன் பார்க்கட்டும். ஆட்சியை எப்படி நடத்த வேண்டும் என்று அவர் அறிவுரை சொல்லத் தேவையில்லை. அவரை மோடி அரசு உடனே நீக்க வேண்டும்’’ என்று சீறுகிறார், சுப்பிரமணிய சாமி.




‘‘விருதுகளை திருப்பிக் கொடுப்பதன் மூலம் நாட்டின் பெருமையை சீர்குலைக்கிறார்கள். செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ள இத்தகைய எதிர்ப்புகளால் பிரதமர் மோடியையோ, பா.ஜ.க.வையோ ஒன்றும் செய்துவிட முடியாது’’ என்று எகிறுகிறார் மைய அமைச்சர் உமா பாரதி.

முன்னாள் ராணுவத் தளபதியும் இந்நாள் பா.ஜ.க. அமைச்சருமான வி.கே.சிங், அரியானாவின் ஃபரிதாபாத்தில் ராஜபுத்திர சாதிவெறியர்களால் தீயிடப்பட்ட குடிசையில் இரு தாழ்த்தப்பட்ட குழந்தைகள் உயிரோடு எரிக்கப்பட்டதைப் பற்றி நாய்களுடன் ஒப்பிட்டு அப்பட்டமான பார்ப்பன வெறியை பாசிசத் திமிருடன் கக்கியுள்ளார்.

‘‘நான் மாட்டுக்கறி சாப்பிடுவது எனது தனிப்பட்ட விருப்பம்; அதை யாரும் தடுக்க முடியாது’’ என்று பேசிய கர்நாடக முதல்வரின் தலையை வெட்டுவேன் என பா.ஜ.க. தலைவர் பகிரங்க மிரட்டல் விடுக்கிறார். இந்துவெறி சிறீராம் சேனா அமைப்பினர் கர்நாடக முதல்வருக்குப் பன்றிக் கறி அனுப்பும் போராட்டத்தை நடத்துகின்றனர்.

இந்துத்துவ தாக்குதல் தீவிரமாகிவரும் இத்தகைய சூழலில், சாகித்ய அகாடமி உள்ளிட்ட விருதுகளை திருப்பிக் கொடுத்து அரசின் முகத்தில் காறி உமிழாத குறையாக தங்களது எதிர்ப்புகளை பல எழுத்தாளர்களும் கலைஞர்களும் விஞ்ஞானிகளும் பதிவு செய்கின்றனர். ஆனால், சாகித்ய அகாடமி விருது பெற்ற தமிழக எழுத்தாளர்களின் நெஞ்சில் இவையனைத்தும் எந்த சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. மாறாக, விருதுகளைத் திருப்பிக் கொடுக்கும் எழுத்தாளர்களை அவர்கள் கேலியும் கிண்டலும் செய்து கொச்சைப்படுத்துகிறார்கள். அமிதாவ் கோஷ் போன்ற சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர்கள் தங்களது விருதுகளைத் திருப்பிக் கொடுக்காத போதிலும், போராடும் எழுத்தாளர்களை ஆதரிக்கிறார்கள். ஆனால் தமிழகத்தின் பிழைப்புவாத எழுத்தாளர்களோ, திருப்பிக் கொடுப்பவர்களை ஆதரிக்கக் கூட முன்வராமல் வழக்கமான தமது அடிமைத்தனத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

எழுத்தாளர்கள் தமக்கு அளிக்கப்பட்ட சாகித்ய அகாடமி விருதுகளைத் திருப்பிக் கொடுப்பது பிரச்சினைக்குத் தீர்வல்ல, இந்தப் போராட்டமுறையும் சரியல்ல; வேறு தளத்தில் போராட வேண்டும் என்று இந்துத்துவ சக்திகளுக்கு எதிராக ஏதோ பெரிய போராட்டம் நடத்தப் போவதைப் போல தமிழக சி.பி.எம். கட்சி காட்டிக் கொள்கிறது. ஆனால் என்ன போராட்டம் என்பதைப் பற்றி அது வாய் திறக்க மறுக்கிறது. சி.பி.எம். கட்சியின் அகில இந்தியத் தலைமையானது, விருதுகளைத் திருப்பிக் கொடுக்கும் எழுத்தாளர்கள் - கலைஞர்களின் போராட்டத்தை ஆதரிக்கிறது. ஆனால் தமிழகத்தின் சி.பி.எம். கட்சியும் அதன் தலைமையிலான த.மு.எ.க.ச.வும் , விருதுகளைத் திருப்பிக் கொடுப்பது தீர்வல்ல என்று தனி ஆவர்த்தனம் வாசித்துக் கொண்டிருக்கிறது. இந்துத்துவ தாக்குதல் தீவிரமாகிவரும் சூழ்நிலையில், நீங்கள் எந்தப் பக்கம் என்பதுதான் மையமான கேள்வி.

தமிழகத்தின் எழுத்தாளர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட அரசின் விருதுகளைக் கட்டிப்பிடித்துக் கொண்டு தமது பிழைப்புவாதத்தைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறார்கள். சி.பி.எம்.கட்சியோ, தனது கோழைத்தனத்தை மறைத்து வெற்று சவடால் அடித்துக் கொண்டிருக்கிறது.

● மனோகரன்

# “பூமராங் ஆனது இராமபாணம்!”

## - அம்பலப்படுத்துகிறார் ஆனந்த் தெல்தும்டே

இந்திய தொழில்நுட்பக் கழகம் (ஐ.ஐ.டி), கரக்பூரில் பேராசிரியராகப் பணியாற்றிவரும் ஆனந்த் தெல்தும்டே குறித்து பு.ஜ. வாசகர்களுக்குப் புதிதாக அறிமுகப்படுத்தத் தேவையில்லை. எழுத்தாளர், குடியுரிமை செயல்பாட்டாளர், அரசியல் ஆய்வாளர் - எனப் பல்வேறு தளங்களில் செயல்பட்டு வரும் அவர், தாழ்த்தப்பட்டோர் மீதான அடக்குமுறை, சாதி ஒழிப்பு குறித்துப் பல்வேறு நூல்களை எழுதியிருக்கிறார். தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின மக்களின் உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராடியும் வருகிறார்.

பசுவதை தடைச் சட்டத்தை நாடெங்கும் தீவிரமாக அமல்படுத்த வேண்டும் என்ற ஆர்.எஸ்.எஸ்.இன் நிகழ்ச்சி நிரலை முன்வைத்து, இந்து மதவெறி அமைப்புகள் நாடெங்கும் பரவலாக முசுலீம்கள், தாழ்த்தப்பட்டோர் மீதும்; அறிவுத்துறையினர் மீதும் தாக்குதல் நடத்திவரும் சூழலில், சென்னை ஐ.ஐ.டி.-யில் செயல்பட்டு வரும் அம்பேத்கர் - பெரியார் படிப்பு வட்டம், ‘‘மாட்டுக் கறி உண்பது மற்றும் இந்து எதிர்ப்பு மனோநிலை’’ (Beef Eating and Anti Hindu Psyche) எனும் தலைப்பில் ஒரு கருத்தரங்கை 30.10.2015 அன்று நடத்தியது. புதுச்சேரி பல்கலைக்கழக மாணவர்கள் ‘‘உணவு மற்றும் சமூக-பொருளாதார நிலை, சகிப்புத்தன்மை இன்மை’’ (Food and Socio Economic, Intolerance) எனும் தலைப்பில் ஒரு கருத்தரங்கை 31.10.2015 அன்று நடத்தினர்.

இவ்விரு கருத்தரங்குகளிலும் சிறப்புரையாற்ற வந்திருந்த பேராசிரியர் ஆனந்த் தெல்தும்டேயிடம் **புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் ஐ.டி. பிரிவு** சார்பாக, இன்று நாட்டில் நிலவும் அசாதாரணமான பாசிச சூழல் குறித்து ஒரு நேர்காணல் நடத்தப்பட்டது. அந்நேர்காணல் பு.ஜ. வாசகர்களுக்கு சுருக்கித் தரப்படுகிறது.

- ஆசிரியர் குழு

**● மோடியின் ஆட்சித்திறன் (Governance) பற்றி என்ன நினைக்கிறீர்கள்? அது முந்தைய ஆட்சியைவிட எப்படி வேறுபட்டிருக்கிறது?**

அவரது ஆட்சித்திறன் பரிதாபகரமானதாக இருக்கிறது. இவர் அனைத்துத் தளங்களிலும் தடுமாறுகிறார்; அடுத்தடுத்து எவ்வளவு கீழே இறங்க முடியும் என்பதையே நிரூபிக்கிறார்; பல பொய்களையும் சொல்கிறார். அரசியல் வெற்றிடத்தின் பலனைப் பெற்றிருக்கிறார். குறைந்தபட்சம் நடுத்தர வர்க்கத்தையாவது கவர்வார் என்று எண்ணியிருந்தேன். ஆனால், அவர் எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை. இன்றைய சூழலில் அவர்களது நடவடிக்கைகள் அவர்களையே பூமராங் போல் திரும்பத் தாக்குகின்றன. அவர்களது செயல்கள் மூலம் அவர்கள் அவர்களையே தோற்கடித்துக் கொள்வார்கள். 14 மாதங்களுக்கு முன்பு இருந்தது போன்ற ஆதரவு அவர்களுக்கு தற்போது இல்லை.

**● இந்துக்களை ஒருங்கிணைப்பது தங்களது நோக்கம் என்று அவர்கள் கூறினாலும், பல்வேறு சாதிக் கட்சிகளை அங்கீகரிக்கிறார்கள், ஆதரிக்கிறார்கள். அது குறித்து ...**

அகண்ட பாரதம் என்ற பொய்யைப் பரப்பி இந்துக்களை சனாதன தர்மத்தின் கீழ் ஒருங்கிணைத்து ஆட்சி செய்யவேண்டும் என்பது தான் அவர்களது இலக்கு. குறிப்பிட்ட சாதியினர் மட்டுமே மேலே ஆட்சி செய்யத் தகுதியானவர்கள். அவர்கள் மட்டுமே ஆள வேண்டும், மற்றவர்கள் அவர்களின் கீழ் பணிபுரிய வேண்டும் என்பதுதான் அவர்களது தத்துவம். ஆனால், அவர்களால் இதனை நேரடியாகப் பேச முடியாது. இது குறித்துப் பகிரங்கமாக எழுதியுள்ள கோல்வார்கரின் புத்தகங்களை, அவர்கள் விற்பனையில் இருந்து விலக்கிவிட்டார்கள். அப்புத்தகங்களின் பிரதியை நான்தான் இணையத்தில் வெளியிட்டேன். அவர்களின் நிலை இதுதான். இந்த நிலையை இவர்கள் பகிரங்கமாக வெளியே சொல்ல முடியாது. ஆகவே, அவர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்கிறார்கள். அவர்களிடம் தாழ்த்தப்பட்டோர் வந்தாலும் ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால், அப்படி வருபவர்கள் அனைவரும் ஆதிக்க படிநிலையை ஏற்றுக் கொள்பவர்களாக இருக்க வேண்டும். இதுதான் அவர்களது உச்சகட்ட நிகழ்ச்சி நிரல்.

பேராசிரியர் ஆனந்த் தெல்தும்டே.



**● முற்போக்கு அறிவுஜீவிகளைக் கொலை செய்வது, அவதூறு செய்வது என உதிரி அமைப்புகள்**

**செயல்படுகின்றனவே, அவை தானாகச் செயல்படுபவையா அல்லது வேறு ஏதேனும் முக்கிய அமைப்புகள் இதன் பின்னணியில் செயல்படுகின்றனவா?**

முதலில் அவர்களை உதிரி அமைப்புகள் என்று ஊடகங்கள்தான் பரப்புரை செய்கின்றன. அவர்கள் அனைவரும் சங்கப் பரிவாரத்தின் ஒரு பிரிவே. சிலர் அத்தகைய அடையாளத்துடன் இருப்பார்கள், சிலர் அத்தகைய அடையாளம் இல்லாமல் இருப்பார்கள். அவர்கள் ஆர்.எஸ்.எஸுடன் உள்ள தொடர்பை மறுப்பார்கள். விஷ்வ ஹிந்து பரிஷத்கூட முதலில் ஆர்.எஸ்.எஸ். உடனான தொடர்பை மறுத்தது; பின்னாளில் அவர்களும் சங்கப் பரிவாரத்தின் ஒரு பிரிவினர் என்பது பகிரங்கமாக வெளித் தெரிந்தது. ஆர்.எஸ்.எஸ்-இன் மொழியைப் பேசுகின்ற அனைத்து அமைப்புகளுமே நேரடியாகவோ, மறைமுகமாகவோ சங்கப் பரிவாரத்துடன் தொடர்புடையவர்களே.

**● அரசியலமைப்புச் சட்டம் 370-ஐ நீக்கக் கோருவது, ராமர் கோவில் போன்ற பிரச்சினைகளைத் தள்ளி வைத்துவிட்டு, இப்போது இவர்கள் மாட்டுக் கறி பிரச்சினையை மட்டும் எடுத்திருப்பது குறித்து...**

இப்பிரச்சினை நடுவில் வந்திருக்கிறது. ராமர் கோவில் பிரச்சினையை அவர்கள் கைவிடவில்லை. ஆள் பலம் சேர்த்த பிறகு ராமர் கோவில் பிரச்சினையைக் கையில் எடுப்பார்கள். ராமர் கோவில் கட்டுவதுகூட அவர்களது நோக்கம் அல்ல. இன்னும் சொல்லப் போனால், விசயங்கள் அவர்களுக்குச் சாதகமான முறையில் சென்று கொண்டிருந்தாலும் அவர்கள் கண்டிப்பாக ராமர் கோவிலைக் கட்ட மாட்டார்கள். இவை அனைத்தும் அவர்களது இந்து ராஜ்ஜிய இலக்கை அடைய, மக்களை முனைப்படுத்தும் ஒரு வேலையே.

**● 1990-களில் ராமர் கோவில் பிரச்சினையை முன்வைத்து ஆர்.எஸ்.எஸ். கும்பல் வளர்ச்சியடைந்தது. அப்போது இங்கிருந்த சமூக நீதிக் கட்சிகள் மண்டல், கமண்டலத்தை எதிர்க்கும் என்ற முழக்கத்தை முன்வைத்தனர். அதாவது மண்டல் கமிசனின் இட ஒதுக்கீடு குறித்த அறிக்கை, சாதிய பிரச்சினையைத் தீர்க்கும் என்று கூறினர். அது குறித்து உங்கள் கருத்து என்ன?.**

அனைத்து மண்டல்களும் கமண்டலத்துக்குள் அடங்கிவிடும். அந்தக் காலகட்டத்தில் நான் சென்னையில் இருந்தபோது இங்குள்ள இடதுசாரி அமைப்புகளுடன் இது குறித்து விவாதித்துள்ளேன். இட ஒதுக்கீடு கண்டிப்பாக சாதிப் பிரச்சினையைத் தீர்க்காது. மண்டல் கமிசன் இந்துத்துவத்தின் அடிப்படையாக இருந்தது. மண்டல் கமிசனுக்கும் இந்துத்துவத்துக்கும் நேரடியான தொடர்பு இல்லையென்றாலும்கூட, அப்படி எண்ணுவதற்கான அடிப்படை இருந்தது.

**● மாடு வெட்டுவது தடை செய்யப்பட்டிருப்பது அதனை நம்பியுள்ள குரேஷி மற்றும் தாழ்த்தப்பட்டோர் குடும்பங்களில் எந்தவிதமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது?**

தடை இப்போதுதான் அறிவிக்கப்பட்டுள்ளதால், அதன் விளைவுகள் உடனடியாக வெளித்தெரியவில்லை. அதேசமயம், மாடு வெட்டும் தொட்டிகளில் இஸ்லாமியர்கள், தாழ்த்தப்பட்டோர் மட்டுமல்ல; பிற்படுத்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த பலரும் வேலை செய்கின்றனர். மராட்டியத்தில் எருமைகள் வெட்டுவது இன்னமும் தடை செய்யப்படவில்லை என்பதால், மாடு வெட்டும் தொட்டிகளை முற்றிலுமாக மூடிவிட மாட்டார்கள். இதனால் சில தொட்டிகள் பிழைத்திருக்கலாம். ஆனால், பெரும்பாலான தொழிலாளர்கள் வேலையிழந்து நடுத்தெருவுக்கு வந்துவிடுவார்கள். கடந்த ஆண்டு 34 மில்லியன் டன் இறைச்சி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதில் 20 மில்லியன் டன் மாடுகளிலிருந்தும், 14 மில்லியன் டன் எருமைகளிலிருந்தும் பெறப்பட்டவை. இப்போது மாடு வெட்டுவது தடை செய்யப்பட்டுள்ளதால், 20 மில்லியன் டன் அளவிற்கான உற்பத்தி தடைபடும். இதன் காரணமாகப் பலர் வேலையிழப்பர்.




மகாராஷ்டிரா மாநிலத்தில் இறைச்சிக்காக பசு மற்றும் காளை மாடுகள் வெட்டப்படுவதைத் தடை செய்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து மும்பய் நகரிலுள்ள ஆஸாத் மைதானத்தில் இறைச்சி வியாபாரிகள்-தொழிலாளர்கள், மாட்டுத் தரகர்கள் இணைந்து நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)

**● அருண் ஜெட்லி குற்றம்சாட்டுவது போல சாகித்ய அகாடமி விருதுகளைத் திரும்பத் தருவது திட்டமிட்டு நடப்பதாகக் கருதுகிறீர்களா?**

அது அருண்ஜெட்லியின் கருத்துதானே ஒழிய, அதில் உண்மையில்லை. எல்லாவற்றுக்கும் ஒரு எல்லை உண்டு. பொறுத்துப் பொறுத்துப் பார்த்து ஒரு கட்டத்தில் எழுத்தாளர்கள் தங்களது எதிர்ப்பினைக் காட்டியுள்ளனர். இதற்கு யாராவது ஒருவர் முன் முயற்சியுடன் வந்து தொடங்கி வைக்க வேண்டியிருந்தது. நான் எழுதியுள்ளது போல நேற்றுவரை முதுகெலும்பில்லாமல் கிடந்தவர்கள் இன்றைக்குத்

தங்களது எதிர்ப்பினைப் பதிவு செய்கின்றனர். இது நல்ல விசயம் தான். இது எந்தவிதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தாது. இருந்தாலும், எதிர்ப்பை வேறு எப்படிக் காட்டுவது ? ஆர்.எஸ்.எஸ். கூட்டத்திற்கு வேறு மொழி புரியாது. அவர்களுக்கு புரியும் ஒரே மொழி துப்பாக்கி யின் மொழிதான். காங்கிரஸ் காலத்தில் நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இன்றைக்கு அறிவிக்கப்படாத நெருக்கடி நிலை நீடிக்கிறது.

**● இனி ''தலித் விடுதலை'' என்பது அடையாள அரசியல் முலம்தான் சாத்தியம் எனப் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் தலித் எழுத்தாளர்களும், செயல்பாட்டாளர்களும் இணைந்து வெளியிட்ட போபால் அறிக்கை தற்போதைய சூழலுக்குப் பொருந்துகிறதா?**

போபால் அறிக்கை வெளியிடப்பட்ட அன்றும் சரி, இன்றும் சரி அது முற்றிலும் தொடர்பற்ற ஒருமுட்டாள் தனமான அறிக்கை. உலகமயமாக்கம் அறிமுகப்படுத் தப்பட்ட ஆரம்ப காலகட்டங்களில் அதன் மூலம் பயனடைந்த தலித் எழுத்தாளர்களில் சிலர் அதனை ஆத ரித்து வந்தனர். அது என்னவென்றே தெரியாத காரணத் தால், மற்றவர்கள் மவுனம் சாதித்தனர். ஆனால், உலக மயம் என்றால் தனியார்மயம்தான் எனத் தெரிய ஆரம் பித்தபோது, பொதுத்துறை நிறுவனங்களைத் தனி யாருக்கு விற்கத் தொடங்கிய பிறகு, இடஒதுக்கீடு பறி போகிறது என்ற அடிப்படையில் தலித் எழுத்தாளர்கள், செயல்பாட்டாளர்கள் மத்தியில் அதிருப்தி எழுந்தது. அந்த அதிருப்தியை மடைமாற்றி விடுவதற்காக ஆளும் வர்க்கத்தால் கொண்டுவரப்பட்டதுதான் போபால் அறிக்கை. காங்கிரஸ் கட்சியின் திக் விஜய் சிங்தான் இந்த போபால் மாநாட்டிற்கு ஏற்பாடு செய்தவர். போபால் அறிக்கை, அடையாள அரசியல் பற்றி மட்டும் பேசவில்லை, தலித் விடுதலைக்கு நிலப் பகிர் வில் சில மாற்றங்கள், தலித் மூலதனம், தலித் முத லாளிகள், தனியார் துறையில் இடஒதுக்கீடு என உலக மயமாக்கலின் சந்தைப் பொருளாதாரத்தில் தலித்துகள் போட்டியிடுவதற்கு இவையெல்லாம் தேவை எனப் பல விசயங்களைப் பட்டியலிடுகிறது. இதன் மூலம்




தேவேந்திரர் தன்னார்வ அறக்கட்டளையும் சுதேசி விழிப்புணர்வு இயக்கமும் இணைந்து கடந்த ஆகஸ்டு மாதம் மதுரையில் நடத்திய பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொண்ட பா.ஜ.க. தலைவர் அமித் ஷா.

உலகமயமாக்கல் தலித்துகளுக்கு நல்லது செய்யும் என்பதை நிரூபிக்க முயன்றனர். ''டிக்கி'' (தலித் இந்தியா சேம்பர் ஆஃப் காமர்ஸ்) போன்ற நிறுவனங் கள் அப்போது தொடங்கப்பட்டவைதான். ஆனால், முன்னே கூறியது போல, அது அன்றைக்கும் சரி இன்றைக்கும் சரி பொருந்தாத முட்டாள்தனமான அறிக்கைதான். ஒரு தலித் தொழிலாளியை ஆதிக்கசாதி முதலாளி சுரண்டுவதைவிட, இன்னும் ஒருமடங்கு அதிகமாகச் சுரண்டும் தலித் முதலாளிகளை உருவாக்கு வதைத்தான் அவர்கள் தலித் விடுதலை என்று கூறு கிறார்கள்.

**● இட ஒதுக்கீடு குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டுமா ?**

இன்று இட ஒதுக்கீடு அதற்கான அவசியத்தை இழந்துவிட்டது. ஆனால், இதனை வெளிப்படை யாகப் பேச முடியாது. ஏனெனில், இது ஒரு பெரிய மனத்தாங்கலான விசயமாகிவிட்டது. இப்போது ஐ.ஐ.டி. யில் அனைத்து சீட்டுகளும் நிரப்பப் பட்டுவிட்டன. ஆனால், தலித்துகளுக்கு உரிய இட ஒதுக்கீடு முழுமையாக அவர் களுக்குப் போய் சேரவில்லை. ஏனெனில், இட ஒதுக்கீடு என்பது இங்கே பலனடைந் தவர்களுக்கு மீண்டும் பலனடையச் செய் யக்கூடியதாக இருக்கிறது.

**● சாதியை ஒழித்துக்கட்டுவதில் அம் பேத்கர் முன்வைத்த கருத்துகளின் தற்கால பொருத்தப்பாடு பற்றிய உங்கள் கருத்து...**

சாதியை ஒழிப்பதற்காக அம்பேத் கரால் முன்வைக்கப்பட்ட வழிமுறைகளை நான் எப்போதும் ஏற்றுக்கொண்டதில்லை. சாதியை ஒழித்துக்கட்ட வேண்டும், அதைச் சீர்திருத்த முடியாது என்பதும் சரியானதே. அம்பேத்கர் இந்து மதத்தை முற்றாகப் புறக் கணிக்கவில்லை. இந்து மதத்தை இரண்டாகப் பார்க் கிறார்; ஒன்று, விதிகளை உள்ளடக்கிய மதம்; மற்றது, கொள்கைகளை உள்ளடக்கிய மதம். பெரும்பான்மை மக்களின் மீது ஆதிக்கம் செலுத்தாத உபநிடதங்கள் அடங்கிய, கொள்கைகளை உள்ளடக்கிய மதத்தை அவர் எதிர்க்கவில்லை; ஆனால், ஸ்மிருதிகள், புராணங்கள் மற்றும் பார்ப்பனியம் உள்ளிட்ட சாதிய அமைப்பை நடைமுறைப்படுத்தும் வேர்களான, விதி களை அடிப்படையாகக் கொண்ட மதத்தை எதிர்த்தார். அதனால்தான் தர்ம சாஸ்திரங்களை வெடிவைத்துத் தகர்க்க வேண்டும் எனக் கூறுகிறார். ஆனால், எக்காலத் திலும் ஒரு இந்து தன்னுடைய தர்ம சாத்திரங்களை எரிக்கவோ வீழ்த்தவோ தயாராக இருக்க மாட்டான், அதனால் இந்து மதத்திலிருந்து வெளியேறுவதாகக் கூறினார். சாதி என்பது மதத்துடன் மட்டும் கட்டுண்டு கிடப்பதில்லை. மாறாக, அது மக்களின் வாழ்க்கை முறையில் பின்னிப் பிணைந்துள்ளது, அதனால் மதத்தி லிருந்து வெளியேறுவது போன்ற அவர் முன்வைத்த கருத்துகள் ஒரு தீர்வைத் தராது. ●

## சிவகங்கை சிறுமி மீதான பாலியல் வன்கொடுமை:

# சமூகம் மற்றும் அரசு உறுப்புகளின் அருவருக்கத்தக்க வீழ்ச்சி!

**தந்தை, அண்ணன், போலீசு அதிகாரிகள் உள்ளிட்ட கயவர்களால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட சிறுமியின் வழக்கு மெத்தனமாக நடத்தப்படுகிறது.**

தமிழகத்தின் தென்பகுதியிலுள்ள சிறு நகரமான சிவகங்கையைச் சேர்ந்த சுகந்தி, திவ்யா என்றெல்லாம் ஊடகங்களால் அழைக்கப்படும் சிறுமி மீது நடத்தப் பட்டுள்ள தொடர் பாலியல் வன் கொடுமை நமது ஈரக்குலையை நடுங்க வைப்பதாக உள்ளது. இந்தச் சம்பவம் மிகக் கொடூரமான கிரிமினல் குற்றம் என் பதையும் தாண்டி, குடும்பம், சட்டபூர்வ அதிகார அமைப்புகள், அறம் ஆகிய வற்றின் அதலபாதாள வீழ்ச்சியையும் எடுத்துக்காட்டுகிறது.

அந்தச் சிறுமி அவளின் எட்டு வயதி லிருந்தே கட்டாய பாலியல் வல்லுறவில் சிக்கவைக்கப்பட்டுச் சிதைக்கப்பட்டிருக் கிறாள். குழந்தைப் பருவத்திலேயே தாயை இழந்து அநாதரவாக நின்ற அச் சிறுமியைப் பாதுகாத்து வளர்த்து ஆளாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் கொண்ட தாத்தா, அப்பா, அண்ணன், மாமா ஆகியோர், அதற்கு மாறாக அவளைச் சிறுமி என்றும்கூடப் பாராமல் திரும்பத்திரும்ப பாலியல் பலாத்காரப் படுத்தியதாக அச்சிறுமியே வாக்குமூலம் அளித்திருக்கிறார். இவர்களோடு, அவளின் நெருங்கிய உறவினர்களான சுரேஷ்குமார், செந்தில்குமார்; அண்ணனின் நண்பன் அரவிந்த்; பக்கத்து வீட்டில் வசித்துவந்த நடத்துநர் நமச்சிவா யம் எனப் பல மிருகங்கள் அச்சிறுமியின் அநாதரவான நிலைமையைப் பயன் படுத்திக்கொண்டு சின்னாபின்னாபடுத்தி யிருக்கிறார்கள்.

தனக்கு நேர்ந்த இந்த சகிக்க முடியாத கொடுமையைத் தனது அத்தை செல்வியிடம் சொன்னதையடுத்து, அவர் தன்னை சிவகங்கை போலீசு நிலையத் திற்கு அழைத்துச் சென்று போலீசு உதவி ஆய்வாளர் சங்கரிடம் புகார் கொடுக்க வைத்ததாகவும், அவரோ குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாகத் தன்னை மிரட்டியே பலமுறை பாலியல் பலாத்காரப்படுத்தியதாகவும் வாக்குமூலத்தில் கூறியிருக்கிறார், அச்சிறுமி. போலீசு உதவி ஆய்வாளர் சங்கர் அந்த சிறுமியைப் பலமுறை மதுரைக்கு அழைத்துச் சென்று, வலுக்கட்டாயமாக சாராயத்தைக் குடிக்க வைத்து பாலியல் பலாத்காரப்படுத்தியிருப்பதோடு, தனக்கு நெருக்க மான நுண்ணறிவுப் பிரிவைச் சேர்ந்த ஆய்வாளர் சிவக்குமார், கான்ஸ் டபிள் ராஜாராம் ஆகியோருக்கும் அச்சிறுமியைப் பலியாக்கியிருக் கிறான். இந்த மிருகங்கள் அச்சிறுமியைக் கும்பல் பாலியல் வன் கொடுமைக்கு ஆளாக்கியுள்ளன. சிவக்குமார், தான் மட்டுமின்றி, அச்சமயத்தில் தென் மாவட்ட ஐ.ஜி. யாக இருந்த அதிகாரி உள்ளிட்ட மூன்று உயர் போலீசு அதிகாரிகளுக்கும் அச்சிறுமியைக் கூட்டிக் கொடுத்து சீரழித்திருக்கிறான். இந்த உண்மைகளை அச்சிறுமி வாக்குமூலமாக அளித்திருக்கிறார் என்பது ஒருபுறமிருக்க, விசாரணையின் ஆரம்ப நிலையிலேயே போலீசின் குற்றங்கள் அனைத்தும் அம்பலத்திற்கு வந்துவிட்டன.

அச்சிறுமி தனக்கு நேர்ந்த கொடுமைகளையும், தன்னைச் சீரழித்த குற்றவாளிகளையும் கடந்த ஜூன் மாதமே காரைக்குடி நகர மாஜிஸ் டிரேட்டிடம் வாக்குமூலமாக அளித்துவிட்டார். தன்னைப் பாலியல் பலாத்காரப்படுத்திய சிவக்குமாரை அடையாளம் காட்டியிருப் பதோடு, மற்ற போலீசு அதிகாரிகளின் அடையாளங்களையும் குறிப் பிட்டுக் கூறியிருக்கிறார். ஆனாலும், கடந்த செப்டம்பர் வரையிலும் அச்சிறுமியின் தந்தை முத்துபாண்டி, அண்ணன் கார்த்திக் ஆகிய இரு வரும் கைது செய்யப்பட்டதற்கு அப்பால், இந்த வழக்கு ஒரு அடி கூட நகரவில்லை. சென்னையில் ஏ.டி.ஜி.பி. பதவியில் உள்ள போலீசு அதிகாரி, மற்றும் உதவி ஆணையர், ஐ.ஜி. பதவிகளில் உள்ள இரு போலீசு அதிகாரிகளின் பெயர்கள் குற்றவாளிகளின் பட்டியலில் இருப்பதனாலேயே, விசாரணை திட்டமிட்டு முடக்கி வைக்கப் பட்டது. சிறுமியிடம் வாக்குமூலத்தைப் பெற்ற நீதிமன்றமும் போலீசின் கூட்டுக் களவாணியாகச் செயல்படுகிறது.

இந்த நிலையில்தான் சென்னையைச் சேர்ந்த வழக்குரைஞர் வின் சென்ட் இந்த வழக்கு விசாரணையை சி.பி.ஐ.-யிடம் ஒப்படைக்கக் கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் பொதுநல வழக்கு தொடுத்தார். இதனைத் தொடர்ந்து உதவி ஆய்வாளர் சங்கர் உள்ளிட்ட எட்டு பேர் அடுத்தடுத்து கைது செய்யப்பட்டாலும், நுண்ணறிவு ஆய்வாளர் சிவக்குமாரும், அவனோடு கூட்டுச் சேர்ந்து அச்சிறுமியைச் சீரழித்த

உயர் போலீசு அதிகாரிகளும் கைது செய்யப்பட வில்லை. இக்குற்றத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரி களின் பெயரைக்கூட வெளியிடாமல் அவர்களைக் கம்பி எண்ணுவதிலிருந்து காப்பாற்றத் துடிக்கிறது, தமிழக போலீசு. இவ்வழக்கு விசாரணை ஏதோ உண்மையாகவும் வேகமாகவும் நடைபெறுவது போலக் காட்டுவதற்காகவே சி.பி.சி.ஐ.டி.யிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

தமிழக போலீசு காமுகர்களின் கூடாரம் என்பதை சிவகாசி ஜெயலட்சுமி விவகாரம் ஏற்கெனவே அம் பலப்படுத்தியிருக்கிறது. இந்த வழக்கு விசாரணையின் போக்கில் அதனை உறுதிப்படுத்தும் பல்வேறு ஆதாரங் கள் கிடைத்துள்ளன. குறிப்பாக, நுண்ணறிவு ஆய் வாளர் சிவக்குமார் தனக்கு ஒதுக்கப்பட்ட ''டியூட் டியை''ப் பார்ப்பதைவிட, அப்பாவி பெண்களை வேட் டையாடும் காமுகனாவும், தன்னால் வேட்டையாடப் பட்ட பெண்களைத் தனது மேலதிகாரிகளுக்குக் கூட்டிக் கொடுக்கும் புரோக்கராகவும் செயல்பட்டு வந்திருக்கிறான். குறிப்பாக, இவ்வழக்கில் சம்பந்தப் பட்ட ஒரு போலீசு உயர் அதிகாரி தூத்துக்குடி பகுதியில் எஸ்.பி. ஆக இருந்த காலத்திலிருந்தே, இந்த சிவக்கு மார்தான் அவருக்கு ''வெத்தலைப் பெட்டியாக'' இருந்து வந்திருக்கிறான். அந்த அதிகாரிக்கு மதுவும் மாதுவும் சப்ளை செய்வதன் மூலமே தன் மீது எடுக்கப் பட்ட துறை விசாரணைகள் அனைத்தையும் ஒன்று மில்லாமல் செய்திருக்கிறான். அந்த அதிகாரி மதுரை யில் ஐ.ஜி.யாக பதவியேற்றுக் கொண்டவுடன், சிவக் குமாரை மதுரைக்கு இடமாற்றம் செய்திருக்கிறார். சிவக்குமார் தன் பங்குக்கு இந்தச் சிறுமி உள்ளிட்டுப் பல பெண்களை அந்த அதிகாரியின் இச்சைக்குப் பலி கொடுத்திருக்கிறான். (தினகரன், 9.10.2015, பக்.11)



சிவகங்கை சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள குற்றவாளிகள்: (கடிகாரச் சுற்றுப்படி) சிறுமியின் தந்தை முத்துப்பாண்டி, சகோதரன் கார்த்திக் மற்றும் அரவிந்த், முத்துராக்கு, சுரேஷ், நமச்சிவாயம், செந்தில், போலீசு துணை ஆய்வாளர் சங்கர்.

''இந்த வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்கு இது முதல் சம்பவம் இல்லை. அவர்கள் எஸ்.பி.யாகப் பணியாற்றிய காலத்தில் இருந்தே பெண்கள் விசயத்தில் படுமோசமாக இருந் துள்ளனர். இப்போது, ஐ.ஜி., ஏ.டி.ஜி.பி. என முக்கியப் பொறுப்புகளுக்கு வந்த பிறகும் பெண்கள் விசயத்தில் மோசமாக இருக்கின்றனர். அவர்கள் மீது பல செக்ஸ் குற்றச்சாட்டுகள் வந்தபோதெல்லாம் தங்கள் அதிகா ரத்தையும் செல்வாக்கையும் வைத்து மூடிமறைத்து விட்டனர்'' எனக் குறிப்பிடுகிறது, ஜூ.வி. இதழ். (25.10.15, பக்.03)

இருபது ஆண்டுகளுக்கு முன்பு கேரளாவில் நடந்த சூரியநெல்லி பாலியல் வன்கொடுமை வழக்கில் பாதிக் கப்பட்ட சிறுமியை முப்பதுக்கும் மேற்பட்டோர் நாற்பது நாட்களாகத் தொடர்ந்து பாலியல் வன் புணர்ச்சிக்கு ஆளாக்கிச் சீரழித்தனர். ஒருவிதத்தில் அதனைவிடக் கொடூரமானது சிவகங்கை சிறுமியின் கதை. இவள் நான்கு ஆண்டுகளாக 26 பேரால் மாறி மாறி பாலியல் வன்முறைக்கும், கும்பல் பாலியல் வன் புணர்ச்சிக்கும் ஆளாகி, சித்திரவதையை அனுபவித்து, தற்கொலைக்கு முயன்று தப்பித்து, நடைப்பிணமாக நடமாடிக் கொண்டிருக் கிறாள். ஆனாலும், நமது நீதியரசர்கள் அவள் அனுபவித்த சித்திரவதை யெல்லாம் ஒரு பொருட்டாகக் கரு தாமல், மற்றொரு சாதாரண குற்ற வழக் காகவே இதனையும் கருதி விசா ரணையை மெத்தனமாக நடத்தி வருகி றார்கள். போராடும் வழக்குரைஞர்களை கிரிமினல்கள் என சாடி, அவர்களின் தொழில் உரிமத்தைப் பறிக்கத் துணிந்த நீதியரசர்களுக்கு, போலீசு அதிகாரிகள் அச்சிறுமிக்கு இழைத்துள்ள குற்றங்கள் பெரிதாகப்படவில்லை. குற்றமிழைத்த போலீசு அதிகாரிகளின் பதவியைப் பறிக் காமலேயே விசாரணை நடைபெறுவதை அவர்கள் அனுமதித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய அச்சிறுமியின் தந்தை, அண்ணன் உள்ளிட்ட சாதாரண நபர்கள், அவர்கள் மீது குற்றஞ்சுமத்தப்பட்டவுட னேயே கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டுவிட்டனர். ஆனால், அதே குற்றத்தைச் செய்த போலீசு அதிகாரிகளின் அடையாளங்கள் மறைக்கப்படு கின்றன; அவர்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட வில்லை; அவர்கள் கைது செய்யப்படுவதற்கு மாறாக, அவர்களைத் தப்பவைப்பதற்கான முயற்சிகள் நடப்ப தாக பத்திரிகைகள் செய்திகளை வெளியிடுகின்றன. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற தத்துவமெல் லாம் போலீசுக்காரன்கள் முன் செல்லாக்காசாக நிற் கிறது. சாதாரண நபர்களுக்குக் கிடைக்காத இந்தப் பாது காப்புதான், நாலாவிதமான கிரிமினல் குற்றங்களைச் செய்யும் துணிச்சலையும் திமிரையும் போலீசுக்காரன் களுக்கு அளிக்கிறது.

''பாரதிய குடும்பங்கள்தான் பெண்களுக்குப் பாது காப்பு அளிக்கும் மிகச் சிறந்த அமைப்பு முறை'' என

ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள் வக்காலத்து வாங்கி வரும் வேளையில்தான், தான் பாதுகாக்க வேண்டிய ஒரு சிறுமியை குடும்பமே பாலியல் வன்முறைக்கு ஆளாக்கிய வக்கிரம் வெளிவந்திருக்கிறது. இந்தச் சம்பவம் விதிவிலக்கானது என ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. பெண்கள் மீதான பாலியல் வன்முறைத் தாக்குதல்களில் அப்பா, அண்ணன், மாமா உள்ளிட்ட நெருங்கிய உறவினர்களும், அக்கம் பக்கத்தில் வசிக்கும் ''அங்கிள்களும்'' கணிசமாக இருப்பதைப் பல புள்ளிவிவரங்கள் அம்பலப்படுத்தியுள்ளன. ஒருபுறம் ஆணாதிக்க கருத்துக்களும், இன்னொருபுறம் நுகர்வு வெறிப் பண்பாடு பரப்பும் வக்கிரங்களும் இணைந்து பெண்களுக்குத் தெரு மட்டுமல்ல, வீடும்கூட பாதுகாப்பற்றது என்ற சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளன. கட்டுப்பாடற்ற குடிப்பழக்கம் இந்தச் சூழ்நிலையை மென்மேலும் மோசமாக்கி, குடும்பத்தைப் பெண்களுக்கு அச்சமூட்டக்கூடிய இடமாக மாற்றியிருக்கிறது.

அதனை வெடிவெடித்துக் கொண்டாடியது தமிழகம். இந்தச் சம்பவத்திலும் ஒரு சிறுமி திரும்ப திரும்ப பாலியல் வல்லுறவுக்கு ஆளாகியிருக்கிறார். 'சட்டத்தைக் காக்க வேண்டிய பொறுப்புமிக்க' போலீசு அதிகாரிகளுள் சிலர் குற்றவாளிகள் என அடையாளம் காணப்பட்டிருக்கிறார்கள். கோவை சம்பவத்திற்கு அளிக்கப்பட்ட 'நீதி'யின்படி பார்த்தால், அந்த காக்கிச் சட்டை குற்றவாளிகளை நடுத்தெருவில் தூக்கில் போட்டிருக்க வேண்டும். ஆனால், குற்றவாளிகளோ இன்னும் அதிகாரமிக்க பதவிகளில் இருந்து வருகிறார்கள். அந்த போலீசு அதிகாரிகளைப் பதவியிலிருந்து நீக்கு என்ற குறைந்தபட்ச நியாயத்தைக் கேட்கக்கூடத் திராணியற்று, மௌனம் காக்கிறது, தமிழகம். அந்தளவிற்கு அதிகாரத்தைக் கண்டு பயப்படும் இழிநிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது, தமிழகம்.

சூரியநெல்லி வழக்கில் ஒரு அரைகுறையான தீர்ப்பைப் பெறுவதற்குப் பாதிக்கப்பட்ட சிறுமியும்,



**"கோவையில் ஒரு சிறுமியைப் பாலியல் பலாத்காரப்படுத்திய குற்றவாளிகளுள் ஒருவனைத் தமிழக போலீசு 'போலி' மோதலில் கொன்றதை வெடிவெடித்துக் கொண்டாடியது தமிழகம். ஆனால், இச்சிறுமியைச் சீரழித்த போலீசு அதிகாரிகளைப் பதவியிலிருந்து நீக்கு என்று கேட்கக்கூடத் திராணியற்று மௌனம் காக்கிறது."**

டெல்லியில் நிர்பயா எனப்பட்ட மருத்துவ மாணவி கும்பல் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்ட வழக்கை ஊடகங்கள் மிகப் பெரிய அளவிற்கு விவாதத்திற்கு உள்ளாக்கின. அக்குற்றத்தைச் செய்தவர்களைக் கடுமையாகத் தண்டிக்கக் கோரி பெருந்திரளான மக்கள் பங்கேற்ற போராட்டங்கள் டெல்லியில் நடந்தன. ஆனால், தமிழகத்தில்? போலீசு அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருப்பதாலேயே இந்தச் சிறுமிக்கு இழைக்கப்பட்ட அநீதியை தமிழ் ஊடகங்கள் ஒதுக்கி வைத்துவிட்டன. ஓரிரு பத்திரிகைகளில் வழியாக இந்தச் சிறுமிக்கு நேர்ந்த கொடுமை வெளியே தெரிந்த பிறகும் அதைக் கண்டித்து எந்தவொரு ஆர்ப்பாட்டமோ, கண்டனங்களோ ஓட்டுக்கட்சிகளிடமிருந்தும் வரவில்லை. தமிழக மக்களும் இந்தப் பிரச்சினையின் தீவிரத்தைக் கண்டுகொள்ளவில்லை.

கோவையில் ஒரு சிறுமியைப் பாலியல் பலாத்காரப்படுத்திய குற்றவாளிகளுள் ஒருவனைத் தமிழக போலீசு 'போலி' மோதலில் சுட்டுக் கொன்ற சமயத்தில்,

பல்வேறு மகளிர் அமைப்புகளும் ஏறத்தாழ 18 ஆண்டுகள் போராட வேண்டியிருந்தது. சிவகங்கை சிறுமி வழக்கிலோ ஆரம்பகட்ட விசாரணையே செல்வாக்கு படைத்த குற்றவாளிகளைத் தப்ப வைக்கும் நோக்கில் நடத்தப்படுகிறது. இந்த வழக்கில் சி.பி.ஐ. விசாரணை கோரியுள்ள வழக்குரைஞர் வின்சென்ட் மீது குண்டர்களை ஏவிவிட்டு தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. குற்றமிழைத்த போலீசு அதிகாரிகளைப் பணியிலிருந்து நீக்க முன்வராத ஜெயா அரசு, பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு மூன்று இலட்சம் ரூபாய் இழப்பீடு கொடுத்து வழக்கை நீர்த்துப் போகச் செய்ய முயலுகிறது. இந்த நிலையில் தமிழக மக்கள் தொடர்ச்சியான, துணிச்சலான போராட்டத்தை நடத்தாமல், பாதிக்கப்பட்ட சிவகங்கை சிறுமிக்கு முழுமையான நீதி கிடைக்காது என்பது உறுதி. ஆனால், தமிழகமோ அமைதி காக்கிறது. இந்த அமைதிதான் அந்தச் சிறுமிக்கு நேர்ந்த கொடுமையை விட அச்சுறுத்துவதாக உள்ளது.

● குப்பன்

## பொருளாதார முற்றுகையில் நேபாளம்:

# இந்தியாவின் திரைமறைவு போர்!

**நேபாள விவகாரத்தில் பெரிய அண்ணன் அணுகுமுறையைத்தான் தொடர்ந்து இந்தியா பின்பற்றி வருகிறது.**

இந்தியாவின் அண்டை நாடான நேபாளத்தில் புதிய அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டு கடந்த செப். 20-ஆம் தேதி முதலாக நடைமுறைக்கு வந்துள்ளது. 2006-ஆம் ஆண்டில் மன்னராட்சிக்கு எதிரான நேபாள மக்களின் பேரெழுச்சிக்குப் பின்னர், அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் நடத்தப்பட்டு, மன்னராட்சி முறை 2008-ஆம் ஆண்டில் முடிவுக்கு வந்தது. அதன் பின்னர் கடந்த 8 ஆண்டுகளாக இழுபறியில் இருந்த புதிய அரசியலமைப்புச் சட்டம், தற்போது அரசியல் நிர்ணய சபையில் அறுதிப் பெரும்பான்மையுடன் இறுதியாக்கப்பட்டுள்ளது. நேபாள ஐக்கிய மா-லெ கட்சியின் தலைவரான பிரசாத் சர்மா ஒளி, நேபாளத்தின் புதிய பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.


விகிதாச்சார பிரதிநிதித்துவ அடிப்படையில் அரசியல் கட்சிகள் போட்டியிடும் தேர்தல் முறை, தாழ்த்தப்பட்டோர் மற்றும் பெண்களுக்கு இட ஒதுக்கீடுகள், குடிமக்களுக்கு அடிப்படை ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டுதல், மைய அரசு, மாநில அரசு, உள்ளாட்சி - என மூன்று மட்டங்களில் அரசாங்கம் இயங்குதல் முதலான அம்சங்களைக் கொண்டுள்ள இப்புதிய அரசியல் சட்டம், நேபாளத்தை மதச்சார்பற்றக் குடியரசாக அறிவித்துள்ளது.

இதுநாள்வரை, உலகின் ஒரே இந்து நாடு என்று நேபாளத்தைப் பெருமையுடன் குறிப்பிட்டு வந்த இந்துத்துவ சக்திகள், இப்போது அந்நாட்டின் அரசியலமைப்புச் சட்டம் நேபாளத்தை மதச்சார்பற்ற குடியரசாகப் பிரகடனம் செய்துள்ளதைக் கண்டு ஆத்திரமடைந்துள்ளன. கேவலம், பசுபதி நாதர் கோயில் பூசாரியை மாற்றியதற்கே நேபாளத்தில் தலையிட்ட இந்தியா, இப்போது தன்னை மதச்சார்பற்ற நாடாக நேபாளம் அறிவித்துள்ள நிலையில் சும்மா இருக்குமா?

இச்சட்டம் இறுதியாக்கப்பட்ட பிறகு, மோடி அரசு தனது வெளியுறவுத்துறை செயலாளர் ஜெய்சங்கரை நேபாளத்துக்கு அனுப்பி அரசியலமைப்புச் சட்டம் பிரகடனம் செய்யப்படுவதை நிறுத்தி வைக்க நிர்ப்பந்தித்தது. அது பலனளிக்காமல் போனதால், இந்திய எல்லையை ஒட்டிய நேபாளத்தின் தென்பகுதியில் வாழும் மாதேசியினரைக் கொண்டு கலகத்திலும் சீர்குலைவு நடவடிக்கைகளிலும் இந்திய அரசு இறங்கியது.

மாதேசிகள் எனப்படுவோர் நீண்ட நெடுங்காலத்துக்கு முன்னர் நேபாளத்தின் தென்பகுதி எல்லையில் குடியேறிய இந்திய வம்சாவளியினர். இவர்களில் பெரும்பான்மையோர் நிலப்பிரபுத்துவ ஆதிக்க சாதியினராவர். இன்றும் கூட உ.பி., பீகார் பகுதிகளில் இரத்த வழிஉறவுகளையும் வர்த்தக உறவுகளையும் கொண்டுள்ளவர்கள். ஏற்கெனவே மாதேசிகளைக் கொண்டு நேபாள அரசியலமைப்புச் சட்டத்தை நிறைவேற்ற விடாமல் பல வழிகளிலும் சீர்குலைத்து வந்த இந்திய அரசு, இப்போது அவர்களைக் கொண்டு நேபாள அரசியல் சட்டத்துக்கு எதிரான கலவரங்களைத் தூண்டிவிட்டு வருகிறது. மாதேசிகள் நடத்திவரும் கலவரங்களினால் இதுவரை 40-க்கும் மேற்பட்டோர் மாண்டு போயுள்ளனர்.

மாதேசிகள் அடர்த்தியாக வாழ்ந்துவரும் பகுதிகள், நேபாளத்தின் புதிய மாகாணங்கள் பலவற்றிலும் பிரிக்கப்பட்டு, அவர்கள் நாடாளுமன்றத்திலும் அரசு அதிகாரத்திலும் முக்கிய பங்கு வகிக்க முடியாதவாறும், நேபாளிகளே அதிக அளவு பிரதிநிதித்துவம் பெறும் வகையிலும் புதிய அரசியல் சட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. மாதேசி மக்களைக் கொண்டு நேபாள அரசியலில் தலையிட்டுத் தனக்குச் சாதகமான சூழலை உரு



வாக்கிக் கொள்வதுதான் இந்தியாவின் நோக்கமாக உள்ளது. இதன்படியே, அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'மதச்சார்பின்மை' என்ற சொல்லை அகற்ற வேண்டுமெனவும், மாதேசிகளுக்கெனதனி மாநிலம் அமைக்கப்பட வேண்டுமெனவும் கருப்புக் கொடியேற்றி அரசியலமைப்புச் சட்டத்தின் நகலை எரித்து, இந்திய உளவுத்துறை அதிகாரிகளின் வழிகாட்டுதலுடன் கலவரங்களை நடத்திய மாதேசிகள், இந்திய எல்லையை ஒட்டிய நெடுஞ்சாலைகளை மறித்து சரக்குப் போக்குவரத்தை முற்றாக முடக்கி வைத்துள்ளனர்.

தமது நாட்டுக்குள் நுழையும் அனைத்து அந்நிய வாகனங்களுக்கும் முழுப் பாதுகாப்பு அளிப்பதாக நேபாள அரசு உறுதியளித்துள்ள போதிலும், மாதேசிகள் நடத்தும் போராட்டம் காரணமாக இந்தியாவிலிருந்து சரக்கு வாகனங்களை அனுப்ப முடியவில்லை என்று நியாயவாதம் பேசிக்கொண்டு சரக்கு போக்குவரத்தை இந்திய அரசு வேண்டுமென்றே முடக்கி வைத்துள்ளது. இதனால் எரிபொருள், மருந்து, அத்தியாவசிய உணவுப் பொருட்கள் முதலானவை கிடைக்காமல் நேபாள மக்கள் தத்தளிக்கின்றனர். அமெரிக்க மேலாதிக்க வல்லரசு கூட ஒரு நாட்டின் மீதான பொருளாதாரத் தடையை, தனது சூப்பர்-301 சட்டத்தைக் காட்டியோ அல்லது ஐ.நா. மன்றத்தின் மூலமோ அறிவித்துவிட்டுத்தான் செய்கிறது. ஆனால், நேபாளத்தின் புதிய அரசியல் சட்டத்தை வரவேற்பதாகக் கூறிக்கொண்டே, மறுபுறம் அந்நாட்டின் மீது அறிவிக்கப்படாத பொருளாதாரத் தடையை விதித்து இந்தியா அச்சுறுத்தி வருகிறது.

இப்பொருளாதாரத் தடையை நீக்கக் கோரி நேபாள துணைப் பிரதமர் கமல் தாபா, டெல்லிக்கு வந்து 3 நாட்கள் பேச்சுவார்த்தை நடத்திய பின்னரும், நேபாளத்தின் மீதான இந்தியாவின் அறிவிக்கப்படாத பொருளாதாரத் தடை இன்னமும் நீக்கப்படவில்லை.

தெற்காசிய மேலாதிக்க வல்லரசாக உள்ள இந்தியா, நேபாள விவகாரத்திலும், இலங்கை, மாலத்தீவுகள், பூடான் முதலான அண்டை நாடுகளின் உறவிலும் பெரிய அண்ணன் அணுகுமுறையைத்தான் தொடர்ந்து பின்பற்றி வருகின்றது. அது இப்போது உச்சத்துக்குச் சென்றுள்ளது. தங்கள் நாட்டுக்கான அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிக் கொள்ள நேபாளத்துக்கு உள்ள சுயாதிபத்திய உரிமையை அலட்சியப்படுத்தி, தனது இந்துத்துவ மற்றும் பிராந்திய மேலாதிக்க நோக்கங்களுக்கு ஏற்ப நேபாளம் இருக்க வேண்டுமென நிர்பந்திக்கும் வகையில்தான் மோடி அரசின் அணுகுமுறை உள்ளது.

மாதேசி விவகாரத்தை வைத்து மோடி அரசு மூக்கை நுழைப்பதை, இந்தியா தேவையில்லாமல் தலையிடுவதாகவும், வரம்பு மீறுவதாகவும் நேபாள ஊடகங்கள் கடுமையாக எதிர்த்துச்சாடி வருகின்றன. நேபாளத்தில் ஒளிபரப்பாகும் இந்தியத் தொலைக்காட்சிகளை அந்நாட்டு ஆபரேட்டர்கள் நிறுத்தியுள்ளனர். இந்தியாவின் இப்பொருளாதார முற்றுகையானது, நேபாள சாமானிய மக்களிடம் ஆத்திரத்தைக் கிளறிவிட்டு, இந்தியாவின் தேசியக் கொடியும் மோடியின் உருவப் பொம்மைகளும் தீயிடப்பட்டு ஆர்ப்பாட்டங்கள் நடக்கின்றன. ''சார்க்'' நாடுகளுக்கிடையே வர்த்தக ரீதியான வாகனப் போக்குவரத்தை ஊக்கப்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதற்கு நேர்மாறாக இந்தியாவின் செயல்பாடுகள் அமைந்துள்ளன என்று சாடுகிறார், வங்கதேச வர்த்தகத்துறை அமைச்சர். நேபாளத்தில் தலையீடு செய்யாதே என்று இந்தியாவின் பல்வேறு மனித உரிமை அமைப்புகள், பிரபல கல்வியாளர்கள், பத்திரிகையாளர்கள் உள்ளிட்ட பல்வேறு அறிவுத்துறையினரும் கையொப்பமிட்டு அறிக்கை வெளியிட்டு இந்திய அரசின் இம்மேலாதிக்க நடவடிக்கையைக் கண்டித்துள்ளனர்.




''நேபாளத்தில் தலையிடாதே! பொருளாதாரத் தடை விதித்து அச்சுறுத்தாதே!'' என்ற முழக்கத்துடன் இந்திய அரசுக்கு எதிராக நேபாள மாணவர்கள்-இளைஞர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம்.

ஆனாலும், நாற்புறமும் நிலத்தால் சூழப்பட்ட ஒரு நாட்டுக்குச் செல்லும் அத்தியாவசியப் பொருள் போக்குவரத்தை அண்டை நாடுகள் தடை செய்யக் கூடாது என்ற அனைத்து நாட்டு பொதுவிதிகளுக்கு எதிராகவே இந்தியா நடந்து கொள்கிறது. ஏற்கெனவே பின்தங்கிய நிலையிலுள்ள நேபாளத்தில் கடந்த ஏப்ரலில் நிலநடுக்கப் பேரழிவு ஏற்பட்டு அந்நாட்டின் மக்கள் இன்னமும் மறுவாழ்வின்றி தத்தளிக்கின்றனர். குளிர்காலம் நெருங்கும் சூழலில் அறிவிக்கப்படாத பொருளாதாரத் தடை விதித்து, நேபாளத்தை இந்து நாடாக்கு, இல்லையேல் பட்டினியிலும் குளிரிலும் செத்துத் தொலை என்று எச்சரிக்கிறது இந்திய மேலாதிக்க அரசு. அநீதியான, மனிதநேயமற்ற இப்பொருளாதாரத் தடையையும் நேபாளத்தின் மீதான இந்தியாவின் மேலாதிக்கத்தையும் எதிர்த்து இந்திய குடிமக்கள் அம்பலப்படுத்திப் போராடுவதுதான், இந்தியாவின் பொருளாதார முற்றுகையால் பரிதவிக்கும் நேபாள மக்களுக்கு உதவும் உண்மையான நிவாரணப் பணியாக இருக்க முடியும்.

● குமார்

# ஏழைகள் என்றால் இத்துணை இளப்பமா?

கடந்த செப்டம்பர் மாதத்தில் டெல்லியிலுள்ள சவூதி அரேபிய தூதரக முதன்மைச் செயலாளரான மஜீத் ஹசன் அசூர், நேபாள நாட்டைச் சேர்ந்த இரண்டு பெண்களைப் பாலியல் அடிமையாக வைத்து சித்திரவதை செய்த விவகாரம் நாட்டையே அதிர்ச்சிக் குள்ளாக்கியுள்ளது. கும்பல் பாலியல் வன்முறை, இயற்கைக்கு மாறான உடலுறவு, ஆபாச வசவுகளுடன் அடித்துத் துன்புறுத்தல், பட்டினி போட்டு சித்திரவதை - என அப்பெண்கள் நாயைவிடக் கேவலமாக நடத்தப்பட்டு கொடூரமாக வதைக்கப் பட்டுள்ளனர்.

நேபாளத்தைச் சேர்ந்த 30 மற்றும் 50 வயதாகும் இவ்விரு பெண்களும் சவூதி அரேபியாவில் வீட்டுப் பணியாளராக வேலை வாங்கித் தருவதாகக் கூறிய டெல்லியைச் சேர்ந்த பெண் கடத்தல் பேர்வழியிடம் ஏமாந்து, தரகர்கள் மூலம் குர்கான் நகரின் மேட்டுக்குடி பங்களா பகுதியில் குடியிருக்கும் சவூதி அரேபிய தூதரக அதிகாரியிடம் கடந்த ஜூலையில் பாலியல் அடிமைகளாக விற்கப்பட்டுள்ளனர். அன்றிலிருந்து தூதரக அதிகாரியும் அவனது 10-க்கும் மேற்பட்ட கூட்டாளிகளும் அன்றாடம் அப்பெண்கள் மீது கும்பல் பாலியல் வன்முறையை ஏவி கொடூரமாக வதைத்துள்ளனர். இக்கொடுமையை அப்பெண்கள் எதிர்த்தபோது கத்தியால் குத்தப்பட்டு மிருகத்தனமாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

இந்த தூதரக அதிகாரி பங்களாவுக்குக் கொண்டுவரப்பட்ட நேபாளத்தைச் சேர்ந்த வேறொரு பாலியல் அடிமைப் பெண் எப்படியோ தப்பித்து, நேபாளத்தைச் சேர்ந்த ஒரு தன்னார்வக் குழுவினரிடம் இது பற்றி தெரிவித்தார். அக்குழுவினர் டெல்லியிலுள்ள நேபாள தூதரகத்தில் முறையிட்டு, இந்திய வெளியுறவுத் தூதரகத்தின் உதவியுடன் குர்கான் போலீசார் மூலம் அப்பெண்கள் மீட்கப்பட்டுள்ளனர். அப்பெண்களின் வாக்குமூலத்தோடு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, குர்கான் போலீசாரால் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ள போதிலும், முதன்மைக் குற்றவாளியான தூதரக அதிகாரியைக் காணவில்லை என்றும் தப்பிச் சென்றுவிட்டதாகவும் கூறுகிறது போலீசு.

இக்குற்றச்சாட்டுகளை ஆதாரமில்லை என்று மறுத்துள்ள சவூதி அரேபிய தூதரகமோ, டெல்லி போலீசார் வியன்னா தீர்மான விதிகளை மீறித் தூதரக அதிகாரி குடியிருப்பில் அத்துமீறி நுழைந்துவிட்டதாகவும், அத்தூதரக அதிகாரியைப் பாலியல் குற்றவாளியாக இழிவுபடுத்திவிட்டதாகவும் கண்டனம் தெரிவித்துள்ளது. இந்நிலையில், இந்த வழக்கில் சவூதி அரேபிய அரசும் அத்தூதரக அதிகாரியும் ஒத்துழைத்தால்தான் விசாரணையைக்கூட நடத்த முடியும். அக்காமவெறி தூதரக அதிகாரியை வெளியேற்றுவதாக இந்திய அரசு அறிவிக்கலாமே தவிர, அதற்கு மேல் ஒன்றும் செய்யவும் முடியாது.

இந்த கொடுஞ்செயல் நாட்டு மக்களின் நினைவுகளிலிருந்து மறைவதற்குள்ளாகவே, தமிழகத்தின் வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 56 வயதான ஏழைப் பெண்ணாகிய கஸ்தூரி முனிரத்னம், வீட்டுப்பணியாளராக சவூதிஅரேபியாவின் ரியாத் நகரில் வேலை செய்துவந்த போது, அவரது எஜமானி அவர் மீது கொடூரத் தாக்குதல் நடத்தி, அவரது வலது கையை வெட்டியெறிந்துள்ள கொடுஞ்செயல் நடந்துள்ளது.

மாதம் ஏறத்தாழ ரூ. 10,000 சம்பளம் தருவதாகக் கூறி அதைக் கொடுக்காததோடு, பல நாட்களாகப் பட்டினி போடப்பட்டு கஸ்தூரி சித்திரவதை செய்யப்பட்டுள்ளார். இதை அவர் உள்ளூர் அதிகாரிகளிடம் புகாராகத் தெரிவித்ததால், வீட்டின் எஜமானி ஆத்திரமடைந்து கொலைவெறியுடன் அவரை அடித்து உதைத்து கையை வெட்டியுள்ளார். கை வெட்டப்பட்டு துடிதுடித்து கீழே விழுந்த அவருக்கு முதுகு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. கஸ்தூரியை சவூதி அரேபியாவுக்கு அழைத்துச் சென்ற ஏஜெண்ட் மூலமாகத்தான் இக்கொடுஞ்செயல், கடந்த அக்டோபர் 9-ஆம் தேதியன்று கஸ்தூரியின்

‘காமவெறியர்களைக் கைது செய், தூதரக அதிகாரி என்பதற்காக குற்றவாளியைத் தப்பவிடாதே!’’ என்ற முழக்கத்துடன் டெல்லியிலுள்ள சவூதி அரேபிய தூதரகத்தின் முன்பாக நடந்த ஆர்ப்பாட்டம்.



குடும்பத்தாருக்கும் பின்னர் உலகுக்கும் தெரிய வந்துள்ளது.


சவூதி அரேபியாவில் எஜமானியால் கை துண்டிக்கப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த வீட்டுப் பணியாளர் கஸ்தூரி.

தன் உடலில் ஏற்பட்டுள்ள கொடுங்காயங்கள் அனைத்தும் தான் பணியாற்றிய வீட்டின் எஜமானியால் ஏற்படுத்தப்பட்டது என்று கஸ்தூரி தெளிவாகக் கூறியுள்ளார். ஆனால், கஸ்தூரிக்கு மனநிலை சரியில்லை என்றும், அந்த வீட்டின் மூன்றாவது மாடியிலிருந்து குதித்து தப்பிக்க முயற்சித்தபோது கீழே விழுந்து அவருக்குக் கை எலும்பு முறிந்ததாகவும், அவரது கை செயலிழந்து போனதால் மருத்துவர்களின் ஆலோசனைப்படி அவரது கை துண்டிக்கப்பட்டதாகவும், இச்சம்பவம் பற்றி கஸ்தூரியின் எஜமானியை விசாரித்து வருவதாகவும் ஒரு கட்டுக்கதையை சவூதி போலீசார் கூறுகின்றனர்.

இத்தனைக்கும் பிறகும், இந்திய அரசும், வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜும் இக்கொடுஞ் செயலுக்கு கண்டனம் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு சவூதி அரேபியாவிடம் கேட்டுக் கொண்டுள்ளதைத் தவிர, வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மனித உரிமைகளைத் துச்சமாக மதிக்கும் மன்னராட்சி முறையைக் கொண்டுள்ள சவூதி அரேபியா, கடந்த செப்டம்பரில் ஐ.நா. மனித உரிமை கவுன்சிலின் சார்பில், உலக நாடுகளின் மனித உரிமைகளைத் தரமதிப்பீடு செய்வதற்கான உயர் அதிகாரிகளைத் தேர்வு செய்யும் குழுவின் தலைமைப் பொறுப்பில் அமெரிக்காவின் ஆசியோடு நியமிக்கப்பட்டிருக்கிறது. மேலும், இந்தியாவில் முதலீடு செய்யுமாறு முதலீட்டாளர்களை அழைக்க சவூதி அரேபியாவுக்குச் செல்ல பிரதமர் மோடி திட்டமிட்டுள்ள நிலையில், பாலியல் அடிமைகளாக வதைக்கப்பட்ட இரு நேபாளப் பெண்களுக்கும், வீட்டுப் பணியாளர் கஸ்தூரிக்கும் நீதி கிடைக்குமா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

இஸ்லாத்தில் எல்லாவற்றுக்கும் தீர்வு உள்ளதாகக் கூறும் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் இக்கொடுஞ் செயல்களுக்கு எதிராக வாய் திறப்பதில்லை. ஐ.எஸ். போன்ற தீவிரவாத அமைப்புகளுக்கு மட்டுமின்றி, இந்தியாவிலுள்ள முஸ்லிம் அடிப்படைவாதக் குழுக்களுக்கும் புரவலனாக சவூதி அரேபியா உள்ளபோதிலும், இதற்கெதிராக இந்துவெறியர்கள் வாய் திறப்பதுமில்லை. அமெரிக்காவின் கூட்டாளியாகவும் பணக்கார முஸ்லிம் நாடாகவும் இருப்பதாலும், இந்தியாவுடன் நெருக்கமான வர்த்தக உறவுகளைக் கொண்டுள்ளதாலும் அந்நாட்டுடன் இந்திய அரசு இணக்கமாகவே நடந்து கொள்கிறது. நேபாளப் பெண்கள் மற்றும் கஸ்தூரி விவகாரங்களில் குற்றவாளிகளைத் தண்டிக்கவோ சவூதி அரேபியாவுடனான தூதரக உறவுகளைத் துண்டிக்கவோ முன்வராமல் பாதிக்கப்பட்டவர்கள் ஏழைகள் என்பதாலேயே இந்த விவகாரம் நீர்த்துப் போகச் செய்யப்படுகிறது. அதேசமயம், மேட்டுக்குடி இந்தியர்கள் என்றால், இந்திய அரசின் அணுகுமுறை வேறாக இருக்கிறது.

நியூயார்க்கிலுள்ள இந்தியத் தூதரகத்தில் துணைத் தூதராகப் பணியாற்றிய தேவயானி கோப்ரகடே, கடந்த டிசம்பர் 2013-இல் மோசடி ஆவணங்களைக் கொடுத்து சங்கீதா என்ற வீட்டுப் பணியாளருக்கு ''விசா'' பெற்று அமெரிக்காவுக்கு அழைத்துச் சென்று, உரிய சம்பளம் கூட கொடுக்காமல் கொத்தடிமையாக நடத்தி கொடுமைப்படுத்திய விவகாரம் அம்பலமாகி அமெரிக்க போலீசாரால் கைது செய்யப்பட்டார். மேட்டுக்குடி அதிகாரியான அவர் கைது செய்யப்பட்டதை இந்திய நாட்டையே அவமதிக்கும் செயல் என்று கூச்சல் போட்ட இந்திய அரசு, தூதரக அதிகாரிகள் பற்றிய வியன்னா மாநாட்டு விதிகளைக் காட்டித்தான் இந்த வழக்குகளைக் கைவிடச் செய்து, தேவயானியை மீட்டு வந்தது. இதே வழியில், இவ்வாண்டின் தொடக்கத்தில் நியூசிலாந்திலுள்ள இந்திய தூதரக அதிகாரி ரவி தாப்பரும் அவரது மனைவியும் வீட்டுப் பணியாளரைச் சித்திரவதை செய்த வழக்கை கைவிடச் செய்தது.

தேவயானி போன்ற மேட்டுக்குடியினர் குற்றமிழைத்தாலும் இந்திய அரசால் தப்புவிக்கப்படுகின்றனர். ஆனால் கஸ்தூரி போன்ற ஏழைகள் கொத்தடிமைகளாக உழன்றாலும், எஜமானர்களால் கொடூரமாகத் தாக்கப்பட்டாலும் அதற்கெதிராக எந்த நடவடிக்கையும் எடுக்க இந்திய அரசு முன்வருவதில்லை. உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு, மக்களுக்கான அரசு, அனைவருக்குமான அரசு என்றெல்லாம் வாய்கிழியப் பேசினாலும், இந்திய அரசு எந்த வர்க்கத்தின் நலன்களுக்காகச் செயல்படுகிறது என்பதை இந்த விவகாரங்கள் மீண்டும் நிரூபித்துக் காட்டுகின்றன.

● தனபால்



## மூணாறு:

# கொத்தடிமைத்தனத்துக்கு எதிராக பெண் தொழிலாளர்களின் போர்க்கோலம்!

கேரள மாநிலத்தில் மூணாறில் அமைந்துள்ள கண்ணன் தேவன் தேயிலை தோட்ட பெண் தொழிலாளர்கள் நடத்திய வேலைநிறுத்தப் போராட்டம் அவர்களின் போனஸ் கோரிக்கையைச் சாதித்துக் கொடுத்திருப்பதோடு, அம்மாநிலத்தில் உள்ள பிற (கார்ப்பரேட்) எஸ்டேட் நிறுவனங்களும் தமது தொழிலாளர்களுக்கு 20 சதவீதத்துக்குக் குறையாமல் போனஸ் அளிக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தி விட்டது. மேலும், புதிய கூலி உயர்வு ஒப்பந்தம் போடுவதற்குச் சம்மதிக்காமல், கடந்த ஒன்பது மாதங்களாக அப்பிரச்சினையை இழுத்தடித்து வந்த எஸ்டேட் நிறுவனங்களை உடனடியாக கூலி உயர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்துப்போடும்படி அடிபணியச் செய்துவிட்டது.

இரண்டு குறிப்பிடத்தக்க வெற்றிகளை ஈட்டித் தந்துள்ள இப்போராட்டம் தேயிலை தோட்ட முதலாளிகளை எந்தளவிற்கு அச்சுறுத்தியதோ, அதற்குச் சற்றும் குறையாத அளவில் போலி கம்யூனிஸ்டு கட்சித் தலைமையையும், குறிப்பாக மார்க்சிஸ்டுகளை அச்சுறுத்தியிருக்கிறது. மார்க்சிஸ்டு கட்சியின் ஆங்கில வார இதழான ''பீப்பிள்ஸ் டெமாக்ரசி''யில் தொழிலாளி வர்க்கத்தின் கோரிக்கைகளுக்காக சி.ஐ.டி.யு. சமீபத்தில் நடத்திய போராட்டங்களைப் பட்டியலிட்டு வெளியிடப்பட்டுள்ள விளக்கக் கட்டுரையே, அவர்கள் மூணாறில் எந்தளவிற்குத் தனிமைப்பட்டுப் போயிருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

கண்ணன் தேவன் தேயிலைத் தோட்ட பெண் தொழிலாளர்கள் அசாத்தியமான கோரிக்கை எதையும் முன்வைக்கவில்லை. ''20 சதவீத போனஸ், 500 ரூபாய் கூலி உயர்வு, குடியிருப்பு உள்ளிட்ட அடிப்படையான வசதிகள்'' - இந்த மூன்றும்தான் அப்பெண் தொழிலாளர்கள் முன்வைத்த கோரிக்கைகள். இவற்றுள் முதன்மையானது போனஸ் கோரிக்கை. தொழிலாளி வர்க்கத்தின் இந்த மிகச் சாதாரணமான கோரிக்கையைக்கூட ஏ.ஐ.டி.யு.சி., சி.ஐ.டி.யு., ஐ.என்.டி.யு.சி. தொழிற்சங்கங்களால் பெற்றுத் தர முடியாமல் போனதற்கு, இத்தொழிற்சங்கங்களின் சமரசம், கைக்கூலித்தனம், துரோகத்தைத் தவிர வேறு காரணங்கள் எதுவுமே கிடையாது. காங்கிரசின் ஐ.என்.டி.யு.சி. மட்டுமல்ல, போலி கம்யூனிஸ்டு தொழிற்சங்கத் தலைவர்களும் நிர்வாகத்தின் கைக்கூலிகளாக மாறி, ''சுகஜீவி

களாக'' வாழ்ந்துவருவது இப்போராட்டத்தின் ஊடாக அம்பலமாகியிருக்கிறது. ஒருபுறம் தொழிற்சங்க சுல்தான்களின் இந்த துரோகமும், மறுபுறம் சகிக்க முடியாத சுரண்டலும், கொத்தடிமைத்தனமும்தான் பெண் தொழிலாளர்களைத் தமது விதியைத் தாமே நிர்ணயித்துக் கொள்ளும் போராட்டத்தை நடத்தத் தூண்டியது.

**உடலை ஊனமாக்கும் உழைப்புச் சுரண்டல்**

டாடா குழுமத்தால் நிர்வகிக்கப்படும் கண்ணன் தேவன் தேயிலை எஸ்டேட், கேரளாவின் தேவிகுளம் வட்டத்திலுள்ள கண்ணன் தேவன் குன்றுப் பகுதியில் 1,36,600 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. 92 டிவிஷன்களாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்த எஸ்டேட்டில் வேலைபார்க்கும் 14,000 தொழிலாளர்களுள் பெரும்பகுதியினர் பெண்கள். தேயிலைக் கொழுந்துகளைப் பறிப்பதுதான் இவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் வேலை. இதற்கு இதுவரை கொடுக்கப்பட்டு வந்த கூலி, படிகளையும் சேர்த்து 232 ரூபாய். படிகள் எதுவும் பெறாத நகர்ப்புறக் கூலித் தொழிலாளர்கள்கூட இதனைவிட இன்னொரு மடங்கு அதிகமாகக் கூலி பெறும் உண்மையோடு ஒப்பிட்டுப் பார்த்தால், சர்க்கரை அள்ளிப் போட்ட தேநீர்கூட இனி கசக்கவே செய்யும்.

இந்த 232 ரூபாய் கூலியைப் பெறுவதும்கூட சாதாரண விசயமல்ல. இதற்கு 21 கிலோ தேயிலையைக் கண்டிப்பாகப் பறிக்க வேண்டும். அதற்குக் குறைந்தால் அடிப்படை கூலியே கிடைக்காது. காலை 8 மணிக்குள் டிவிஷனுக்கு வந்துவிட வேண்டும். டிவிஷனில் வருகைப் பதிவு எடுக்கும்பொழுது ஆள் இல்லாமல் சற்று தாமதித்து வந்தால்கூட அன்று வேலையும் கிடையாது, கூலியும் கிடையாது. இவர்களுக்குச் சம்பளத்துடன் கூடிய விடுப்பும் கிடையாது, வேலைக்கு நடுவே ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் ''பர்மிஷன்'' கேட்கவும் முடியாது. அப்படிக் கேட்டுப் போனால், அதற்கேற்ப அடிப்படைக் கூலியில் வெட்டு விழும்.

இந்த நிபந்தனைகளைவிடக் கொடியதும், அபாயமும் நிறைந்தது தேயிலைப் பறிப்பது. தேயிலை பறிக்கச் செல்லும் முன் மேல்கட்டு எனும்படியான ஒரு உடுப்பை இடைக்கு மேலாக இறுக்கமாகக் கட்டிச் செல்ல வேண்டும். இந்த உடுப்பைக் கட்டிய பிறகு அதனை நினைத்த நேரத்துக்கு அவிழ்த்துவிட முடியாது. இந்த மேல்கட்டு உடுப்பே பெண் தொழிலாளர்களுக்கு மாதவிடாய் பிரச்சினையை ஏற்படுத்துவதாகக் குறிப்பிடுகிறார், போராட்டத்தில் கலந்து கொண்ட சுந்தரவள்ளி. இந்த மாதவிடாய் பிரச்சினையால் பெண் தொழிலாளர்கள் பலருக்கு கர்ப்பப்பை அகற்றப்பட்டுவிட்ட அவலத்தையும் சுட்டிக் காட்டுகிறார், அவர். இது கண்ணுக்குத் தெரியாத முடமாகிப் போன நிலை. ஆனால், அதற்காக எந்தவொரு எஸ்டேட் நிர்வாகமும் தண்டிக்கப்பட்டதுமில்லை; கர்ப்பப்பையைப் பறிகொடுத்த பெண்களுக்கு நட்ட ஈடு அளித்ததுமில்லை.

வெறும் 232 ரூபாயைக் கொண்டு குடும்பம் நடத்து முடியாது என்பதால், ஒவ்வொரு பெண் தொழிலாளியும் 21 கிலோவிற்கு மேலேயும் தேயிலையைப் பறிக்க வேண்டிய கட்டாயத்தில் நிறுத்தப்பட்டுள்ளனர். இன்னொருபுறமோ, கூடுதலாகப் பறிக்கப்படும் ஒவ்வொரு கிலோ தேயிலைக்கும் கங்காணி தொடங்கி எஸ்டேட் மேலாளர் உள்ளிட்ட அதிகார கும்பலுக்கு ''இன்சென்டிவ்'' வழங்கப்படுவதால், கங்காணிகள் பெண் தொழிலாளர்களைச் சிறுநீர் கழிப்பதற்குக்கூட அனுமதிப்பதில்லை; தேநீர் அருந்தும்போதுகூட இன்னொரு கை தேயிலையைப் பறித்துக் கொண்டிருக்கும்படி, அட்டைப் பூச்சிகளும் உண்ணிகளும் இரத்தத்தை உறிஞ்சும் வேளையிலும் தேயிலை பறிப்பது நின்றுவிடாதபடி அவர்கள் இயந்திரங்களைப் போல உற்பத்தி செய்து தள்ள பழக்கப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

**சம்பளம், படி.....மோசடி**

தினக்கூலி 232 ரூபாயிலிருந்து படிகளைக் கழித்துவிட்டால், ஒரு பெண் தொழிலாளியின் அடிப்படைக் கூலி 83 ரூபாய்தான். அதாவது, ஒரு கிலோ தேயிலையைப் பறிப்பதற்கு ரூ.3.95 அடிப்படைக் கூலி. ஆனால், 21 கிலோவுக்கு மேல் பறிக்கப்படும் தேயிலைக்கு இந்த அடிப்படைக்கூலிகூடத் தரப்படுவதில்லை. மாறாக, அதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கூலி கிலோ ஒன்றுக்கு வெறும் ரூ.1.50தான். அதேசமயம், 21 கிலோவிற்குக் கூடுதலாகப் பறிக்கப்படும் ஒவ்வொரு கிலோ தேயிலைக்கும் கங்காணிகளுக்கு 4 ரூபாய், நிர்வாக அலுவலர்களுக்கு 6 ரூபாய், மேலாளர்களுக்கு பத்து ரூபாய் இன்செண்டிவ் கிடைக்கும். இப்படி பாரபட்சமான, நியாயமற்ற முறையில் கூலி நிர்ண

போனஸ் கோரிக்கையை முன்னிறுத்தி பாலத்தின் வலதுபுறம் தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியபொழுது, அதனைப் புறக்கணித்து பாலத்தின் இடதுபுறம் பெண் தொழிலாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.





பல நூறு கோடி ரூபாய்களை இலாபமாக ஈட்டும் டாடா நிறுவனம் தொழிலாளர்களுக்கு அளித்திருக்கும் குடியிருப்பு: லயன் வீடுகள் எனச் சொல்லப்படும் லாயம்.

யிக்கப்பட்டிருப்பது ஒருபுறமிருக்க, இந்த அற்பக் கூலியைக்கூட அவர்கள் பெறமுடியாதபடி கங்காணிகள் செய்யும் தில்லுமுல்லுகளும், மோசடிகளும் தனியொரு கதை. குறிப்பாக, 21 கிலோவிற்கு மேல் பறிக்கப்படும் தேயிலையில் கணிசமாக கழித்துக்கட்டுவதன் மூலம், எங்களின் உழைப்பை எங்களின் கண்ணெதிரே கங்காணிகள் திருடி வருகிறார்கள் எனக் குற்றஞ்சுமத்துகிறார்கள், அப்பெண் தொழிலாளர்கள்.

இதற்கு அப்பால், அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய அற்பக் கூலியில் பிடித்தம் என்ற பெயரில் ஒரு பகற்கொள்ளையை எஸ்டேட் நிர்வாகம் நடத்தி வருகிறது. தொழிலாளர்கள் வளர்க்கும் மாடுகள் எஸ்டேட் பகுதிக்குள் மேய்வதற்கு மாதம் நூறு ரூபாய் நிர்வாகத்திற்குக் கப்பம் கட்ட வேண்டும். எஸ்டேட் நிர்வாகங்கள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை 75 கிலோ அரிசியை ரேஷன் முறையில் தொழிலாளர்களுக்கு விநியோகித்து வருகின்றன. இதற்கு ஒவ்வொரு தொழிலாளியிடமிருந்தும் மாதமொன்றுக்கு 750 ரூபாய் பிடித்தம் செய்து கொள்ளப்படுகிறது. அரிசியின் தரத்தை ஒப்பிடும்பொழுது இது அநியாயக் கொள்ளை என்கிறார்கள் தொழிலாளர்கள். மாதம் 28 நாட்கள் முதுகொடிய வேலை செய்தாலும், இந்தப் பிடித்தம், தில்லுமுல்லுகள், மோசடிகள் எல்லாம் போக மூவாயிரம் ரூபாய் முழுசாகக் கிடைத்தாலே அதிருஷ்டம்தான் என்கிறார்கள் பெண் தொழிலாளர்கள். கங்காணிகளும், நிர்வாகமும் நடத்திவரும் இந்தத் திருட்டுத்தனங்களைக்கூடத் தடுக்காமல், தொழிற்சங்கங்கள் கூட்டுக் களவாணிகளாகச் செயல்பட்டு வருகின்றன.

**நவீன கொத்தடிமைத்தனம்**

எஸ்டேட்டுகள் அவற்றின் இயல்பிலேயே ஊர்ப்பகுதியிலிருந்து துண்டிக்கப்பட்டு தனித்தும், போக்குவரத்து வசதியற்றும் இருப்பதால், எஸ்டேட்டுகளில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்குத் தேவையான குடியிருப்பு, கல்வி, மருத்துவ வசதிகள் உள்ளிட்ட அடிப்படையான வசதிகள் அனைத்தையும் நிர்வாகங்கள்தான் செய்துதர வேண்டும். ஆனால், பிரிட்டிஷ் காலனிய ஆட்சியில் தேயிலை எஸ்டேட்டுகளை உருவாக்கத் தமிழகத்திலிருந்து தாழ்த்தப்பட்ட மக்கள் கொத்தடிமைகளாக இழுத்துச் செல்லப்பட்ட காலத்தில் கட்டப்பட்ட, குதிரை லாயங்களைவிடக் கேவலமான ''லயன்''கள்தான் இன்றும் தொழிலாளர்களின் குடியிருப்புகளாக உள்ளன. கங்காணி சூபர்வைசராக மாறியிருப்பதைப் போல, லயன்களின் மேற்கூரை தென்னங்கீற்றிலிருந்து ஆஸ்பெஸ்டாக மாறியிருப்பதுதான் நடந்துள்ள ஒரே மாற்றம். எஸ்டேட் நிர்வாகம் நடத்தும் பள்ளிகளில் நான்காம் வகுப்புக்கு மேல் இலவசக் கல்வி கிடையாது என்பதால், தொழிலாளர் குழந்தைகளின் கல்வி அதற்குப் பிறகு கேள்விக்குறியாகி விடுகிறது. தொழிலாளர்களை எந்தவிதமான நோய் தாக்கினாலும், எஸ்டேட் மருத்துவமனைகளில் மூன்று நாட்களுக்கு மேல் உள்நோயாளிகளாகத் தங்கி சிகிச்சை பெறுவதற்கு அனுமதி கிடையாது.

பெண் தொழிலாளர்கள் அனைவரும் தங்கள் குழந்தைகளின் அன்றாட பாதுகாப்பு, எதிர்காலம் குறித்துதான் மிகுந்த அச்சங்கொண்டிருக்கிறார்கள். இந்தப் பணிச்சுமையும், வாழ்க்கைச் சூழலும் குழந்தைகளைக் கவனிக்க முடியாத நிலைக்குத் தள்ளியிருப்பது குறித்துதான் அவர்கள் திரும்பத் திரும்ப பேசுகிறார்கள். இதனைவிட அதிகமாகக் கூலி கிடைக்கும் வேறு வேலைக்கு மாறிப் போய்விடுவதை எஸ்டேட் நிர்வாகங்கள்கூடத் தடுக்க முடியாதுதான். அப்படி போனால், எஸ்டேட் நிர்வாகம் தந்துள்ள வீட்டைக் காலி செய்துவிட வேண்டும் என்பதால், ஆண்கள் வேறு வேலை தேடிப் போனாலும், பெண்கள் இதே, வேலையில் தொடர வேண்டிய அவலத்தில் சிக்கிக் கொண்டுள்ளனர். இது அத்தாழ்த்தப்பட்ட குடும்பங்களைத் தலைமுறை தலைமுறையாக எஸ்டேட் நிர்வா

தங்களது போராட்டத்தை இழிவுபடுத்திய சி.பி.எம். கட்சி எம்.எல்.ஏ. ராஜேந்திரனை முற்றுகையிட்ட பெண் தொழிலாளர்களிடமிருந்து அவரை மீட்டுச் செல்லும் போலீசு.



கங்களின் கொத்தடிமைகளாக இருத்தி வைப்பதை உத்தரவாதப்படுத்துகிறது.

கண்ணன் தேவன் தேயிலை எஸ்டேட் உள்ளிட்டு அனைத்து எஸ்டேட்டுகளிலும் பெண் தொழிலாளர்கள்தான் எண்ணிக்கையில் பெரும்பான்மையினர். வருடமொன்றுக்கு அத்தொழிலாளர்களின் கூலியிலிருந்து 200 ரூபாய் சந்தா பிடித்துக் கொள்ளப்படுகிறது. ஆனாலும், எந்தவொரு சங்கத்திலும் பெண் தொழிலாளர்களுக்கு முக்கியத்துவம் தரப்படுவதில்லை. குறிப்பாக, ''இந்த ஆண்டு பத்து சதவீதம் போனஸ்தான் தர முடியும் என நிர்வாகம் எடுத்த முடிவை நீங்கள் எப்படி ஒத்துக் கொள்ளலாம்?'' எனக் கேள்வி எழுப்பிய பெண் தொழிலாளர்களுக்குப் பதில் சொல்லக்கூட தொழிற்சங்கங்கள் முன்வரவில்லை. மாறாக, தங்களின் கள்ள மௌனத்தின் மூலமும், 10 சதவீத போனஸ் அறிவிப்பை எதிர்த்து தொழிலாளர்கள் நடத்தி வந்த உற்பத்திக் குறைப்பு போராட்டத்தைக் கைவிடக் கோரியதன் மூலமும், தங்களை மீறி வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கக்கூடாது என எச்சரித்ததன் மூலமும் குமுறிக் கொண்டிருந்த பெண் தொழிலாளர்களைத் தொழிற்சங்கங்கள் அவமானப்படுத்தின.

இந்த நிலைமைகள்தான் பெண் தொழிலாளர்களை, தொழிற்சங்கங்களையும், ஓட்டுக்கட்சிகளையும் புறக்கணித்து, ''பெண்கள் ஒற்றுமை'' என்ற புதிய அமைப்பின் கீழ் அணிதிரண்டு போராட்டத்தில் இறங்க வைத்தது. மூணாறு பகுதியைச் சேர்ந்த பல்வேறு தரப்பட்ட மக்கள் மட்டுமின்றி, போலீசு அதிகாரிகள்கூட இந்தப் போராட்டத்திற்கு ஆதரவாக நின்றபொழுது, தொழிலாளர்களிடமிருந்து பெறும் சந்தாவைக் கொண்டு வயிறு வளர்த்து வரும் மார்க்சிஸ்டு கட்சியின் மூணாறு பகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.ராஜேந்திரன், ''இந்தப் போராட்டத்தைத் தமிழின தீவிரவாத அமைப்புகள் பின்னிருந்து இயக்குவதாக'' வாய்க்கூசாமல் அவதூறு செய்தான். இதற்காக அவனைத் தங்களின் அருகே நெருங்கவிடாமல் துரத்தியடித்த பெண் தொழிலாளர்கள், ''சி.பி.எம். ராஜேந்திரன் மட்டுமின்றி, மூணாறு பகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.கே.மணி, சுந்தரமாணிக்கம், ஏ.ஐ.டி.யு.சி.ஐச்

# கேரளா: 'கடவுளின் தேசமா?' டாடாவின் தனிச்சொத்தா?

1,36,000 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள கண்ணன் தேவன் தேயிலை எஸ்டேட்டின் ''உண்மையான'' உரிமையாளர்கள் யார் தெரியுமா? எந்தத் தொழிலாளர்கள் 20 சதவீதம் கேட்டு ஒன்பது நாட்கள் போராடினார்களோ, எந்தத் தொழிலாளர்கள் கூலியை 500 ரூபாயாக உயர்த்தித் தருமாறு கோரி வருகிறார்களோ, அந்த 14,000 தொழிலாளர்களின் பெயரில்தான் கண்ணன் தேவன் தேயிலை எஸ்டேட் நிறுவனத்தின் 68 சதவீதப் பங்குகள் உள்ளன.

2005-க்கு முன்பு இந்த எஸ்டேட்டின் முழு உரிமையாளராக இருந்த டாடா டீ நிறுவனம், காந்திய வழியில் திடீர் தர்மகர்த்தாவாக உருவெடுத்து, 18 சதவீதப் பங்குகளை மட்டும் தன்னிடம் வைத்துக்கொண்டு, 68 சதவீதப் பங்குகளை ஒவ்வொரு தொழிலாளிக்கும் 300 பங்குகள் கிடைக்கும்படி ''உயில்'' எழுதி வைத்தது. தேயிலை உற்பத்தியைத் தொழிலாளர்கள் கவனித்துக் கொள்ள, தான் தேயிலைத் தூள் விற்பனையை மட்டும் கவனிக்கப் போவதாகக் கூறி, இந்தப் பங்கு மாற்றத்திற்கு ஒரு ''உருக்கமான'' காரணத்தையும் முன்வைத்தது, டாடா குழுமம்.

டாடாவின் இந்த பரோபகாரத்தின் பின்னே மறைந்திருப்பது அப்பட்டமான வியாபார தந்திரம். தேயிலை எஸ்டேட்டையும், தேயிலைத் தூள் விற்பனையையும் ஒரே நிறுவனத்தின் கீழ் வைத்திருப்பது இலாபத்திற்குக் கேடு என்பதால்தான், இந்தப் பாகப்பிரிவினையை ஏற்படுத்தியது, டாடா குழுமம். இந்தப் பாகப்பிரிவினையை நடத்தும் பொழுதே, கண்ணன் தேவன் தேயிலை எஸ்டேட்டில் உற்பத்தி செய்யப்படும் தேயிலைத் தூள் முழுவதையும் டாடா குழுமத்துக்குச் சொந்தமான டாடா குளோபல் பீவரெஜஸ் நிறுவனத்திடம்தான் விற்க வேண்டும் என்றும், கண்ணன் தேவன் தேயிலை பிராண்டை டாடாவைத் தவிர வேறு நிறுவனங்கள் பயன்படுத்த முடியாது என்றும் பட்டா எழுதி வாங்கிக் கொண்டது.

கண்ணன் தேவன் எஸ்டேட் நிறுவனத்திடமிருந்து ஒரு கிலோ சாதா தேயிலைத் தூளை வெறும் 80-90 ரூபாய்க்குப் பெறும் டாடா குளோபல் நிறுவனம், அதனை நானூறு ரூபாய்க்கு மேல் சந்தைப்படுத்திக் கொள்ளை இலாபம் அடித்து வருகிறது. தனது இலாபம் 5 கோடி ரூபாயாகச் சரிந்து விட்டது என்று கண்ணன் தேவன் எஸ்டேட் நிறுவனம் முதலைக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்க, அதனிடமிருந்து தேயிலைத் தூளை வாங்கி விற்கும் டாடா குளோபல் நிறுவனத்தின் இலாபம் 242 கோடி ரூபாயாக இருப்பதை இந்த நிறுவனத்தின் முன்னாள் ஊழியரான ரெஜினார்ட் அம்பலப்படுத்துகிறார். எஸ்டேட்டில் வேலை பார்க்கும் தொழிலாளர்களின் வயிற்றில் அடிப்பதற்குத்தான் இந்தப் பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை இதன் மூலம் புரிந்து கொள்ளலாம்.

டாடா குழுமம், கண்ணன் தேவன் எஸ்டேட் தொழிலாளர்களை மட்டும் ஏமாற்றவில்லை. கேரள மாநில அரசின் ஆதரவோடு, அம்மாநில மக்களையும் ஏமாற்றி வருகிறது. சமூகச் சொத்தான இந்த 1,36,000 ஏக்கர் பரப்பிற்கும் டாடா குழுமம் ஆண்டொன்று அரசுக்குச் செலுத்தும் குத்தகை பணம் வெறும் 5,000 ரூபாய்தான். இது மட்டுமின்றி, டாடா குழுமம் கேரளாவில் மட்டும் ஏறத்தாழ 10 இலட்சம் ஏக்கர் பரப்பளவுள்ள எஸ்டேட் நிலங்களை அடிமாட்டு குத்தகை கொடுத்து ஆக்கிரமித்து வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

சேர்ந்த சி.ஏ.குரியன், ஐ.என்.டி.யு.சி.ஐச் சேர்ந்த ஜி.முனியாண்டி உள்ளிட்டு கண்ணன் தேவன் எஸ்டேட் நிர்வாகத்திடமிருந்து பணப்பெட்டிகளை இலஞ்சமாகப் பெற்ற 150 தொழிற்சங்கத் தலைவர்களின் பட்டியலை வெளியிட்டு'' தொழிற்சங்கங்களின் துரோகத்தைச் சந்திசிரிக்க வைத்தனர். எஸ்டேட் நிர்வாகத்தின் அச்சுறுத்தல், தொழிற்சங்கங்களின் புறக்கணிப்பு, அவதூறு ஆகியவற்றுக்கு இடையேயும், போராட்டத்தை உறுதியோடும், பொதுமக்களின் ஆதரவோடும் நடத்தி, தங்களின் குறைந்தபட்ச கோரிக்கையைச் சாதித்திருக்கிறது, பெண்கள் ஒற்றுமை.



“கங்காணிகள் பெண் தொழிலாளர்களைச் சிறுநீர் கழிப்பதற்குக்கூட அனுமதிப்பதில்லை; தேநீர் அருந்தும் போதுகூட இன்னொரு கை தேயிலையைப் பறித்துக்கொண்டிருக்கும்படி, அட்டைப்பூச்சிகளும் உண்ணிகளும் இரத்தத்தை உறிஞ்சும் வேளையிலும் தேயிலை பறிப்பது நின்றுவிடாதபடி அவர்கள் இயந்திரங்களைப் போல உற்பத்தி செய்து தள்ள பழக்கப்படுத்தப் பட்டிருக்கிறார்கள்.”

### நெருக்கடி என்ற ஒப்பாரி

கேரளாவின் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் தங்களது மாதாந்திரக் கூலி 500 ரூபாயாக உயர்த்தப்பட வேண்டும் எனக் கோரி வந்தார்கள். ஆனால், இது தொடர்பாக நடத்தப்பட்ட முத்தரப்பு பேச்சுவார்த்தையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு அதிகபட்சமாக 381 ரூபாய் தான் கூலியாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. கண்ணன் தேவன் எஸ்டேட் நிர்வாகமும் தனது தொழிலாளர்களுக்கு 20 சதவீதத்தையும் முழுமையான போனஸாக அளிக்க ஒப்புக் கொள்ளவில்லை. அந்த 20 சதவீதத்தில் 8.33 சதவீதத்தை போனசாகவும், மீதிமுள்ள 11.67 சதவீதத்தைக் கருணைத் தொகையாகவும் அளிப்பதாக உள்குத்து வேலை நடத்தியிருக்கிறது. இவ்வாறு தொழிலாளர்களின் கோரிக்கையை முழுமையாக ஒப்புக்கொள்ள மறுத்துள்ள நிர்வாகங்கள், தேயிலை வணிகம் நெருக்கடியில் சிக்கியுள்ள வேளையில் கட்டுப்படியாகாத கூலி உயர்வும், போனசும் அறிவிக்கப்பட்டிருப்பதாக பிலாக்கணம் பாடி வருகின்றன.

2013-ஆம் ஆண்டில் 19 கோடியாக இருந்த தனது இலாபம் 2014-ஆம் ஆண்டில் ஐந்து கோடியாகச் சரிந்துவிட்டதால்தான் போனஸை 10 சதவீதமாகக் குறைத்து அறிவித்திருப்பதாக விளக்கம் கொடுத்திருக்கிறது, கண்ணன் தேவன் எஸ்டேட் நிர்வாகம். இது முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க முயலும் மோசடி என்பதே உண்மை (பார்க்க பெட்டிச் செய்தி). இதுவொருபுறமிருக்க, தேயிலையின் விலை 12 சதவீதம் மட்டுமே வீழ்ச்சியடைந்திருக்கும்பொழுது, இலாபம் எழுபது சதவீதம் அளவிற்கு எப்படி வீழ்ச்சியடைய முடியும் என்ற கேள்விக்கும், கொழுந்து தேயிலை விலை வீழ்ச்சியடைந்த பிறகும், சந்தையில் தேயிலைத் தூளின் விலை கொஞ்சங்கூட இறங்காமல் இருப்பதன் மர்மத்திற்கும் எஸ்டேட் நிர்வாகங்கள் விடையளிக்கப் போவதில்லை.

நெருக்கடி அல்லது நட்டம் என்ற மோசடியான வாதத்தை முன்வைத்துதான் கூலியை உயர்த்தாமலும், உரிய போனஸை அளிக்காமலும் தொழிலாளி வர்க்கத்தை ஏமாற்றி வருகிறது, முதலாளித்துவ வர்க்கம். தொழிலாளி வர்க்கத்தின் கொடுபடாத கூலிதான் போனசாக வழங்கப்படுகிறது என்ற நியாயத்தை முதலாளிகள் ஏற்றுக் கொள்வதேயில்லை. மாறாக, போனஸைத் தாங்கள் கருணையுடன் அளிக்கும் பிச்சையாகவும், அதை மனம்போன போக்கில் அறிவிக்கும் உரிமை தங்களுக்கு இருப்பதாகவும் கருதி நடந்துவருகிறது. அபரிதமான இலாபத்தை அப்படியே சுருட்டிக் கொள்ளும் முதலாளிகள், இலாபம் சற்று வீழ்ச்சியடையும் பொழுது அதன் சுமையைத் தொழிலாளிகளின் முதுகில் ஏற்றித் தப்பித்துக் கொள்கிறார்கள்.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு அதிகபட்சமாக 69 ரூபாய் கூலி உயர்வு அளிக்க முன்வந்துள்ள தோட்ட நிறுவனங்களுக்கு மின்சார மானியம் வழங்கவும்; ஒரு ஹெக்டேர் பரப்புள்ள தோட்டப் பயிர்கள் மீது விதிக்கப்படும் வரியை எழுநூறிலிருந்து ஐநூறு ரூபாயாகக் குறைக்கவும்; விவசாய வருமான வரியைக் குறைக்கவும்; எஸ்டேட் நிறுவனங்கள் நடத்திவரும் பள்ளிகளில் போதிய ஆசிரியர்களை நியமிப்பதற்காக ஒரு மாணவனுக்கு பத்தாயிரம் ரூபாய் என்ற விகிதத்தில் நிதி ஒதுக்கவும்; தொழிலாளர் குடியிருப்புகளை மேம்படுத்த 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கவும் கேரள அரசு முன்வந்திருக்கிறது. இதன் மூலம் நெருக்கடியில் இருப்பதாகக் கூறும் கார்ப்பரேட் எஸ்டேட் நிறுவனங்களை மக்களின் வரிப் பணத்திலிருந்து ‘‘பெயில் அவுட்'' செய்திருக்கிறது, கேரள மாநில காங்கிரசு அரசு. உண்மையில் போனஸ் கிடைத்திருப்பது தோட்டத் தொழிலாளர்களுக்கா, இல்லை முதலாளிகளுக்கா?

● ரஹீம்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...

Raja Sivakkumar from Chennai : வெளிய வந்த பிறகும் பாடுங்க தோழரே, நாங்க சப்போர்ட் பண்றோம், வாட்ஸ்அப், நெட்ல எதில வேணாலும் போடுங்க... மூடாமல் ஓய்வதில்லை...

Bala G: சாராய அதிபர்களுக்காகவும் பெப்ஸி போன்ற பன்னாட்டு முதலாளி களுக்காகவும் ஆட்சி நடத்துகிற ஜெயா வின் போலீஸ் டாஸ்மாக்கை மூடு பாடலுக் காக புரட்சிகர பாடகர் தோழர் கோவனை கைது செய்திருக்கிறது..

நா.முத்துக்குமார் தமிழன்: கொட நாட்டு கோமாளவள்ளியின் கொழுப் பெடுத்த பாசிசம். பாடலை பாடியதற்காக தேசத்துரோக வழக்கில் கைதா? இதுதான் பாசிசம்.

தமிழச்சி (பிரான்ஸ்) : தமிழ்நாட்டை ஆளும் ஜெயலலிதாவுக்கு, ‘‘கலை என்றால் சினிமாவில் ஆடும் டூயட்டாக இருந்தால் மட்டும் போதும்’’ என்று நினைக்கிறார். அவருடைய வயிற்றுப் பிழைப்புக்கு வேண்டுமானால் ‘‘டூயட்’’ ஆட்டங்கள் கலையாக இருக்கலாம். ஆனால் அது மக்களுக்குச் சோறு போடாது. மக்களுக்காக பேசப்படும் கலைகளும் இலக்கியங்களும் மக்கள் நலன் சார்ந்ததாக இருக்க வேண்டும். அதைத்தான் புரட்சிப் பாடகரான தோழர் கோவன் செய்திருக்கிறார். எனவே, ‘‘ஜெயலலிதாவே டாஸ் மார்க்கை மூடு. தோழர் கோவனை வெளியே விடு.’’

ஸ்டாலின் பெலிக்ஸ்: ‘‘மூடு டாஸ்மாக்கை மூடு’’ போன்ற சமூக பிழையான பாடல்களை பாடாமல்... ‘‘டாடி மம்மி வீட்டில் இல்லை..’’, ‘‘நேத்துராத்திரி எம்மா...’’, ‘‘கட்டி புடி கட்டி புடி டா... ’’ போன்ற கருத்தாழம் மிக்க பாடல்களை பொதுமக்கள் பாடும்படி சமூகம் பணிவன் புடன் கேட்டுக்கொள்கிறது.

Feroz Babu: எவண்டி உன்ன பெத்தான், அவன் கைல கிடச்சா செத்தான்; வை திஸ் கொலவெறி என பெண்களை இழிவு படுத்தி பாடி னால் மரியாதை. ஓபன் த டாஸ்மாக் எனும் பாட லுடன் வரும் படத்துக்கு வரி விலக்கு (இத்தனைக்கும் அதுல சின்னதா குடி குடியை கெடுக்கும் எனும் வாசகத் துடன்). ஆனால் மூடு டாஸ் மாக்கை என பாடினால் சட்ட விரோத கைது. என்னாங் கடா உங்க ஜனநாயகம் டேய்ய்ய்!

வே.மதிமாறன் : அ.தி.மு.க. மேடைகளில் ரெக்காட் டான்ஸ் என்ற பெயரிலும் வசனம் என்ற பெயரிலும்... நின்னு பாக்கவும் முடி யாது கேட்கவும் முடி யாது அவ்வளவு ஆபாச மாகக் கீழ்தரமாகத் தமிழகம் முழுக்க எல்லா மேடைகளிலும் முழங்கிகிட்டே இருக்கிறார்கள் அ.தி. மு.க. காரர்கள். இது காவல்துறையின் பாதுகாப்போடு நடக்கிறது.



கோவன் பயன்படுத்திய ஊத்திக் கொடுத்த வார்த்தைக்கே இவ்வளவு பெரிய தண்டனை என்றால்.. அதிமுக மேடையில் பெண்களை இவ்வளவு வக்கிரமா, கேவலமா பேசுகிற அவர் களுக்குத் தூக்கு தண்டனையே கொடுக்கனும்.

தோழர் தியாகு: ‘உல்லாசம்’ என்று பாடி யதாக கோவன் மீது குற்றம் சாட்டுகிறார் கள். Pleasant stay என்பது தங்கும் விடுதி யின் பெயர்! Pleasant என்றால் உல்லாசம் என்றும் பொருள் படும்! ‘‘இங்கே வாருங்கள் உல்லாசம் அனுபவிக்கலாம்’’ என்று அர்த்தம் செய்து கொள்ள முடியுமா ?



Vijii Ambedkar : முதுகு வளைந்தவனெல்லாம் மந்திரினு வெள்ளையும் சொல்லையுமா சுத்தும்போது, நிமிர்ந்து நிக்கிற மண்ணின் மைந்தன் சிறைக்கு தான் போகனும்...

Sundararajan Lawyer Sundar: மதுபானம் ஆட்சிக்கும் , அதிகாரத்துக்கும் நல்லது. மது விலக்கு கோரிக்கை ஆட்சிக்கும், அதி காரத்துக்கும் எதிரானது. ஆட்சியும், அதிகாரமும்தான் தேசம் என்பதால் மதுவிலக்கு கோரிக்கை தேசத்திற்கு எதிரானது.

மனுஷ்யபுத்திரன்: இன்று கோவனுக்கு நேர்ந்தது தமிழக அரசை எதிர்க்கும் யாருக்கு வேண்டுமானாலும் நடக்கலாம். ஜனநாய உரிமைகளைப் பாது காக்க கோவனின் பக்கம் நிற்போம். மாற்று கருத்துக்களின் குரல்வளையை நெரிக் கும் கரங்களுக்கு எதிராக நம் கரங்களை உயர்த்துவோம். டாஸ்மாக்கை எதிர்ப் பது தேச துரோகம் என்றால் நாம் தேச துரோகிகளாக இருப்பதைத்தவிர வேறு வழியில்லை.



Balan Guru: ‘‘மூடு டாஸ்மாக்கை மூடு’’ என்ற பாடலை சில ஆயிரம் மக் களுக்கு மட்டும் சென்றடைந்த பாடலை லட்சக்கணக்காகன மக்களுக்குக் கொண்டு சென்ற அம்மா ஆட்சியை எப்படி பாராட்டுவது என்றே தெரிய வில்லை.

Sumi B: பேச்சுரிமை எழுத்துரிமை இருக்கிற ஜனநாயக நாட்டில் ‘பாட்டுரிமை’ இல்லையா.....!!! ‘அரெஸ்ட்’ உரிமைக்கும், கொடநாடு ‘ரெஸ்ட்’ உரிமைக்கும் முடிவு கட்ட ‘பாடு அஞ்சாதே பாடு’...!!!! தமிழ்நாடு இல்லடா, டாஸ்மாக் நாடுடா....... இங்க குடி இருக்கறவன் எலலாம் ‘குடி மகன்’ இல்லடா...... குடிக்கறவன் தாண்டா தேசதுரோகம் செய்யாத உண்மை யான ‘குடிமகன்’.


ஆளூர் ஷானவாஸ்: கோவனை சிறை வைக்கிறீர்கள். கோவனின் புரட்சிப் பாடல்களை என்ன செய்வீர்கள்? அது என்னையும் கடந்து, என் நான்கு வயது மகன் வரை ஊடுருவிச் செல்கிறதே! அதை எப்படித் தடுப்பீர்கள்?

தொகுப்பு: இளங்கதிர்

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/15-17. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/15-17.

## "மூடு டாஸ்மாக்கை" என்பது தேசத்துரோகமா?

# ம.க.இ.க. பாடகர் கோவனை விடுதலை செய்!


சென்னையில்...


சென்னையில்...


விழுப்புரத்தில்...



மதுரையில்...


திருச்சியில்...